# முளைகள்

சாந்தன்



[illegible]

[illegible]

[illegible]
'82.02.20

# முளைகள்

– சிறுகதைகள் –

**சாந்தன்**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41- பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை—600098.

முதல்பதிப்பு: பிப்ரவரி, 1982
உரிமை பதிவு

(c) Santhan, Sri Lanka

**விலை ரூ. 5.00**

அச்சிட்டோர்:

நவஜோதி அச்சகம், சென்னை- 600002

# பதிப்புரை

ஈழத்துப் படைப்பாளிகளில் முன்னணியில் இருப்போரில் ஒருவர் இந்நூலாசிரியர் ஐயாத்துரை சாந்தன்.

1975-ல் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர் சாந்தன்.

சாந்தனின், "முளைகள்" எனும் இச் சிறுகதைத் தொகுப்பில் 12 கதைகள் உள்ளன.

ஆசிரியர் பலவண்ணக் காட்சிக் கருவி போன்று தம் பாத்திரப் படைப்புகளின் நிகழ்வுகளையும், அவற்றைச் சார்ந்த மனப் பதிவுகளையும் புதிய யுக்தியாக இக்கதைகளில் படைத்துள்ளார்.

இக்கதைகளில் ஒவ்வொன்றிலும் அவர் ஈழத்துச் சமுதாயத்தின் சமூக உணர்வுகளை ஏதேனும் ஒரு வகையில் சித்திரித்துள்ளார்.

இந்நூலுக்குக் டாக்டர் க. கைலாசபதி அவர்கள் சிறப்பான அணிந்துரை வழங்கியுள்ளார்.

இந்நூலைத் தமிழக வாசகர்களுக்கு அறிமுகப் படுத்துவதில் பெருமிதம் கொள்கிறோம்.

-பதிப்பகத்தார்.

# பொருளடக்கம்

| | |
|---|---|
| அணிந்துரை | 5 |
| முளைகள் | 13 |
| ஆறுதல் | 25 |
| வேகம் | 29 |
| இடையில் ஒரு இருபது வருஷம் | 33 |
| நிரூபணம் | 39 |
| தொடர்ச்சி | 43 |
| பழி | 54 |
| புதிய தரிசனங்கள் | 57 |
| விலகிப் போகிறவன் | 61 |
| குமிழிகள் | 65 |
| பூகோளம் | 77 |
| மனிதர்களும் மனிதர்களும் | 81 |

# அணிந்துரை

கடந்த கால் நூற்ருண்டுக் காலத்தில் இலக்கிய விமர்சகனுகவும் பத்திரிகையாசிரியனுகவும் பல்கலைக்கழக ஆசிரியனுகவும் இயங்கிவந்த முறைமையில் பல எழுத்தாளர் களைக் கண்டுணரவும் அவர்களுக்கு ஊக்கமளிக்கவும் அவர் களின் நூல்களுக்குக் கருத்துரைகள் வழங்கவும் அவ்வப் பொழுது எனக்கு வாய்ப்பு இருந்து வந்திருக்கிறது. ஆற்றல் மிக்க எழுத்தாளரின் ஆக்கங்களுக்கு முன்னுரை எழுதுகை யில் மனநிறைவும் மகிழ்ச்சியும் தோன்றுவது இயல்பே.

ஏறத்தாழ ஐம்பதாண்டுக்கால வரலாற்றினையுடைய ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சிக் கிரமத்தையும் செல்நெறிகளையும் ஈழத்து நவீன இலக்கியத்தில் ஆர்வமும் அக்கறையும் உள்ளவர்கள் அறிவர். கல்லூரிகளில் உயர் வகுப்புகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தமிழிலக்கியத்தை ஒரு பாடமாகப் பயிலும் மாணக்கர் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியை விரிவாகவும் விளக்கமாகவும் அறிந்திருக் கின்றனர். இந்நிலையில் சாந்தன் வெளியிடும் நான்காவது சிறுகதைத் தொகுதிக்குரிய பின்னணியை விரித்துரைக்க வேண்டிய அவசியமில்லை.

1960களில் எழுதத் துவங்கி எழுபதுகளில் எழுத் துலகின் கவனத்தைத் தன்பால் ஈர்த்துக்கொண்டவர்களில் ஒருவர் சாந்தன். கடந்த பத்தாண்டுக்காலத்தில் இலங்கை யிலும் தமிழ்நாட்டிலும் அறியப்பட்ட எழுத்தாளராக விளங்கு

கிறார். ஐம்பதுகளின் பிற்பகுதியில் இலங்கையில் ஊற்றெடுத்துப் பொங்கிப் பிரவகித்த தேசிய - முற்போக்கு- ஜனநாயக வெள்ளம் நமது இலக்கியப் பரப்பிற் பாய்ந்து அதனை வளப்படுத்தியபின் செழித்து வளர்ந்த செடிகளில் ஒன்றாக அவரைக் குறிப்பிடுதல் தவறாகாது,

ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் கலை இலக்கிய உலகிலே தேசிய-முற்போக்கு-ஜனநாயகக்குரல் தன்முனைப்புடனும் வெளிப்படையாகவும் தொடக்க நிலைக்குரிய வீறுப்புடனும் ஓங்கி ஒலித்தது. ஈழத்துத் தமிழ் இலக்கியம் அதனால் பலமாற்றங்களைக் கண்டது. நமது அண்மைக்கால இலக்கியத்தின் தனித்தன்மை அக்காலப் பகுதியிலிருந்தே பலராலும் கணிக்கபட்டு வந்துள்ளது. அவ்விலக்கிய இயக்கத்தின் ஆரம்பகால ஆரவாரங்களும் சண்டவேகமும் சந்தடிக்கும் தணிந்து தெளிந்து அடங்கிய தஸாப்தத்திலே "தனது ஆரோக்கியத்தினாலும் இயல்பான செழிப்பாலும்" எழுத்துலகில் முன்னுக்கு வந்தவர் சாந்தன். இது வரலாறு.

இனி, இத்தொகுதியிலுள்ள கதைகளைப்பற்றிப் பேசுவோம். இவற்றின் பொதுப் பண்புகளை நோக்கும்போது கதாசிரியரது கூரிய நுண்காட்சித்திறம், சுற்றிவளைக்காமல் நேரடியாகப் பொருளுக்குவரும் தன்மை, விஷயத்திலிருந்து ஓரளவு 'விலகி' நிற்கும் நடுஉணர்வுநிலை, நுணுக்க விவரத்தில் கடைப்பிடிக்கும் கட்டுப்பாடான சிக்கனம், எளிமை என்பன துலாம்பரமாயுள்ளன. இப்பண்புகளின் கூட்டுச்சேர்க்கை கதைகளின் தனிச்சிறப்பியல்பாக அமைந்துள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் சாந்தன் எழுதிய கதைகளிற் சில இத்தொகுப்பில் இடம் பெறுகின்றன. கதைகள் வெளிவந்த வருடம் குறிப்பிடப்பட்டிருத்தல் பயனுடையது. இக்கதைகள் பெரும்பாலும் அளவிற் சிறியன. கடுகு (1975) என்னும் தலைப்பில் இதற்குமுன் ஆசிரியர் வெளியிட்ட குறுங் கதைகளைப் போல மிகச் சிறியுவையாக இல்லா

விடினும், பொதுவாகப் பேசுமிடத்து இவை உருவத்திற் சிறியவை என்பதில் தடையில்லை. மேலே குறிப்பிட்ட நுண்மை, நேர்மை, எளிமை, சிக்கனம் முதலிய பண்பு களுக்குக் காரணமாகவும், அவற்றின் காரியமாகவும் இவை அமைந்துள்ளன என்று விவரித்தல் பொருந்தும். சாதாரண மாய்க் கால அடைவை ஒட்டிக் கதை கூறும் பாங்கில் அன்றி, நிகழ்வுகளையும் அவற்றை யொட்டிய மனப் பதிவுகளையும் பல்வண்ணக் காட்சிக் கருவி போன்று சித்திரித்தல் ஆசிரி யரின் பிரதான உத்தியாகக் காணப்படுகிறது. சிறு சிறு காட்சிகள் அமைந்து கிடக்கும் முறையில் சில சிந்தனை களும் உணர்வுகளும் வாசகர்களால் பெறப்படுகின்றன. கதாசிரியரது நெறிப்படுத்தலோ குறிப்புரைகளோ விளக்க வுரைகளோ 'பொன்-மொழி'களோ எவையுமின்றி நினைவுத் திவலைகள் தாமாகவே பொருளை உணர்த்தும் உத்தி இது எனலாம். 'முளைகள், இடையில் ஒரு இருபது வருஷம்' 'குமிழிகள்' ஆகிய கதைகளில் இதனைச் சிறப்பாகக் காண லாம். பொதுவாகப் புதுக் கவிதைகளிற் காணப்பெறும் சொற்செட்டும் அலங்காரமற்ற மொழியாட்சியும் இவரது நடையின் குறிப்பிடத்தக்க குணும்சங்களாயிருக்கின்றன. அந்த வகையில் பிரக்ஞைபூர்வமான நடைத்திறனுடை யவர் என்றும் கூறுதல் மிகையாகாது. பொருளைக் கையாளும் நிதான நெறியின் நேரடியான வெளிப்பாடே நடையின் நயம் என்பது தருக்கத்தின்பாற்படுவதாகும்:

தன்னுணர்ச்சிப்பாடல், சிறுகதை இவற்றைப் படைக் கும் எழுத்தாளர் பலர், தமது இளமைக்கால நினைவுகளைக் கருவாகக் கொண்டு புனைந்துரைத்தல் இலக்கிய உலகம் அறியாததொன்று அன்று. ஆற்றல்மிக்க நாவலாசிரியர் பலர் பாத்திரங்களின் இளமைக்காலத்தை வருணிக்கும்போது தமது அநுபவ நினைவுகளை அதிற் பக்குவமாகப் பயன்படுத்தி யிருப்பதை விமர்சகர்கள் சுட்டிக் காட்டி யிருக்கின்றனர். நவீன இலக்கியத்தில் யதார்த்தம் நிலவுதற்குரிய மூலங்களில் ஒன்று எழுத்தாளரின் சுய அநுபவமாகும். கால வெள்ளத்

தில் அடிப்பட்டுப் போனவை போக எஞ்சியுள்ள நினைவு களே ஒருவரை ஆழமாகப் பாதித்தனவாயிருக்கும். அவை குறிப்பிட்ட காலச்சூழலைப் பின்னணியாகக் கொண்டன வாகையால் தூலமாகவும்,, காலத்தால் வடித்தெடுக்கப் பட்டன வாகையால் பொதுப்பண்புடையனவாகவும் அமைந்துவிடுவதையும் பல இலக்கியங்களிற் காண்கிறோம். பாரதியினுடைய 'சுயசரிதை' இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு. தனிநிலை அநுபவம் இலக்கிய ஆக்கப்பட்டறையிலே பொதுநிலை அநுபவமாக மாறும் ரஸவாதம் இவ்வடிப்படையி லேயேயாகும். இத்தொகுதியிலே 'புதியதரிசனங்கள்' என்ற கதையில் வரும் பிறைசூடி ஆசிரியரும், 'முளைகள்' என்னும் கதையில் வரும் இராசலிங்கம் வாத்தியாரும் கதாசிரியருக்கு நன்கு தெரிந்த மனிதர்களாக இருக்கும் அதே வேளையில் வாசகர்கள் தத்தம் வாழ்க்கையிலும் கற்பனையிலும் இனங் கண்டுகொள்ளக் கூடியவராயும் வார்க்கப்பட்டிருக்கின்றனர்.

1975-1980 காலப்பகுதியில் வெளிவந்த கதைகள் இவை என்ருலும், இவற்றில் கோலங்காட்டும் நினைவுகள் ஆசிரியரின் இளமைக்காலத்தைப் பற்றிநிற்பன. பள்ளிப் பாலகனுகத் துள்ளித்திரிந்த கால முதல் ("முளைகள்"), அரசாங்க உத்தியோகத்தில் கொழும்பிலே குடித்தனம் நடத் திய காலம் வரை ("ஆறுதல்"), பல்வேறு சம்பவங்களும் நினைவுகளும் இக்கதைகளில் இடம் பெற்றுள்ளன. இவை கதாசிரியர் வாழ்க்கையைப் புரிந்து கொண்ட விதத்திற்கும், அப்புரிந்துகொள்ளலை நமக்கு உணர்த்தும் விதத்திற்கும் ஆதாரமாய் அமைந்துள்ளன. கதைச் சம்பவங்கள், நிகழ்வு கள், பாத்திரங்கள் யாவுமே அடிநாதமான வாழ்க்கையின் இயல்பையும் அர்த்தத்தையும் கோடி காட்டுவனவா யிருக் கின்றன. சம்பவங்களையும் அவற்றின் சமூக-வரலாற்று முக்கியத்துவத்தினையும் உரத்த குரலில் அழுத்திக் கூறியோ அல்லது பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட வடிவங்களில் வார்க்கவோ முற்படாது, "அவை அவ்வாறுதான் நடந்தன" என்று கருதத் தக்கவாறு விட்டுவிடுகிருர். இம்

முறையிலேயே ஆசிரியரது நடுஉணர்வு நிலையும், 'பற்றற்று' நிற்கும் பான்மையும் தெளிவாகப் புலப்படுகின்றன. சிருஷ்டி ஆற்றல் வாய்க்கப் பெற்றவர்களாலேயே இத்தகைய உத்தியை இலாகவமாகக்கையாள இயலும். அனுயாசமாகப் பொருளை உணர்த்தும் கலைத்திறன் சாந்தனிடத்து அபரிமிதமாய்க் காணப்படுகிறது. "தான் கலந்து" எழுதுதல் இலக்கியத்தில் போற்றத்தக்க பண்பாகக் கருதப்படுவதுண்டு. அம் முறையிலும் அற்புதமான சில ஆக்கங்கள் தோன்றியிருக்கின்றன. ஆனால், கூறப்படும் பொருளோடு உணர்ச்சி பூர்வமாகக் கலந்துவிடாமல் அதனைப் புறநிலையில் வைத்து நோக்கி அதிலே தோன்றும் அவலங்களையும் குறிப்பாக முரண்களையும் இயற்பண்புடன் சித்திரிப்பதும் ஓர் இலக்கிய முறையியலாகும். இதற்குக் கட்டுப்பாட்டு உணர்வு வேண்டும். இந்நூலிலுள்ள "மனிதர்களும் மனிதர்களும்" என்ற கதையில் இலங்கையில் தமிழ்மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் சிற்சில காட்சிகளினூடாகச் சித்திரிக்கப்படுகிறது. திரைப்படம் ஒன்றுக்கு உகந்த காட்சித் தொகுப்புப் போல உயிர்களை வாய்ந்த ஓவியங்களினாலே நெருக்கடியான நிலைமை யொன்றில் சிக்கித் தவிக்கும் மனிதர்களை நம்முன் நிலை நிறுத்துகிறார் சாந்தன். ஆயினும் வன்செயல்களை விவரிப்பதோ, உணர்ச்சிவசப்பட்டு அவற்றைக் கண்டித்துரைப்பதோ கதையின் பிரதான நோக்கமன்று. சித்திரிக்க எடுத்துக் கொண்ட நிலைமையிற் காணும் முரண்களைக் காட்டுவதன் மூலம் பலவற்றைக் கூறாமற் கூறிவிடுகிறார். கதையின் தொடக்கத்திலேயே முரணின் இயல்பு கூறப்பட்டுவிடுகிறது. "அந்த அமைதியான அழகிய கிராமத்தின் மக்கள் இப்படி இருப்பார்கள் என்று நினைக்க முடிந்ததில்லை" என்னும் வாக்கியம் கதைக்குரிய தொனியை நிர்ணயித்து விடுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட பரிமாணங்கள் கதையில் தோன்றுவதற்கு முரண்களைக் காட்டும் முறை பெரிதும் இயைபுடையதாகும். அகதிகள் போல அச்சஉணர்வுடன்

(அகமனப் போராட்டங்களுடனும் தான்) ரெயில் வண்டியிற் பயணஞ் செய்ய முற்படும் அம்மனிதர்களிற் சிலர் 'சொகுசான' ஆசனங்களுக்காகச் சண்டை போட்டுக் கொள்வதும் ஆசிரியர் அமைத்துக் காட்டும் காட்சிகளில் ஒன்று. இச்சிறு நுணுக்க விவரம் ''மனிதர்களும் மனிதர்களும்'' என்ற தலைப்பின் அர்த்த பாவத்தைப் புலப்படுத்துகிறது. அநுபவத்தை ஒட்டிய ஒரு கதையில் அகதிகள்மீது அநுதாபத்தை மாத்திரம் சொரிந்துவிடாமல் அவர்கள் மத்தியில் தலைதூக்கும் முரண்களையும் பல்வண்ணக்காட்சித் தொகுப்பில் அடக்கியிருப்பது ஆசிரியரின் அடக்கமான புறநிலை நோக்கிற்குச் சிறந்த உதாரணம். அதே சமயத்தில் இத்தொகுதியிலுள்ள ஏனைய சில கதைகளின் பின்னணியில், கடந்த சில வருடங்களாக இலங்கையில் நடைபெற்று வந்திருக்கும் இனக் கலவரங்கள் இழையோடிக்கொண்டிருப்பதையும் அவதானிக்கலாம். இனக்கலவரங்கள் பற்றிய சுட்டுக்குறியீடுகள் இத்தொகுதியில் இடம்பெறும் கதைகளின் 'காலம்' எதுவெனச் சுட்டுவதாகவும் கொள்ளலாம். காலம் பற்றிய இக்குறிப்புரைகள் சமகால உணர்வைத் தோற்றுவிக்கின்றன என்று கூறுவதும் பொருந்தும். உணர்ச்சி வசப்படாமல் ''வாழ்க்கை இருந்தவாறு'' என்னும் உணர்வை எழுப்பும் இக்கதைகளில் ஆசிரியரது நுண்ணயம் வாய்ந்த நகைச்சுவை சூட்சுமமான முறையில் உட்கலந்து நின்று சுவைநலம் பயப்பதாயிருக்கிறது.

இத்தனைக்கும் மேலாக, ஆசிரியரையோ, அவரது படைப்புக்களையோ தத்துவார்த்த, இயக்க எல்லைக்கோடுகளுக்குள் நிறுத்தி, நிறுத்து எடைபோட வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. சுயபிரகடனஞ் செய்யாத, ஆனால் கனதியான சமூகப்பார்வை ஆசிரியருக்கு இருப்பதனாலேயே இத்தகைய கதைகளை அவரால் எழுத முடிகிறது என்று எண்ணுகிறேன். வெளிப்படையான வாக்குமூலங்களை இத்தகைய ஆக்கங்களில் எதிர்பார்த்தல் நியாயமன்று. எனினும் ஒன்று கூற விரும்புகிறேன். நகர வாழ்க்

கையினடியாகவும் ஒருவிதமான ஆய்வறிவுப் போக்கின் விளைவாகவும் சிற்சில மாந்தர்க்கு ஏற்படும் 'அன்னிய' உணர்வு இரண்டொரு கதைகளில் கையாளப்பட்டிருக்கிறது. 'அன்னியமாதலை' உணரும் பாத்திரங்களை ஆங்காங்குக் காண்கின்றோம். ''விலகிப் போகிறவன்'' என்ற கதையில் வரும் ஜெயனை உதாரணங் காட்டலாம். சித்திரம் என்ற வகையில் அப்பாத்திரம் இயல்பாகவே உள்ளது. அதனைத் தத்துவ வடிவில் நியாயப்படுத்த அவர் முயலவில்லை. 'தேடல்' என்ற பெயரில் தறிகெட்டு நெறியற்ற வக்கரித்த பாத்திரங்களை இலட்சியப்படுத்தவோ அவற்றுக்கு வக்காலத்து வாங்கவோ முற்படவும் இல்லை. எனினும் கத்தியின் கூர்ப்பாகத்தில் நடக்கும் காரியத்தைச் செய்து முடித்திருக்கிறார். இவ் விஷயத்தில் ஆசிரியர் விழிப்பாயிருத்தல் விரும்பத்தக்கது. ''குமிழிகள்'' என்ற கதை அன்னியமாதலுக்கு மாற்று மருந்துபோல அமைந்திருப்பதும் அவதானிக்கக் கூடியதே.

இன்று தமிழில் விதந்து குறிப்பிடத்தக்க சிறுகதைகளை எழுதுவோரில் சாந்தனும் ஒருவர் என்பதை வாதிட்டு நிறுவ வேண்டிய தேவையில்லை. ஏற்றுக்கொள்ளப்பட்ட செய்திக்கு நிதரிசனபத்திரமாகவே என் உரை அமைகிறது. தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் ஆசிரியரை ஊக்கி உற்சாகப்படுத்தத் தவறமாட்டார்கள் என்றே நம்புகிறேன். கதாசிரியருக்கு என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

இராசவீதி
திருநெல்வேலி
இலங்கை

**க. கைலாசபதி**

# முளைகள்

அம்மன் கோவில் குளத்துக்குள்ளிருந்த ஐந்துதலை நாகம், பள்ளிக்கூட விளையாட்டிடத்தடிக் கொய்யாப் பற்றைக்குள்ளிருந்த 'முள்ளுப் பண்டி'--இவைகளெல்லாம் இப்போது எங்கே போயினவோ, தெரியவில்லை. இவைகளுடன், செல்லர் வளவுப் 'பாண்கிணற்' றடி நெல்லி மரத்தில் ஒரு முனியும் அந்த நாட்களில் இருந்தது. இந்தப் பாண்கிணற்று முனியிலும் பார்க்க, அதற்குள்ளிருந்த பாம்புகள்தான் எங்களை அதிகம் பயமுறுத்தியிருந்தன. பள்ளிக்கூடப் பிள்ளைகளை வாத்தியார், கோவிலுக்கும் விளையாட்டு இடத்துக்கும் என்று தங்களுடன் அழைத்துக்கொண்டு போகிற நேரங்களைத் தவிர்த்து, மற்ற நேரங்களில்-அதிலும் முக்கியமாக மத்தியானம் பன்னிரண்டு மணிக்குப் பிறகு—மேலே சொன்ன இந்தப் பயங்கரங்களெல்லாம் உலாவ வெளிக்கிட்டுவிடுமென்றும்; சின்னப் பிள்ளைகளைத்தான் அவை தேடித் திரியுமென்றும்; அநேகமாக எங்களெல்மேலோருக்கும் வீடுகளில் சொல்லியிருந்தார்கள். பள்ளிக்கூடம், மத்தியானம் ஒரு மணிக்குத்தான் அப்போது விடுவது வழக்கம் என்பதை நினைத்துப் பார்க்கையில், இந்தப் பிராணிகளெல்லாம் ஏன் பன்னிரண்டு மணிக்குப் பிற்பட்ட நேரத்தைத் தமது வாலாய வேளையாகக் கொண்டிருந்தன என்று இப்போது புரிகிறது. என்றாலும், மூன்றாம் வகுப்புத் தாண்டிய கையிலிருந்தே இந்தப் புரிதல் மெல்ல மெல்ல ஆரம்பித்திருக்கவேண்டும்.

எப்படியிருந்தாலும் பெரிய விக்கினி — இரண்டு 'விக்கினி' கள் எங்களோடு ஐந்தாம் வகுப்புவரை படித்

தார்கள்: 'பெரிய விக்கினி' என்ற விக்கினராசாவும், 'சின்ன விக்கினி' என்ற விக்கினேசுவரனும், - துணிச்சல்காரன்தான். மூன்றும் வகுப்பில்படித்தபோதே, ஒரு நாள், அந்தப் பாண் கிணற்றுக்குள் நீர்மட்டத்தில், சுவர்க் கரையோடு நீந்திக் கொண்டு கிடந்த பெரிய பாம்பொன்றை, நிலத்தில் நின்றே குறிதவருமல் கல்லால் எறிந்து கொன்ருன். அதிலிருந்து எங்களுக்குள் அவனை ஒரு விண்ணனுக நாங்கள் ஒப்புக் கொண்டோம்.

எங்கள் பள்ளிக்கூடத்துப் பெயர், கல்விக் கந்தோரி லும், முன்சுவரில் வாசலுக்கு மேலும், 'பாரதி வித்தியாசாலை', ஆனுல் அந்தப் பெயரை ஊருக்குள் யாராவது சொல்லி, நான் கேட்டதில்லை.

'தம்பி எங்கை படிக்கிருய்?' என்ருல்,

'பொன்னையா பள்ளிக்குடத்திலை....' என்றுதான் மறு மறுமொழி வரும். பொன்னையர்தான் பாரதி வித்யாசாலையை நிறுவியவர்; எப்போதோ செத்துப் போய்விட்டவர். எங்களூர்க்காரர்கள் நன்றி மறவாதவர்களாய் இருந்தார்கள்.

## 2

இராசலிங்கம் வாத்தியார் சிரித்ததை, அவரிடம் படித்த ஐந்து வருடகாலத்திலும். ஒரேயொரு முறைதான் பார்த்ததாக ஞாபகமிருக்கிறது. இதைச் சாதித்தவன் கனகநாதன்.

இராசலிங்க வாத்தியார்; நாலாம் வகுப்பில் எங் களுக்கு இங்லீஷ் எடுத்தார். ஸ்பெல்லிங் முடிந்து, புத்தகங்கள் வாசிக்கிற கட்டம். வாத்தியார், எங்களின் உச் சரிப்பில் அதிக அக்கறை காட்டினர். ஒருநாள் சொல்லித் தந்த மூன்று வசனங்கள்:

I am a boy
YOU ARE ~~I am~~ a girl
This is my book

—இதை ஒவ்வொருவராக எழுந்து சொல்ல வேண்டும். 'கலவன்' பாடசாலையிற் கலவன் வகுப்பு ஆதலால், ஆட்களுக் கேற்றபடி, Boyயும் Girlலும் முதலிரு வசனங் களிலும் இடம் மாறும். கனகநாதனின் முறை வந்தபோது, அவன் இவ்வசனங்களை, லீலாவதியைப் பார்த்துச் சொல்ல வேண்டியிருந்தது. கனகநாதன் வண்டுறுட்டி போலக் கட்டைக் கறுத்தப் பொடியன். லீலாவதி நெடுத்த பெரிய பெட்டை. அவன். பயப்படாமல் எழுந்து நின்று உசாராகச் சொன்னான்,

"I am a boy:
You are my girl-"

-- இதற்கு மேல் அவனைச் சொல்லவிடவில்லை, வாத்தி யார், 'போதும்,....! இரடா மடையா!' என்றவர், விழுந்து விழுந்து சிரிக்கத்தொடங்கினர். ஒரு சின்னப்பிழை விட்டால் கூட, கையிலுள்ள கொய்யாத்தடியால் வெளுத்து வாங்குகிற இராசலிங்க வாத்தியார் சிரிப்பதைக்கண்ட மகிழ்ச்சியிலேயே அன்று, எங்களிற் பலர், பகிடி என்னவென்று விளங்கா விட்டாலும்கூட, சேர்ந்து சிரித்தோம் என்று நினைக்கிறேன்.

பள்ளிக்கூடத்தில், இராசலிங்க வாத்தியார் இரண் டாவது பெரியவர். முதல் வாத்தியாருக்கு அடுத்தவராக இருந்தார்.

## 3

என்றாலுங் கூட, இராசலிங்க வாத்தியாரின் அடிக் கொடுமை தாங்காமல் நாங்களெல்லோரும் ஒருநாள் கூடி ஆலோசிக்க நேர்ந்தது, 'சிங்கமும் முயலும்'கதையில் காட்டு மிருகங்கள் கூடி ஆலோசித்தது போல. ஆனால், நாங்கள் "பெட்டைய'ளைச் சேர்க்கவில்லை. அவளவையை நம்பவும் முடியாது: அதோடு இராசலிங்க வாத்தியார் பெட்டை யளுக்குக் கை நீட்டுவதுமில்லை.

பெரிய விக்கினிதான் ஒரு யோசனை சொன்னான். 'உவருக்கு ஒரு நல்ல வேலை செய்யலாம்....'

'சொல்லன்ரா?'

'கிட்ட வாங்கோ........'

தலைகளை நீட்டினோம்:

'என்ன?'

'ஒரு செய்வினை செய்யலாம்'

'செய்வினையோ?!....' எங்களுக்குப் பயம் முளைத்தது.

'வெருளாதையுங்கோடா' என்ற பெரிய விக்கினி, எல்லாம் விளக்கமாகச் சொன்னான்:

வாத்தியாருடைய காலடி மணலைக் கவனமாக அள்ளுவது தான் முக்கியமான வேலை. அதை அள்ளி மண் சட்டியொன்றில் போட்டு வறுத்து, அந்த மணலைப் பாண் கிணறொன்றில் கொட்டிவிட வேண்டும், அவ்வளவுதான்! அடுத்த நாள் ஆள் பள்ளிக்கு வர ஏலாது! கால் இரண்டு பாதமும் தோல் வெடிச்சுப் புண்ணாய்ப் போகும்!

மணலை இரகசியமாக வறுத்துக் கொண்டு வருவது தன்னால் முடியுமென்று பெரிய விக்கினி சொன்னான்; பாண் கிணறு தேடத் தேவையில்லை; அது எங்களருகிலேயே இருக்கிறது. தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

எங்களுடைய வகுப்பு அப்போது நாலு. 'பள்ளி கூட்டுற' முறைநாள், செவ்வாய்க்கிழமை. பெட்டையள் தும்புக் கட்டோடு வகுப்புகளெல்லாம் கூட்டுவாளவை. பெடியள், விளக்குமாறுங்கடகமுமாய் முற்றம், பக்கம், கோடி எல்லாங் கூட்டுவோம். பெரிய விக்கினியின் திட்டத்தின் பிறகு, அடுத்த செவ்வாய்க்குக் காத்திருந்தோம்.

வழமைக்கு மாறாக, முற்றத்திலிருந்து கோடிவரை போகாமல் கோடி, பக்கமெல்லாம் முடித்துவிட்டு, பிறகு

வாசலடிக்கு வந்தோம். இராசலிங்க வாத்தியார் வருகிற நேரத்திற்குக் கொஞ்சம் முன்னால் முற்றம் கூட்டப்பட வேண்டும். பெரியவிக்கினி, ஒரு பெரிய கடதாசித் துண்டைத் தன் கழுசான் பொக்கற்றுக்குள் ஆயத்தமாய் வைத்திருந்தான்.

நாங்கள் கூட்டிக் குவிக்கவும் வாத்தியார் பள்ளிக் கேற்றடியில் சைக்கிளால் இறங்கவும் சரியாயிருந்தது. பின்னி நெளிந்திருந்த சைக்கிள் சில்லு அடையாளத்தினருகில் செருப்புப் போடாத வாத்தியாரின் காலடிகள் பளிச்சென்று பதிந்திருந்தன. பெரிய விக்கினி, ஒன்றுக்கு இரண்டுபாதமாக அள்ளிக்கொண்டான். அள்ளின அடைளாளந் தெரியாமல் இருக்க, தேவராயன் விளக்குமாற்றை அதன்மேல் போட்டு இழுத்தபடி போனான்.

மத்தியானம் பள்ளி விட்டதும் எல்லாப் பெடி பெட்டையளுங் கலையுமட்டும் பேய்க்காட்டிவிட்டு, பெரிய விக்கினி மண்சரை வைத்திருந்த இடத்திற்கு மெல்லப் போனோம்.

'போச்சடா!' என்று பெரிய விக்கினி கத்தினான்.

மதில் ஓட்டைக்குள் மறைவாய் அவன் ஒளித்து வைத்திருந்த சரையில், கடதாசிமட்டும் கிழிந்து ஓட்டையாகிக் கீழே கிடந்தது.

'சனியன் காகம்!........'

'மூதேசி!....'

வயிற்றெரிச்சலுடன் மீண்டும் அடுத்த செவ்வாயை எதிர்பார்க்கலானோம்.

## 4

முதல் வாத்தியாருடைய அறை எப்போதும் பூட்டித் தானிருக்கும். அவர் அந்த அறைக்குள்ளிருப்பது வழக்கமில்லை. மண்டபத்து நடுவில் மேசையைப் போட்டுவிட்டு,

எல்லா வகுப்புகளும்—அல்லது எல்லா வகுப்புகளுக்கும்—கண்ணிற் படுகிறமாதிரி இருந்து கொள்வார். அறைக்குள், ஒரு அலுமாரி, கால் உடைந்த பெரிய மேசை ஒன்று ஒன்றின் மேலொன்ருய்க் கொஞ்ச வாங்குகள் இப்படிச் சில சாமான்களிருந்தன. மேசையின்மேல் ஒரு பெரிய சரஸ்வதி படமும், இலேசாக மங்கிப்போன ஒரு பூகோள உருண்டையும், அலுமாரியின்மேல், தேசப்படமொன்றும், உலகப் படமொன்றும் சுருட்டப்பட்டுக் கிடக்கும். இவைத்தவிர, இன்னெரு கிழிந்துபோன இலங்கைப் படம், சுவரில் தொங்கிக் கொண்டு கிடந்தது. அலுமாரிக்குள், சோக்கட்டிப் பெட்டிகள், டாப்பு இப்படி....

இவ்வளவற்றையும் பார்க்கிற சந்தர்ப்பம், அந்த அறையைத் துப்புரவு செய்யச் சொல்லி எங்களிற் கொஞ்சப் பேரை முதல் வாத்தியார் பிடித்து விட்டபோது கிடைத்தது.

பின்பக்கம் போனுல், கக்கூஸ், ஒரு பக்கம் பெடியள், மற்றப்பக்கம் பெட்டையள். பள்ளிக்கூடத்தின் பாதி தாண்ட முதலே, தன் இருப்பை உணர்த்திக் கொள்ள சக்தி வாய்ந்த கக்கூஸ் அது.

அதற்கு முன்னுல், பெரிய பெரிய இலேகளை விரித்தபடி பரந்து நிற்கும் ஈரப்பலா மரம். ஒவ்வொரு நாளும் காலையில் பள்ளிக்குப் போய், புத்தகங்களை வாங்கில் வைத்த கையோடு முதல் காரியமாய் இந்த ஈரப்பலாவடிக்கு ஓடி வந்து, விழுந்து கிடக்கிற பழுத்த இலேகளைப் பொறுக்கிக் காம்பை முறிப்போம். பென்சில் எழுத்தை 'அழிரப்பர்' அழிப்பது போல, இந்த இலேக்காம்பு சிலேற்றை அழிக்கப் பெரிதும் உதவியாயிருந்ததை, யாரோ ஒரு முன்னேன் எங்களுக்காகக் கண்டுபிடித்து வைத்திருந்தான்.

ஈரப்பலாவிலே இல்லாத நாட்களில், கிணற்றடிப் பள்ளத்து இடுக்கில் சணைத்துக் கொழுத்திருந்த, 'தண்ணிப் புல்லு' எங்களுக்குப் பயன்பட்டது. இவ்விரண்டும் இருந்துங் கூட, கன பெடியன்களின் சிலேற் எச்சில் மணத்தது.

இந்த இலைக்காம்பு பொறுக்குகிற சண்டையால், மூன்றும் வகுப்புக் கடைசித் தவணையில் ஒருநாள், நான் இராசலிங்க வாத்தியாரிடம் அடிவாங்கினேன்.

## 5

எங்கள் வீட்டிலிருந்து பள்ளிக்குப் போவதென்றால் றேட்டுக்குப் போகத் தேவையில்லை. ஒழுங்கையாலேயே போய் விடலாம். மழைகாலங்களில் வெள்ளம் ஓடி, வாரடிக்கிற வெள்ளைமணல் ஒழுங்கை. வளவுகளும், வடலிகளும் பனங்காணிகளும் பற்றைகளும் மாறி மாறி வரும். பற்றைகளுக்குள், ஒன்றில் காண்டை நிற்கும். அல்லது கொய்யா நிற்கும், அல்லது இரண்டுமே நிற்கும் உள்ளே நுழைந்தால், தின்னுவதற்கு எப்போதும் ஏதாவது தரக்கூடிய பற்றைகள், கொய்யாப் பழமோ காண்டைப் பழமோ இல்லாவிட்டால் கொய்யாக் குருத்து அல்லது காண்டைக்காய் இருக்கும். காண்டை நித்திய கல்யாணி. காய் இல்லாத காலமே கிடையாது.

இந்தக் கொய்யாவுக்கும், காண்டைக்கும் அப்பால் தேவராயன் இன்னொரு சாமானை எங்களுக்குக் காட்டித் தந்தான். பாக்குவெட்டிச் செடியின் குருத்தைப் பனங்குருத்தோடு சேர்த்துச் சப்பினால், வெற்றிலை மாதிரி வாய் சிவக்குமாம். இந்த ஆசையில் பாக்குவெட்டிக் குருத்து நுள்ளப்போன கனகநாதனுக்கு ஒருநாள் பிசுங்கான் ஓடு வெட்டிப் பெருகிய இரத்தம், இன்னமும் நினைவில் சிவப்பாயிருக்கிறது.

கனகநாதன் ஏழெட்டு நாள் பள்ளிக்குக் கள்ளம் போட்டது பற்றிய விசாரணை, தேவராயன் இராலிங்க வாத்தியாரிடம் பிரப்பம்பழம் தின்றதில் முடிவடைந்தது.

# 6

காலையில் ஒருகும்பல் சேரும். என்னோடும் எனக்குக் கீழும் படிக்கிற அயலட்டைக் குஞ்சு குருமனெல்லாம் ஒன்ருகப் போவோம். இந்தப் பட்டாளத்திற்கு நான் பல நாட்கள் தலைவனுயிருந்திருக்கிறேன்; நான், கனகநாதன், அவன் தம்பி தருமநாதன், தேவராயன், சிவலிங்கம், ராசேசுவரி, செல்வராணி இப்படி........

போகப் போகப் பட்டாளம் பெருகும். படலைக்குப் படலை கூப்பிடுவதும் உண்டு.

இந்தத் தினசரிப் பயணத்தில் முக்கிய இடம் வகித்தது, கதிரவேலர் வீட்டு நாய். சரியான கடியன். ஒவ்வொரு நாளும் எங்களைத் துரத்தி அதற்கு அலுப்பதில்லை. துரத்துவதென்ருல், வேலிக்கு அந்தப் பக்கந்தான். கதிரவேலர் நல்ல மனுசன்; புத்திக்காரனும். பெடியள் பள்ளிக்குப் போகிற நேரத்தில் தன்னுடைய வீமன் சொறி தேய்க்கும் என்று உணர்ந்தவர். நாயை உள்ளே விட்டு, படலையைப் பூட்டித்தான் வைப்பார். வேலியின் கீழ் வரிச்சு நல்ல பதிவு. பொட்டுகளுமில்லை. எனவே நாய்ப்பிள்ளை வெளியே வரமுடியாமல், நாங்கள் ஒழுங்கையால் நடக்கும் போதுதான் வளவுக்குள் குரைத்தபடி வேலிநீளம் ஓடிவரும். 'எப்பிடியெண்டாலும், வெளியாலை வந்துதெண்டா ..........?' என்ற பயம் எங்களுக்கு நித்திய கண்டமாயிருந்தது.

நாய்க்குப் பயந்து நாங்கள் பேச்சை நிறுத்தி நடந்தாலும், எங்களோடு வருகிற பெட்டைகளின் 'தையல் பெட்டிகள்', 'கிலுக்குக் கிலுக்'கென்று கிலுங்கி எங்கள் வரவை நாய்க்கு அறிவிக்கும். இந்தத் தையல்பெட்டி இல்லாத பெட்டையை நான் அப்போது கண்டதில்லை. ஒவ்வொருத்தியும் மூடி நெளிந்த, கிறுக்குப்பட்ட ரொஃபிய் பெட்டி ஒன்று வைத்திருப்பாள். அது இல்லாதவளிடம் வெறும் பவுடர்

ரின்னுவது இருக்கும். இதற்குள், நூல்பந்து, அதில் குத்தப் பட்ட ஒன்றிரண்டு தையல்ஊசி, 'கிளிப்பர்'கள், ஆட்டுப் பிழுக்கைப் பென்சில்துண்டுகள், அழிரப்பர், காப்புகள், முட்டை ஊசிகள், தடிதண்டுகள், காண்டைப் பழங்கள் என்று என்னென்னவோ போட்டு வைத்திருப்பார்கள்.

இவர்களுக்கு, தையல்பாடம் என்று தனியாக ஒரு பாடமிருந்தது. தையலம்மா ரீச்சர் ஒரு கதிரையிலிருந்து ஏதோ தைக்க, இதுகளும் சுத்தி நின்று குத்திப்பிடுங்குகிற வேளைகளில், நாங்கள், பெடியள் 'பன்ன வேலை' செய்வோம். தையலம்மாவுக்குப் பெயரே அதுதானேவென்று, கனகாலம் ஐமிச்சப்பட்டேன். ஆனல், பிறகு 'தையலக்கா' என்று இன்னொரு ரீச்சர் கொஞ்சம் வயது குறைவு வந்ததும் என் ஐயந் தீர்ந்தது.

இரண்டு மூன்று வருடம் படித்த பன்னவேலையில், உருப்படியாக ஒரு பெட்டி கூட நான் இழைக்கவில்லை. 'மூலை திருப்புகிற' வேலை, எனக்குப் பிடிபடாமலே இருந்தது. இந்தச் சிக்கல் பெரிய விக்கினிக்கும் இருந்தது, எனக்குத் தெரியும். மூன்ரும் வகுப்புக் கடைசியில், வகுப்பேற்றச் சோதனைக்குப் பெரிய விக்கினி மூலை திருப்ப முடியாமல், கனகபூசணி-எப்போதும் ஒரு பெரிய சாம்பல் பூசணிக்காயை நினைவுபடுத்துகிறவள்-கனகநாதனின் தமக்கை, எங்களுக்கு ஒரு வகுப்பு மேலே படித்தவள் - யிடம் இரகசியமாகக் கொடுத்து 'மூலை திருப்பிக் காட்ட'த் தெண்டித்த போது, அநியாயமாய் இராசலிங்க வாத்தியாரிடம் அகப்பட்டுக் கொண்டான். சவிள் அடி விழுந்தது.

## 7

காலையில், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகுப்புக்குச் சங்கீதம் முதற்பாடமாயிருக்கும். தன்னைச் சூழ எல்லோரை யும் வட்டமாக நிற்க வைத்துவிட்டு, ஐயர் வாத்தியார், 'சரிகமபதநிச' சொல்லிக் கொடுப்பார். பிந்தி வருகிற வேளை

களில், பள்ளிக்குக் கால் கட்டை தள்ளியிருக்கிற மதவடியில் வரும்போது இந்தச் சங்கீதம் காதில் விழும். நேரம் பிந்தியதை ஞாபகப் படுத்தி, இராசலிங்கம் வாத்தியாரின் கொய்யாத்தடியை நினைவுக்குக் கொண்டுவருவதால், இந்த 'சரிகமபதநிச' இன்றுங்கூட — சில வேளைகளில் எனக்கு ஒரு பயத்தையும் பதட்டத்தையும் தருகிறது.

கனகநாதன், இந்த விஷயத்தில் பல நாட்கள் இராசலிங்க வாத்தியாரின் வாடிக்கையாளனாக இருந்தான்.

தனது ஞானத்தை உணர்ந்தோ, அல்லது தன் சீடப் பிள்ளைகளின் ஞானத்தை அறிந்தோ, ஐயர் வாத்தியார், இந்த சங்கீத பாடத்தை, நல்ல காலமாக சரிகமபதநிசவுக்கு மேலே போகவிடவில்லை. நான்கூட, இரண்டு வருஷம் அவரிடம் இந்தக் கலையைப் பயின்றேன், பள்ளிக்கு நேரத்துக்குப் போன நாட்களில்.

'சரிகமபதநிச' வில், 'நிச' வை இழுத்து இழுத்து 'நி, சா....' வாக அழுத்தி அழுத்தி, வாத்தியாரைப் பார்த்தபடி வலுஉற்சாகமாக நாங்கள் பாடுவோம்.

## 8

அணில், ஆடு, இலை, ஈ, உறி, ஊசி, எலி, ஏணி, ஐயா, ஒட்டகம், ஓலை, ஔவை இதுகளெல்லாம் எப்படி இன்னமும் சிலையிலெழுத்தாக இருக்கின்றன?

அ, ஆ படிப்பித்த தையலம்மாவின் முகமும், படம் என்ற பெயரில் புத்தகத்தில் கறுப்புக் கறுப்பாக அச்சு மை அப்பிக்கிடந்த திட்டுக்களுங்கூட, இன்னமும் இந்த அணில், ஆட்டுடனும்; கொக்கு, சங்கு, பூச்சி, குஞ்சுடனும் நினைவுக்கு வருகின்றன. இதற்குப் பிறகு நெஞ்சில் முளைப்பது, 'கரடி காட்டு மிருகம்........' தான். '........கண்ணைத் தோண்டும், பொல்லாத மிருகம்' என்று கரடி புராணம் முடிகிறபோது, இராசலிங்க வாத்தியார் திரும்பவும் நினைவுக்கு வருகிறார்.

'கந்தசாமி நல்ல சிறுவன்' என்று தொடங்கி, '....பிள்ளை களே, நீங்களும் கந்தசாமியைப் போல நல்ல பிள்ளைகளா யிருக்க வேண்டும்' என்று முடிகிற பாடத்தைப் படிப்பித்தவர், முதல் வாத்தியார். அவர் படிப்பதற்கென்றே எழுதப் பட்டது போல அமைந்திருந்த பாடம், அது. 'பிள்ளையள்...., பெடியள்....' என்று ஒவ்வொருதரமும் எங்களை அழைக்கும் முதல் வாத்தியார், ஒரு தடவை அப்படி அழைத்தது இன்னமும் இந்தக் கந்தசாமியைப் போல் நினைவில் நிற்கிறது. அந்த அழைப்புடன் கந்தசாமியும் முதல் வாத் தியாரும் மட்டுமில்லை; இராசலிங்க வாத்தியாரும் பெரிய விக்கினியுங்கூட நினைவுக்கு வருகிறுர்கள். எல்லோருள்ளும், பெரிய விக்கினி தான், பெரிதாய் நினைவுக்கு வருகிறுன்.

'பிள்ளையள்........' என்று முதல் வாத்தியார் எங்கள் வகுப்புக்கு வந்து எங்களைக் கூப்பிட்டார். அது அவர் பாட வேளை அல்ல. ஒருவியாழக்கிழமை, நாங்கள் மண் அள்ளிய செவ்வாயை அடுத்து வந்த வியாழன். முதலாம் பாடம் தேவாரம் முடிந்து, 'அரஹரமஹாதேவா' சொல்லிவிட்டு, 'த வேரு இங்லீஷ்'ஐயும் இராசலிங்க வாத்தியாரையும் எதிர் பார்த்து நெஞ்சு படபடக்க, மூத்திரம் முட்ட, அந்தரித்துக் கொண்டிருந்த வேளை.

முதல் வாத்தியார் கூப்பிட்டதும், நிமிர்ந்து பார்த் தோம். இராசலிங்க வாத்தியாருக்குப் பதில் முதல் வாத்தி யாரே இங்லீஷ் எடுப்பதில் எங்களுக்கு வலுவிருப்பந்தான். ஆனுல் அவர் பாடமெடுக்க வரவில்லை. சொன்னுர்:

'........சத்தம் போடாமை இருந்து படியுங்கோ. இண்டைக்கு இராசலிங்க வாத்தியார் வரமாட்டார்........'

எங்களுக்கு அவர் சொன்னது மண்டையில் உறைக்கு முன்னரே, முதல் வாத்தியார் மிச்சத்தையுஞ் சொன்னுர். 'நேற்றுப் பின்னேரம் அவரைக் கார் தட்டிப் போட்டுது........ தோட்டவெளி ரோட்டிலை சைக்கிள்லை போகேக்கை அவரை ஆரோ காரால அடிச்சுக் கையை முறிச்சுப்போட்டான்....

வாத்தியாரை இப்ப . பெரியாஸ்பத்திரியில வைச்சிருக் கினமாம்'

முதல் வாத்தியார் சொல்லி முடிக்க முன்னரே, யாரோ விக்கி விக்கி அழத் தொடங்கிய சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தோம்-

பெரிய விக்கினி.

'மல்லிகை'- நவம்பர் '76'

# ஆறுதல்

இன்றைக்கும் ஏழரையாகிவிட்டது. சத்தியசீலன் இலையை எறிந்துவிட்டு அவசரமாகக் கையைக் கழுவினான்.

'சேர், ரீ?........'

'வேண்டாம், பில்லைத்தாரும்........'

காசைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தான்.

அந்த ஏழு முப்பத்தைந்து பஸ்ஸைப் பிடிக்க முடியாது போலிருந்தது. நேற்று-முந்த நாள் போல, இன்றைக்கும் நின்று தூங்க வேண்டியது தான். அரை மணித்தியாலம் முக்கால் மணித்தியாலங் கூட நிற்க வேண்டியிருக்கிறது. கந்தோருக்குப் போய்ச் சேர எட்டே முக்காலுக்கும் மேலாகிவிடும், எட்டு மணிக்கே தொடங்குகிற அரசாங்கக் கந்தோர்.

ஷெல்ரரே இல்லாத அந்த பஸ்தரிப்பில் முகத்தைப் பொசுக்குகிற மாதிரி அடிக்கிற காலை எதிர் வெய்யில். குளித்துவிட்டு வந்த உடம்பெல்லாம் எரிந்து நசுநசுக்கும்.

வருகிற பஸ்ஸெல்லாம் நிரப்பி அடைத்துக் கொண்டு வரும். ஃபுற்போட்டில் தொங்குகிற சீவன்கள், தப்பித்தவறி ஏற முடிந்துவிட்டாலும், பிதுங்கித் திணறிக் கொண்டிருக்க வேண்டும். யமகண்டம்.

ஏழு முப்பத்தைந்து பஸ்ஸில் இந்தத் தொல்லைகளில்லை -அது இந்த இடத்திலிருந்து தான் ஆரம்பிக்கிறது. நெரியாமல் நசுங்காமல் புத்துணர்ச்சியுடனேயே போய் இறங்கிவிடலாம்.

எட்டேகால், எட்டரை சிவப்புக் கொடுகள் றெஜிஸ்ரறில் விழுந்திராது.

சிலவேளை-எனக்கு லக்கிருந்தால்-அந்த டரவ் அஞ்சு நிமிஷம் பிந்தி வெளிக்கிடாதோ-என்ற எண்ணத்தில் எட்டி நடந்தான்.

தெருவைக் கடக்கப் பார்த்தபோது, எக்கச்சக்கமான ஸ்பீடில் ஒரு கார் வந்துகொண்டிருந்தது. அது போகட்டும் என்று நின்ருன். கார் நெருங்கியபோது ட்ரைவரின் இடத்திலிருந்து ஒரு கை மேலெழுந்து இவனை நோக்கி ஆடியது. தன்னையறியாமல் எழுந்த கையை ஆட்டிக் கொண்டே கவனித்தான்.

செல்வலிங்கம்!

இவனைப் பார்த்துச் சிரித்தபடி தலையை அசைத்தது தெரிந்தது. பதிலுக்குச் சிரிக்க முதலே, கார் கடந்து போய்விட்டது.

ரேட்டைத்தாண்டி விரைந்து நடந்தான்.

செல்வலிங்கம் எப்போது இந்தக் காரை வாங்கினுன்? போனமாதம் கண்டபோது கூட, அந்த ஸிக்ஸ் ஸ்ரீ 'ட்ராம்ப்' தான் நின்றது. லிஃப்ற் கூடத் தந்தான்.

இது ஸெவ்ன் ஸ்ரீ. 'ரொயோட்டா' வோ என்னவோ போலத் தெரிகிறது.

சத்தியசீலனுக்கு இரண்டு மூன்று மொடல் கார்களைத் தான் நிச்சயமாகத் தெரியும். ஏஃபோட்டி, மொறிஸ் மைனர், சோமஸெற், மற்றதெல்லாம் ஒன்று தான் - இப்படி யாராவது தெரிந்தவர்களிடம் நின்ருலொழிய.

கிட்டடியில் தான் வாங்கியிருப்பான் போலிருக்கிறது, செல்வலிங்கம். எப்போதுமே நல்ல நண்பன். ஆரும் வகுப்பிலிருந்து ஜி. ஸீ. ஈ. வரை சேர்ந்து படித்தான், ஜி. ஸீ. ஈ. றிஸல்ற்ஸ் வந்த அன்று நடந்த சம்பவந்தான். சத்திய சீலனுக்குச் செல்வலிங்கம் சம்பந்தமாக வருகிற முதல் நினைவு.

தன்னுடைய அறைக்கு முன்னுலிருந்த விருந்தையில் நின்று. பிரின்ஸிபல் றிஸல்ற்சை வாசித்தார். படபடக்கிற நெஞ்சுடன், வயிற்றில் ஏதோ நெளிய, எல்லோருங் கேட்டார்கள். அது பரீட்சையில் இரண்டாம் முயற்சி. குண்டடித்தால், பள்ளிக்கூடத்திலிருந்து விலக வேண்டிய நிலை. பரவாயில்லை - அநேகமாக எல்லோருக்கும் நல்ல தாகவே வந்திருந்தது.

ஐந்து பத்து நிமிஷ அமளிக்குப் பிறகு யாரோ கேட்டான்—

"எங்கையடா, செல்வலிங்கத்தைக் காணேல்லை?'

'இப்ப—றிஸல்ற்ஸ் வாசிக் கேக்கை - நிண்டானே....'

பாவமடாப்பா....ஆக இரண்டு பாடந்தான் பாஸ்...

நாலைந்து பேராக சைக்கிளில் தேடிக்கொண்டு போன போது, மக்கிக்கிடங்கடி ரேட்டில் செல்வலிங்கம் விம்மிக் கொண்டே விறுவிறென்று வீட்டுக்குப் போய்க் கொண்டிருந் தான். பதினறு பதினேழு வயதுத் தடியன் தெருவால் அழுது கொண்டு போனுன்.

எல்லோருமாக ஆறுதல் சொல்லி, வீட்டிற் கொண்டு போய் விட்டார்கள்.

அதற்குப் பிறகு, கனகாலமாய் ஆளையே காணவில்லை. தகப்பனேடு கொழும்பில் பிஸ்நெஸ் செய்கிருனென்று சொன் ஞர்கள்: முக்கியமாகச் சேலை வியாபாரம்.

படிப்பெல்லாம் முடிந்து, ஒரு உத்தியோகங் கிடைத்து வந்தபோது ஒருநாள், சத்தியசீலன் செல்வலிங்கத்தைச் சந்தித்தான். அதன் பிறகு, அடிக்கடி சந்திக்க நேர்ந்தது. அப்போதெல்லாம், விழுந்தடித்துப் படித்தது முட்டாள்தனம் எனப் படும்.

இப்போழுதும் அப்படித்தான் படுகிறது. அந்தக்காரும் இந்த பஸ்களும். யாரிலென்று தெரியாமல் கோபம் வந்தது.

பஸ்ஸையும் மணிக்கூட்டுக் கம்பியையும் துரத்துகிற வாழ்க்கை.......

முடக்குத் திரும்பியபோது, தூரத்தில் ஏழு முப்பத்தைந்து பஸ் நிற்பது தெரிந்தது. கியூவில் இன்னும் ஐந்தாறு பேர் தான் நின்றார்கள். ஓடினான்.

வெளிக்கிட்ட பஸ்சுக்கு முன்னால் ஓடிக் கையைக் காட்டி விட்டு, டக்கென்று பாய்ந்து ஏற முடிந்தது. ஜன்னலோடு உட்கார்ந்தான்.

பஸ் விரைந்து போன போது, மனதிற்குள் ஒரு பாடல் வந்தது.

வழியில் ஒரு நிறுத்தத்தில் நிற்கையில் கொஞ்சம் முந்திக்கண்ட செல்வலிங்கத்தின் புதுக் கார் பஸ்ஸைத் தாண்டிப் போனது தெரிந்தது.

என்னதானிருந்தாலும் அரசாங்க உத்தியோகம் மாதிரி வருமா என்று நினைத்துக் கொண்டான்.

'மல்லிகை' - டிசம்பர் '77'

# வேகம்

வில் வளைவாய்த் தண்டவாளம் நெளிகிற இடங்களில், இடப்பக்கம் நீல என்ஜினும் வலப்புறம் 'காட்' பெட்டியுமாய், முழு ரயிலுமே தரிசனந் தருகிறது.

எதிர்க்காற்றில் அலை எறியும் பச்சை வயல்கள், பாசியும், அல்லியும் படர்ந்து மறைத்த குளங்கள், ரயிலைக் கண்டதும் முகத்தைத் திருப்பி முதுகைக் காட்டிக்கொண்டு குளிக்கிற பெண்கள் - இந்தக் காட்சிகளெல்லாம் அப்போதே மறைந்தாயிற்று. மணி, மூன்றுக்குமேல். இலைகளைப் பூவாக்கிக் காட்டும் 'முஸண்டா'ச் செடிகள், இந்தப் பக்கமெல்லாம் பற்றை பிடித்துப் போயிருக்கின்றன. அடியில் நாயுருவியும், இன்னும் ஏதோ பெயர் தெரியாத பரட்டைச் செடிகளும்.

விடாப்பிடியாய், ஒரே சீராய், ஒன்றையொன்று துரத்துகிற ரயில் பெட்டிகளின் நிழல்கள். மேட்டில் ஏறி, பள்ளத்தில் வழிகிற நிழல்கள்....

படாரென்று கதவு வந்து முதுகில் மோதியது. கந்தசாமி திடுக்கிட்டுத் திரும்பினான்.

"மச்சான், இப்பிடி நாங்கள் இருக்கிறது, சரியான ஆபத்தடாப்பா.... தற்செயலாய்த் தவறி விழுந்தா, அந்திரட்டிக்கு எலும்பு கூட எடுக்கேலாது !...."

ரயில் போட்ட சத்தத்தை மீறி, இது கந்தசாமியின்

காதில் விழ வேண்டியிருந்ததால், வரதராஜா சத்தம் போட்டுச் சொன்னான்.

“இந்தக் கதவே எங்களை அடிச்சு விழுத்தும் போலை கிடக்கு....”

இத்தனை நீள ரயிலில், இருப்பதற்கு இரண்டு இடங் கிடைக்காமல், ‘கொம்பாட்மென்’ ரின் இந்த வாசலில் இருவரும் குந்திக் கொண்டிருந்தார்கள் - படிகளிற் காலைப் போட்டு, கைப்பிடிக் கம்பிகளில் கைகளைச் சுற்றிப் பிடித்து, ஆளை ஆள் இடித்து நெருக்கியபடி.

‘புஃபே’க்குக் கூடப் போகப் பயமாயிருக்கிறது. போனால், இந்த இடமும் போய்விடும்.

வேகம், எப்போதுமே, ஓர் உற்சாகத்தை ஏற்படுத்து கிறதுதான் - கரியும் புழுதியுமாய் முகத்தில் மோதி, நீண்ட தலைமயிரைப் பின்னுக்குப் பறக்கச் செய்கிற அந்த வேகமான காற்று, மனதின் சோர்வு கவலையெல்லாவற் றையுங்கூட அடித்துச் செல்வதைப் போல.

“மச்சான், நல்லா உலாஞ்சுது.... கவனமா இருந்து கொள்....” என்றான் வரதராஜா மீண்டும். இந்த வேகத்தால் ஏற்படுகிற உலாஞ்சல் உண்மையிலேயே, அவனுக்குப் பயத்தைக் கொடுத்தது.

“அந்தப் பெட்டையளைப் பாரடா....!” என்றான் கந்தசாமி.

ஓலை வேய்ந்த ஒரு வீட்டின் விருந்தையில், வெள்ளை அரைச் சுவருக்குப் பின்னால் நின்ற இரண்டு மூன்று இளம் பெண்கள், இந்த ரயிலுக்குத்தான் - ஆனால், இன்னொரு பெட்டியை நோக்கிக் கையசைத்துக் காட்டிக் கொண்டிருந் தார்கள்.

“வெங்காயங்கள்....” என்றான் வரதராஜா.

அந்த வீடு ஏதோ ஒரு சிற்றூரின் தொடக்கம்-

அல்லது, முடிவு-போலிருக்கிறது. அதைத் தாண்டியதும், ஒரு புளிய மரம். கந்தசாமி கம்பியைப் பிடித்திருந்த கையைக் கவனவாகத் தளர்த்தி, கைலேஞ்சியை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

புளிய மரத்தை அண்டி, மீண்டும் தெல்லுத் தெல்லாக வீடுகள். கல்வீடு, மண்வீடு, ஓலைவீடு, ஓட்டுவீடு - எல்லாமே சின்னதாக.

இருந்தாற்போல் வண்டியின் வேகம் குறைய ஆரம் பித்தது. அரைக்கரைவாசி மரங்கள் வட்டுச் சரிந்து பட்டுப் போய்க் கொண்டிருக்கிற ஒரு இளந்தென்னந்தோப்பின் அந்தப்பக்கம், தண்டவாளத்திற்குச் சமாந்திரமாய்த் தெரிந்த தார்ரேட்டில், வேகங்குறைகிற இந்த ரயிலை முந்துவதா முடியாது? என்பதுபோல், பழைய கார் ஒன்று அநாவசிய பதட்டத்துடன் ஓடிக் கொண்டிருக்கிறது.

ரயில் பெட்டி ஜன்னல்களுடே முளைக்கிற முகங்கள். மெல்லமாக இந்த வண்டி நகர்கிற தண்டவாளத்தின் பக்கத்தில், இதற்கு வழிவிட்டு விலகி, அண்ணாந்து பார்த்துக் கொண்டு நிற்கிற கூலியாட்கள் தெரிகிறார்கள். கைகளில் மண்வெட்டி, பிக்கான், சவள்.

"ஏதோ தண்டவாளம் றிப்பெயர் போல இருக்கு.... அதுதான் இவ்வளவு மெதுவாகப் போகுது...."

"இன்னும் எவ்வளவு தூரத்துக்கு இப்பிடி ஊரப் போகுதோ?...."

சலித்தபடி, கந்தசாமி முன்னால் வளைந்து, என்ஜின் பக்கம் எட்டிப் பார்த்தான். வலதுகால் செருப்பு, நழுவுவது போலிருந்தது. படியோடு சேர்த்துக் காலால் அழுத்திப் பிடிக்க முயலும்போதே, அந்த ஸ்லிப்பர் வழுக்கி விழுந்து விட்டது!

தண்டவாள மேட்டின் சரிவில் விழுந்த செருப்பு, உருண்டு கீழே போனது. கையிலிருந்த மண்வெட்டியைப் போட்டுவிட்டு ஒரு தொழிலாளி ஓடிவந்தான்.

“அல்லண்ட மாத்தயா !....” செருப்பைத் தூக்கி, இவர்களிடம் வீசினுன். செருப்பு சரியாகப் பறந்து வந்து, அடுத்த பெட்டியில் மோதித் தெறித்து, மீண்டும் ஒரு ஆமணக்கஞ்செடியின் அடியில் போய் விழுந்தது. அந்த மனிதன், ஆமணக்கிடம் ஓடிவந்தான்.

“மச்சான், ரயில் ‘ஸ்பீட்’ எடுக்குது....” என்ருன் வரதராஜா.

“ச்சாய்க் !....” என்ற கந்தசாமி, சடாரென்று இடது கால் செருப்பைக் கழற்றி, அந்த காட்டாமணக்கஞ் செடியை நோக்கி, பலங்கொண்ட மட்டும் வீசி எறிந்தான்.

‘கணையாழி’ - பிப்ரவரி ‘77’

## 2

# இடையில் ஒரு இருபது வருஷம்

அந்த அணில் செத்துப் போய்த் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தது. வெள்ளையும் வயலற்றுமாகப் பூச் சுமந்து வளைந்து சரிந்து வகுப்புத் தாழ்வாரத்திற்கே வந்திருந்த சீமைக் கிழுவங் கொப்புகளில் ஒன்றில் இந்தத் 'தற்கொலை' நிகழ்ந்திருந்தது.

வகுப்பைச் சுற்றி அரைச்சுவர்-நெஞ்சளவு உயரம். மேலே திறந்தபடி. உள்ளே நுழைந்ததும் கண்ணிற் படுகிற மாதிரி-வகுப்பில் எங்கிருந்து பார்த்தாலும் தெரியக் கூடிய மாதிரி - அந்த அணில் தொங்கிக் கொண்டு காற்றில் இலேசாக அசைந்தது.

பெரிய அணில். வெண்மையான வயிற்றுப் பாகம் வகுப்பைப் பார்த்துத் திரும்பியிருக்க, குறண்டின பின்னங் கால்களிரண்டினடியிலும் அது ஆண் என்பதற்குப் பெருத்த சாட்சியந் தெரிந்தது. புசுபுசுவென்று சணைத்துத் தொங்கிய வாலில் கட்டியிருந்த கடதாசித் துண்டில் பெரிதாக மையினால் எழுதியிருந்தது- 'காதலிலே தோல்வியுற்றான் காளை யொருவன்' என்று.

வழக்கம் போல அன்றைக்கும் பெட்டைகள் தான் லாப் பிலிருந்து முதலிற் திரும்பி வகுப்புக்கு வந்தார்கள். பிறகு பெடியன்கள்......

எல்லாருக்கும் பின்னால் - கடைசியில் - நல்ல பிள்ளை களாக வந்து கொண்டிருந்த எனக்கும் ஐயருக்கும் வகுப்பில் வெடித்த அமளிகள் வடிவாகக் கேட்டன.

ஆனால், கெட்டகாலம், அடுத்த வகுப்பறையில் பிரின்சிபலுடைய பாடவேளையாய் அது இருந்தது.

## 2

விசாரணை தொடங்கிய போது, வழமைபோல நியாய மாகவே-- சந்தேகம் எங்கள் பக்கந் திரும்பியது. நான் முதல் எதிரியாகவும் ஐயர் இரண்டாவது எதிரியாகவும் ஆனேம். 'பொட்னி' சுப்பரின் சாட்சியம் எங்களுக்கு மிகப் பாதகமாய் அமைய நேர்ந்தது. ஆய்வுகூட வேலைக்காக, பாட நடுவில். ஸீஸல் பினியா -- மயிற்கொன்றை-- பூத் தேட எங்களை அனுப்பியதை அவர் சொன்னர்.

இந்த அணில் கூட கொன்றையடியில் தான் செத்துக் கிடந்தது.

## 3

ஜி. ஸீ. ஈ. சாதாரண வகுப்பிலுங்கூட, எங்களுக்கு ஒழுங்கான ஆய்வுகூடப் பயிற்சி இருந்தது. பிரின்சிபலின் மகன் எங்கள் வகுப்பிலிருந்தான் என்பதை இதற்குக் காரண மாக அப்போது சொன்னர்கள். எப்படியோ, விஞ்ஞானப் பாடங்கள் நான்கிலும். ஒவ்வொன்றுக்கும் கிழமையில் ஒரு தரம், டபிள் பீரியட் வேளைகளில், ஆய்வுகூட வேலை இருக் கவே இருந்தது.

சுந்தரராமன் பிராணியியல் எடுத்தார். சேவ் எடுத்த தாடைகள் பச்சையாய்த் தெரியும்: நல்ல சிவலை. என்றைக்கும் எங்களால் மறக்கப்பட முடியாத வலு அருமை யான மனுசன். இந்தியாவில் சொந்த ஊர். படிப்பிக்க வந்த வருக்கு யாழ்ப்பாணத்தில் ஏதோ பிடிப்பு ஏற்பட்டு, இங்கேயே தங்கிவிட்டார். அவரும் ஐயர் தான் என்று சொன்னர்கள். இதனல், எனது கூட்டாளி ஐயரை. மற்றெந்த மாஸ்ரராலும் முடியாத விதமாக--

'ஏண்டா, ஷர்மா....' என்று கூப்பிட இவரால் முடிந்தது.

எங்களைப் பொறுத்தவரையில், சுந்தரராமன் ஒரு விதி விலக்கு. தவளை, எலி, சுரு, நாக்கிளி, கரப்பொத்தான் எல்லாவற்றையும் அளைந்து டிஸெக்ற் செய்கிற பிராமணர். இந்தச் சங்கடம் எங்கள் ஐயருக்கு அப்போது நேரவில்லை. ஸ்பெசிமன்களைப் பார்த்துக் கீறுகிற வேலை மட்டுந்தான் அப்போதைய எங்கள் மட்டத்திற்கு இருந்தது.

## 4

அன்று--அந்த அணில் தொங்கிய அன்று,விசாரணை முடிவில், இரண்டாம் எதிரி விடுதலையானுர். 'செத்த அணிலை ஐயர்ப்பெடியன் தொட்டிருக்க மாட்டான்' என்ற முடிவுக்கு பிரின்சிபல் வந்திருந்தார். அது சரி. அணிலின் தலையில் நான் சுருக்குப் போட்டுக் கொடுக்க, கயிற்றின் மற்ற நுனியைத்தான் ஐயர் கிழுவங் கொப்பில் கட்டினுர்.

ஐந்தாறு வருடங்கள் என் வகுப்பு சகாவாக இருந்து, பிறகு என் நல்ல நண்பனுகவும் இருக்கிற இந்த, ஜே. கே. சர்மா என்கிற ஐயர் சம்பந்தமாக என்றைக்கும் எனக்கு முதலில் நினைவுக்கு வருவது, இந்த அணில் விவகாரந்தான். பிறகு, சுந்தரராமன்.

## 5

நாக்கிளிப் புழுவுக்கு உடலெங்கும் 'ஸீற்ரு' இருக்கிறது. ஸீற்ரு-- பற்ற உதவும் சின்னமுள்ளு. நீளமாக இழுபட்ட 'எஸ்' வடிவம். ஸீற்ருவைக் கரும்பலகையிற் கீறிக் காட்டி, அதன் செயற்பாட்டையும் சுந்தரராமன் விளக்கிக் கொண்டிருந்தார்.

'இட்ஈஸ் எல்லோயிஷ் இன் கலர்........'

'க்ளுக்' என்று சிரித்தார் ஐயர். அமைதியாக இருந்த வகுப்பில் இது பெரிதாக ஒலித்தது.

சுந்தரராமன் கையிலிருந்த சோக்கட்டியை மேசையில் விசிறி விட்டுத் திரும்பியபோது, ஐயர் சொண்டைக் கடித்துக் கொண்டு கரும்பலகையிலிருந்த ஸீற்ருவைப் பார்த்து, தனது கொப்பியில் வலு ஸீரியஸாகக் கீறிக் கொண்டிருந்தார்.

'ஏண்டா. ஷர்மா....?' சுந்தரராமன் கிட்டவந்து. ஐயருக்கு முன்னுல் நின்று கேட்டார்.

'........ஏன் சிரிச்சே, நீ?'

'ஒண்டுமில்லே சேர்........' எழும்பி நின்று. இணக்கமான புன்சிரிப்புடன் சொன்ஞர், ஐயர். காது நுனிகள் செவ்வரத்தம் பூவாய்ச் சிவந்திருந்தன.

'சொல்லு........... ஒய் டு யூ லாஃப் ?'

ஐயரால் இப்போதும் தாங்க முடியவில்லை. அடுத்தாட்டம் கிளுக்கிட்டார்.

சுந்தரராமனுக்கு எப்படி இருந்திருக்கும்?

சளாரென்று கன்னத்தில் ஒரு அடியும், பாடம் முடியும் மட்டும் ஐயர்-ஒரு ஜி. ஸி. ஈ. வகுப்பு மாணவன்-முழங்காலில் நின்றதுமாய் இந்தச் சம்பவம் முடிவடைந்தது.

தன்னை மீறி வந்த சிரிப்புகளுக்காக, ஐயர் கனகாலம் கழிவிரக்கப்பட்டுக் கொண்டிருந்ததை நானறிவேன். ஆனுலும் இரண்டு விஷயங்களை நினைத்து, அதனூடே அவர் ஆறுதலுங் கொண்டார்: ஒன்று, சிரித்த காரணம் சுந்தரராமன் மாஸ்ரருக்குத் தெரியாமலே போனது; மற்றது தான் வாங்கிய அடி.

## 6

ஐயரை நான் முதலிற் சந்தித்தது, ஐம்பந்தெட்டாம் ஆண்டில், அது வடிவாக நினைவிருக்கும். அப்போது நாங்கள் ஏழாம் வகுப்பு. 'கப்பலேறிய தமிழர்கள்' என்று

எங்களால் பிறகு அழைக்கப்படத் தொடங்கிய எட்டுப் பேரில் ஒருவராக இவரும் வந்தார்.

அந்த ஆண்டுக் கலவரத்தால் கொழும்புப் பள்ளிகளுக்கு முழுக்குப் போட்டுவிட்டு ஊரோடு வந்த இந்த எண்மருக்கும் எங்களுக்கும் முக்கியமாக மூன்று வித்தியாசங்களிருந்தன: தமிழில், இங்லீஷில், காலில்.

எட்டாம் வகுப்புக்கு வருவதற்குள்ளாகவே ஐயர் என் நெருங்கிய கூட்டாளியாகிப் போனார். எங்களுக்குள் முதலில் ஒத்துப் போனது சாப்பாடு.

தினசரி மத்தியான நேரத்தில், சரைகளையும் சாப்பாட்டுப் பெட்டிகளையும் வாங்குகளில் திறந்து வைத்துக் கொண்டு பெடியன்கள் வெட்டத் தொடங்குகிற வேளைகளில் எனக்குப் பக்கத்தில்தான் அவரால் பயமில்லாமல் உட்கார்ந்து சாப்பிட முடிந்தது. நான் பிறவிச் சைவம்.

முந்திப் படித்த பள்ளி, பழைய சிநேகிதர்கள், தெஹிவளையில் குடியிருந்த வீடு, தகப்பனின் உத்தியோகம், தங்கள் குடும்பம் கலவர காலத்திற் தாங்கள் பட்ட அந்தரம், றோயல் கல்லூரி அகதி முகாம், கப்பற் பயணத்தில் காய்ச்சலும் சத்தியும் வந்தது. காங்கேசன் துறையில் இறங்கியது என்று எல்லாவற்றையும் அவர் எனக்குப் பரிச்சயமாக்கி விட்டிருந்தார்.

குழப்படிகளிலும் சாப்பாட்டிலும் மாத்திரந்தான் என்றில்லை, அந்தச் செத்த அணிலை நாங்கள் அவ்வளவு அலங்கோலம் பண்ணி அவமதித்திருக்கக் கூடாது என்று, அதன் தற்கொலைக்கு அடுத்த நாளில் அதன்பால் இரக்கங் கொண்டதிலுங்கூட, நாங்கள் ஒத்தேபோனோம்.

ஜி. ஸீ. ஈ. யைத் தாண்டியபிறகு, எங்கள் வழிகள் பிரிந்தன.

## 7

இடையில் கொஞ்சக் காலம், ஆளை ஆள் சந்திக்கக் கூடவில்லை. பிறகு, ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு, ஐயரை மீண்டும் கண்டேன். வேலை மாறிக் கொழும்பிற்கு வந்து விட்டதாயும், வெள்ளவத்தையில் இருப்பதாயும் சொன்னார். நான் மருதானையில் இருந்தேன்.

நகர வாழ்வின் அவதியில், கதைக்கக் கூட முடியாத அவசரங்களில் ஆளை ஆள் சந்திப்போம், எப்போதாவது, எங்கேயாவது, பஸ்ஸில், ரயிலில்.

## 8

இப்போதும் கிட்டடியில் ஒருதரம் ரயிலில்தான் சந்தித்தேன். எழுபத்தேழு ஓகஸ்டில் கடைசிப் பகுதி. ஒரு வியாழக் கிழமை.

அந்த நாட்களில் வீசிக்கொண்டிருந்த பெரும் புயலில் -அது தந்த கலக்கத்தில் - எந்த நிமிடம் என்ன ஆகுமோ என்ற அந்தரந் தாங்க முடியாமல், வருவது வரட்டும் என்ற முடிவுடன். நான் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்டிருந்தேன்.

கோட்டை ஸ்ரேஷனில் ரயிலைப் பார்த்துக் காத்திருந்த கும்பலில் ஜே. கே. சர்மாவும் இருந்தார்.

இம்முறை, அகதி முகாமுக்குப் போகாமலே வந்து விட்டதாகச் சொன்னார்.

'மல்லிகை' - ஏப்ரல் '79

# நிருபணம்

கந்தசாமியும் இன்னும் ஐந்தாறுபேரும் வெளியி லேயே நின்றார்கள். உள்ளுக்கு நல்ல சனமாயிருக்கும் போல இருந்தது. மார்க்கண்டு, சைக்கிளில் வெய்யில் படாமல் வேலிக்கரை யோரமாக, ஒழுங்கையிலேயே நிறுத்திப் பூட்டினார்.

'டாண்டாண், டுட்டுடு....' என்று பறை அதிர்ந்து கொண்டிருந்தது. பெண்களின் ஒப்பாரி, பெரிதாக -- இரைச் சலாக -- ஏறி இறங்கிக் கேட்டது.

மார்க்கண்டரைக் கண்டதும், "என்ன, அண்ணை இப்பதானே வாறியள்?" என்று கேட்டபடி அவரோடு கூடிக் கொண்டு கந்தசாமியும் உள்ளே போனான்.

படலைக்கு இரண்டுபக்கமும் வாழை கட்டியிருந்தது. முத்தையர் வீட்டுத் தலைவாசல் நிரம்பி முற்றத்திலும் ஆட்கள் குழுமி நின்றார்கள். வீட்டுத் திண்ணையில் பெண்கள் கூட்டம். இங்கிருந்து பார்த்தபோது, கட்டிலும் கட்டிலிற் பெட்டியுந் தெரிந்தன. திண்ணைக்கும் தலைவாசலுக்குமிடையிலிருந்த முற்றத்தில் பந்தல் போட்டு, வெள்ளை கட்டியிருந்தது.

"உவன் பாவிக்கென்ன, முப்பது வயதிருக்குமே?".... என்றார் மார்க்கண்டு. குரல் அநுதாபத்தில் ஊறி வந்தது.

"போன ஐப்பசிதான், முப்பது — என்னிலும் சரியாகப் பத்துவயதுக்கு இளமை...."

"அண்டைக்கும் கோவிலடியிலை கண்டு கதைச்சவன், பாவி - அடிச்சுவளத்திஞலும் ஆறுமாதம் செல்லும்...." மார்க்கண்டர், எட்டி வேலியடியில் எச்சிலைத் துப்பிவிட்டுப் பிறகு சொன்னூர்:

"....ஆனு; அந்த உடம்புதான் கூடாது!"

இப்ப இந்த ஹாட் அற்ராக்தானே ஒண்டு - புதுசா - நிண்ட நிண்டபாட்டிலை எல்லாரையும் விழுத்துது ...."

ஒரு சின்னப்பெடியன் சுருட்டுத்தட்டத்தைக் கொண்டு வந்து நீட்டினுன்.

"என்னட்டை இஞ்சை கையிலை கிடக்கு.... நீ, எடு...." என்ருர் மார்க்கண்டு.

சுருட்டைப் பத்திக்கொண்டு, நெருப்புப்பெட்டியைத் தட்டத்தில் போட்டபோது அவர் கேட்டார்.

"மெய்யே, கந்தசாமி .... இவனுக்கு இதெப்படி நடந்தது?"

கந்தசாமி, முத்தையருக்குப் பக்கத்துவீடு. அவன் சொன்னுன்.

"நேற்றுச் சனிக்கிழமையெல்லே....இரண்டு மணிக்குக் கடையாலை வந்தவனும்.... வந்து, குளிச்சுச் சாப்பிட்டுட்டு பேப்பர் வாசிச்சுக்கொண்டு கிடந்தவன்.... இருந்தாப்போலை, 'நெஞ்சுக்கை ஏதோ செய்யுது.... கொஞ்சத் தண்ணி தாங்கோ' - எண்டு கேட்க, தண்ணியோட தங்கச்சியார் வந்து பாக்கிறதுக்குள்ளை, ஆள் பேச்சுமூச்சில்லை .... பிறகென்ன? சும்மா ஒரு மன ஆறுதலுக்குத்தான் ஆஸ்ப்பத்திரிக்குக் கொண்டுபோனது...."

இரண்டுபேரும் பெருமூச்சுவிட்டார்கள்.

"என்னமாதிரி - தங்கக் கம்பிபோலை - பெடியன் .... மிதிச்ச இடத்துப் புல்லுச்சாகாது.... மல்லன் மாதிரி ஒரு பிள்ளையை இந்த வயதிலை தூக்கிக் குறுக்கிறதெண்டா— முத்தையருக்கு இடிவிழுந்த மாதிரித்தான் இருக்கும்...."

"பின்னை? தாய்க்காரி நேற்றுக் கிறுதிதூக்கி எறிஞ்சு படுத்தபடுக்கைதான் — இன்னும் எழும்பேல்லை...."

மாமர நிழலில் வெட்டிப் போட்டிருந்த பச்சைத் தென்னோலையில் போய்க் குந்தி, கொஞ்சநேரத்தின் பிறகு மார்க்கண்டர் கேட்டார்.

"இப்ப எப்பிடி, உன்ர மகனுக்கு?"

"அவனுக்கு என்னண்ணை.... அந்தக் குறையொண்டைவிட வேறையொரு வித்தியாசமுமில்லை...."

"இப்ப - பத்து வயதாச்சோ?"

"ஓ.... நானும் கையெடுக்காத கடவுளில்லை. காட்டாத டாக்குத்தரில்லை.... ஆனா, இப்ப தின்னவேலிச் சாத்திரியார் சொல்லியிருக்கிறார்...."

- அவன் புது நம்பிக்கையுடன் சொன்னான்:

"பயப்பிடுறதுக்கு ஒண்டுமில்லையாம்; பிள்ளைக்குப் பன்னிரண்டுவயது முடிய, எல்லாம் தன்பாட்டிலை சரி வருமாம்.... அவர், ஆள் வலு கெட்டிக்காரன்...."

"அப்பிடியே?...." என்றார் மார்க்கண்டர், வெறுமனே.

"இஞ்சபாருங்கோவன், கண்ணுக்கு முன்னாலை...." - கந்தசாமி, தலைவாசலுக்கும் பந்தலுக்கும் பின்னால் தெரிந்த திண்ணையைக் காட்டினான்:

"இவன் பெடியனும் அவரிட்ட தன்ரை சாதகத்தை கிட்டடியிலை ஒருக்காக்கொண்டு போய்க்காட்டினவன்.... அந்த ஆள் பாத்திட்டுச் சொல்லிப்போட்டுது.... 'உனக்குஇப்ப ஒண்டும் நான் சொல்லமாட்டன். முப்பத்தொருவயது முடியட்டும், வா' எண்டு...."

... மார்க்கண்டர் கேட்டுக்கொண்டிருந்தார்.

"பாத்தீங்களே? "என்றான் கந்தசாமி, உற்சாகமாக.

'மல்லிகை'— 1978

# தொடர்ச்சி

பைப்பைத் திறந்ததும் புஸ்ஸென்று காற்றுத்தான் வந்தது. நித்திரைப்பாயில் எழுப்பி, கௌரி சொன்னது சரி. தண்ணியில்லை....விடியற்காலையிலேயே தண்ணியில்லை. எதிர் பாராத பிரச்சினை. சிவத்திற்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. பயமாயும் இருந்தது.

தகரத் தொட்டிக்குள் பார்த்தான். கிட்டத்தட்டக் கால்வாசிக்கும் கீழே. யாருக்குத் தெரியும்? தெரிந்திருந்தால் ராத்திரியே முழுக்க நிரப்பி வைத்திருக்கலாம். ரேடியோவில் தண்ணீர் வெட்டுப்பற்றி ஏதாவது சொன்னார்களோ தெரிய வில்லை. எங்காவது எதிர்பாராமல் குழாய்கள் வெடித்து மிருக்கலாம்.

இன்னும் பல்லுத் தீட்டவில்லை; முகங்கழுவவில்லை; இரண்டு பேருங் குளிக்க வேண்டும். இவ்வளவு தண்ணீருடன் என்ன செய்வது? - குளிக்கிறதைத்தான் பிறகு பார்த்துக் கொள்ளலாமென்றாலும் - கக்கூஸ்?

பக்கத்து வீட்டில் வெறும் வாளிச்சத்தங்கள் கேட்டன என்ன செய்யப் போகிறார்கள்? குழந்தைகள் இருக்கிற வீடு - யமகண்டமாய்த் தானிருக்கும். கிராமங்களைப் போலில்லை; பட்டினங்களைப் போலில்லை; இது நகரம், மாந கரம். 'ஒண்டுக் கிருக்கக்' கூட த்தண்ணீர் வேண்டியிருக் கிறது. இனி எப்போது வருமோ? இன்றைக்கு முழுவதும் என்ன செய்வது? இதைவிட வேறெங்கு கிடைக்கும் தண்ணீர்?

பைப்பைத் திறந்தபடியே விட்டான். வந்தவுடனேயே நிரம்பத் தொடங்கட்டும். பல்லைத் தீட்டத் தொடங்கினான்.

திடீரெனப்பட்டது -

சத்திவேலுடைய வழி சிலவேளை உதவக்கூடும். திருகோணமலை வீட்டில் எப்போதுஞ் சரி வந்திருக்கிறது. இது, கொழும்பு. இந்த ஊரில், இந்த இடத்தில் வருமோ தெரியாது. என்றாலும் தெண்டித்துப் பார்க்கலாம்...

வெளியே வந்து கௌரியைக் கூப்பிட்டான். "சத்திவேலின்ர வேலையைச் செய்து பார்ப்பம்...."

அவள் திரும்பிப்போய், ஒரு சிறிய சிவப்பு பிளாஸ்ரிக் குழாயுடன் வந்தாள். நாலடி நீளம். பைப்பின் வாய்க்குள் சரியாகப் பொருந்தக் கூடியது.

"நல்ல காலமிருந்தா இது சரி வரும்...." கௌரி அதைப் பைப்பில் சொருகினாள்.

வாயிலிருந்த பிரஷை எடுத்துவிட்டு, நுரையைத் துப்பினான். "வடிவாய்ப் பிடிச்சுக் கொள்ளும்...." குளிக்கிற பேணியால் தண்ணீரை மெல்ல அள்ளி, குழாயின் மற்ற முனைக்குள் பத்திரமாக ஊற்றினான்.

ஒரு பேணி தண்ணீர் ஊற்றியதும், குழாய் நிரம்பியது. பிறகு மெள்ள மெள்ள மட்டம் உள்ளே இறங்கியது.

"ஒழுக விடாதேயும்...." என்றான், மீண்டும் கொஞ்சம் அள்ளி, நிரம்பும்வரை ஊற்றினான். இப்போது, மட்டம் குறையாமல் நின்றது. ஒரு அரை நிமிஷம் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

இருந்தாற்போல அவன் "சரி!" என்றான். கௌரி டக்கென்று குழாயைப் பிடுங்கினாள். பைப்பிலிருந்து 'டுர்ர்' ரென்று தண்ணீர் ஒழுகியது. கொஞ்சமாக. ஆனால் ஒழுங்காக, மெல்லிய தாரை.

"சரியா?...." என்று அவள் மகிழ்ச்சியுடன் கேட்கும் போதே அது நின்றுவிட்டது.

"ம்ஹாம்...." என்றான்.

"இன்னொருக்காப் பாப்பம்".

"நீங்களே பிடியுங்கோ...." என்றாள் கௌரி.

ஐந்தாவது தடவைக்குப் பிறகு அவன் சொன்னான்:

"இது இங்க சரிவராது போலயிருக்கு"

"ம்ம்.... நானும் போக வேணும். அங்கை அடுப்பு மூட்டினபடி."

"உள்ளதோட சமாளிக்க வேண்டியது தான்...." சிவம், மீண்டும் பிரஷை எடுத்து வாயில் வைத்தான்.

★ ★ ★

சக்திவேல். இரண்டு வருஷம் கூட நின்றவன். இந்தியாவுக்குப் போனால் வாத்தியாரைப் பார்க்கலாமென்று சொன்னவன் பிறகு ஊருக்குப் போய் ஒன்றரை வருஷமாகிறது. இந்தியாவுக்குப் போனது போகாதது தெரியாது. தோட்டத்து விலாசத்துக்குப் போட்ட தபால்களுக்கு மறுமொழி இல்லாததால், அந்தக் குடும்பமே இந்தியாவின் ஒரு மூலையில், ஏதோ ஒரு ஊருக்குப் போய்ச் சேர்ந்திருக்கும் என்றுதான் படுகிறது. இனி மேல் அவனைக் காணக்கூட முடியாது என்று எண்ணுவதாலேயே கூடுகிற அந்தரம்.

சின்னதுரை அண்ணை அவனை மஸ்கேலியாவிலிருந்து கூட்டிக்கொண்டு வந்தபோது, பன்னிரண்டு வயது என்று சொன்னார். ஆளைப்பார்த்தால் ஒன்பதுக்கு மிஞ்சி மதிக்க முடியாது போலிருந்தது. ஒரு காக்கிக் கட்டைக் களுசானும் சிவப்புச்சேட்டும் போட்டு, ஒற்றைக் கையைக் களுசான் பொக்கற்றுக்குள் விட்டுக்கொண்டு, மற்றக் கையில் ஒரு சின்ன தகர சூட்கேஸைப் பிடித்தப்படி, பிரயாணக் களைப்பே தெரியாதவன் போல நின்றான் சக்திவேலு.

தன்னைப்பார்க்க வந்துநின்ற வீட்டு ஆட்களையெல்லாம், புருவங்களை வளைத்து உதட்டைப் பிதுக்கி ஒரு பெரிய ஆள்போல, சிரியாமல் பார்த்தான். தன் வீட்டு ஞாபகமாக மூளையை விட்டு நிற்கிறுனு என்று பட்டதும் பாவமாக இருந்தது.

"என்ன பேர் மேனே, உனக்கு?"- அம்மா கேட்டாள்.

சின்னத்துரை அண்ணையை முந்திக் கொண்டு மறுமொழி சொன்ஞன்.

"அவங்களிரண்டு பேரையும்போல, இவனும் அழுது கிழுது குழப்படி பண்ணுவானே?"

'அவங்க' ளென்று ஐயா சொன்னது, ரங்கனையும் செல்லத்துரையையும். சின்னத்துரை அண்ணைதான் வீட்டில் கை உதவிக்கு ஒரு பெடிபெட்டை தேவை என்று கூட்டிக் கொண்டு வந்தார்.

"முட்டுப்பட்ட குடும்பம்.... இரண்டு பேரையும் கூட்டிக்கொண்டு போகச் சொல்லி அவங்கள் கரைச்சல் படுத்திஞங்கள், ஆளுக்காள் உதவியாயுமிருக்கும். ஒருத்தன் வீட்டு வேலைக்கும் மற்றவன் தோட்ட வேலைக்கும் நிக்கட்டும்...."

ஒருத்தனுக்கு மற்றவன். சித்தப்பன். கிட்டத்தட்ட ஒரே வயது. இவனிலும் பெரிய பெடியன்களாக இருந்தார்கள்.

ஆனல் சின்னத்துரை அண்ணை அந்தப்பக்கம் போனதுதான் தாமதம், இரண்டு பேரும் வாசற்படியிலேயே குந்திக்கொண்டு அழத் தொடங்கிஞர்கள்.

"நாங்க வீட்டுக்குப் போகப் போறேம் அய்யா...."

ஒரு நாள் முழுக்க அவன்களைப் பிராக் காட்டிய வேலை.

அடுத்த நாள் கார்த்திகை விளக்கீடு. மத்தியானத்துப்பிறகு விளக்கீட்டு அமளிகளில் அவர்கள் அழுகையைக்

கொஞ்சம் மறந்தார்கள் என்று பட்டது. பொழுது பட்டதும் வீடு வாசலெல்லாம் வரிசையாக ஏற்றி வைத்த சுட்டி விளக்குகள் சந்தோஷத்தை கொடுத்திருக்க வேண்டும். கிணற்றடிக்கு ஒன்று, மாட்டடிக்கு ஒன்று, படலையடிக்கு ஒன்று பனம் பாத்திக்கு ஒன்று - என்று சுருட்டி வைத்திருந்த பந்தங்களை எடுத்து கொண்டு புறப்பட்ட போது, தாங்களுங் கொழுத்துவதாக இரண்டு பேரும் வந்தார்கள். ஆட்களை உசார்ப்படுத்துவதற்காக ஒரு பந்தத்தைக் கொடுக்கலா மென்று சிவம் நினைத்தான்

பிறந்ததுக்கு கிணற்றையே கண்டிராமல் வளர்ந்தவன்களை, இருட்டினுற்பிறகு யாழ்ப்பாணத்தின் பாதாளக் கிணற்றடிக்கு அனுப்புவது முட்டாள்தனம். பனம் பாத்தியடிக்கு அனுப்புவதிலும் பிரச்சினை இருந்தது.

"தெரியாத்தனமா உழக்கிக் போடுவன்கள்...."

படலையடிப் பந்தத்தைக் கொடுத்து, அதை எப்படிக் கொழுத்திக் குத்துவது என்றுஞ் சொல்லிக் காட்டி அனுப்பினுன்.

கொஞ்ச நேரத்தில் திரும்பிவந்து, சந்தோஷமாக, "கொளுத்தியாச்சுங்க...." என்ருர்கள்.

கால் மணித்தியாலங் கூடி ஆகியிராது. முன் வீட்டிலிருந்து பொன்னரம்மான் ஓடிவந்தார்.

"எடேய் தம்பி. இதென்ன வேலை? ஆரடா, படலையடியில பந்தங்கொளுத்தினது?"

"ஏன் அம்மான் என்ன சங்கதி?" ஓடிப்போய்ப் பார்த்த போது, படலை வேலி பற்றி எரிந்து கொண்டிருந்தது.

காவோலை. ஆனுல் நல்ல காலம்- மழைக் காலமாயிருந்து, ஓலைகளுங் கொஞ்சம் ஈரமாயிருந்ததால்- நெருப்பு அவ்வளவு பரவவில்லை. ஒரு ஐந்தடி பத்தடி பரவுவதற்குள் எல்லோருமாகத் தண்ணி அள்ளி ஊற்றி, நூர்க்க முடிந்தது.

ரங்கனையும் செல்லத்துரையையும் ஒருவரும் ஒன்றும் சொல்லா விட்டாலுங்கூட, இந்தச் சம்பவம் அவன்களைப் பாதித்திருக்க வேண்டும். அந்த உற்சாகம் போக, அழுகை மீண்டது. அடுத்த நாள் பின்னேரம், பயணஞ் சொல்லிக் கொண்டு பெடியளையும் 'பாத்திட்டுப்போக' வந்த சின்னத் துரை அண்ணை, அவன்களையும் கூட்டிக்கொண்டே போனார்,

★ ★ ★

"இவன் அவன்களைப்போல இல்லை' குஞ்சியப்பு....படிச் சவன், நல்ல உசாரான பெடியன்...." என்றார் சின்னதுரை அண்ணை.

சக்திவேலு, உசாராகத்தானிருந்தான். வலு சுறு சுறுப்பு. வேலை சுத்தம்.

அவனைக் கடைக்கு அனுப்புவது மட்டும் ஆபத்தான வேலையாயிருந்தது. தெருவிலிருந்த 'பயலுக'ளுடன் ஒரு நாளும் ஒத்து வரவில்லை.

கிழமைக்கு ஒரு தரம், 'கே. கே. செல்லமுத்து, இராசாத்தோட்டம், மஸ்கேலியா. என்று புளியங்கொட்டை எழுத்தில் விலாச மெழுதி வீட்டுக்குத் தபால் போடுவான். கே. கே. செல்லமுத்துக்கு முன்னால் 'திரு' போடு' என்று சிவம் சொல்லிக் கொடுத்தான். வருகிற பதில் கடிதங் களுடன், உடுப்புகள், சீப்புக்கண்ணாடி, பழைய சவரபிளேட் டுகள், போளைகள், வெட்டியெடுத்த வாத்தியார் படங்கள்- அவனுடைய தகரப்பெட்டிக்குள் இருந்தன.

வீட்டுக்கோடியில் ஒரு தோட்டஞ் செய்தான், ஒரு கொடித்தோடை நெட்டு, இரண்டு மூன்று சோயா அவரைக் கொடிகள், கொஞ்சச் செவ்வந்தி என்று ஒரு பாத்திக்குள். அடுப்படித் தண்ணீர் ஓடுகிற வாய்க்கால் கரையில் முளைத் திருந்த எலுமிச்சங்கன்று ஒன்று இவற்றுடன் பிறகு சேர்ந்து கொண்டது. கடைக்குப் போய் வருகிறபோது வழியில் பச்சையாகச் சந்திக்கிற தடிகண்டெல்லாம் இந்தப் பாத் தியில் இடம் பெறும். முக்கால்வாசி முளைக்காது.

தெருவிலிருந்து சண்டைகள் செடிகள் இவற்றைவிட இன்னென்றையும் அவன் கொண்டு வந்தான். ஒரு நாய்க் குட்டி பந்து போலிருந்தது கறுப்பும் வெள்ளையுமாய்ச் சடை. நீலக்கண்கள். குருடாயிருக்குமோ என்று பட்டது. ஆனல் அப்படியில்லை. பேக்கரிக்கு முன்னல் கத்திக்கொண்டு கிடந்ததாகச் சொன்னன்.

இதன் பிறகு தோட்ட வேலையின் பாதிநேரத்தை நாய்க்குட்டி எடுத்துக் கொண்டது. இரண்டு மொழிந்தால், வாசலடியில் போய்க் குந்தியிருந்து, அன்றன்றைய பேப் பர்களை எடுத்து வைத்து சினிமா விளம்பரப் பக்கத்தைப் பாதிநேரம், தெருவைப் பாதிநேரம் பார்த்துக் கொண் டிருக்கிற வேலை.

"எடேய், நீ.... படிச்ச நீ பேப்பரை வாசிச்சுப்பாரன்? உதேன், உப்பிடிப் படத்தைமாத்திரம் வைச்சுப் பார்த்துக் கொண்டிருக்கிருய்?" என்கிற மாதிரி யாராவது ஏதுஞ் சொல்லுமட்டும்.

தோட்டத்துப் பள்ளியில் ஐந்தாவது வகுப்புப் படித்துப் பாஸ் பண்ணியிருந்தாலும், தமில் மட்டும் தான் ஓரளவு எழுதப் படிக்க வந்திருந்தது கணக்கில் மூன்றும் வகுப்பு மட்டங்கூட இல்லை. இங்கிலீஷ் ஏபிஸிடி, கற்,றற் மற் இங்கிலீஷ் கொஞ்சம் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்து அதன் பிறகு 'அதைச் சொல்லிக் கொடுக்கிற நேரம், கணக்குச் சொல்லிக் கொடுத்தாலும் அவனுக்குப் பிரயோசன மாயிருக்கும்' என்று முடிவெடுக்கப்பட்டது. நாலாம் வகுப்புக் கணக்குபுத்தகமொன்றும் சிலேற் பென் சிலும் வாங்கிக் கொடுத்து,

"ஒவ்வொரு கணக்காகச் செய்து பார். விளங்கா ததைக் கேள்" என்று சிவம் சொன்னன்.

இதன் பிறகு இரவில் விளக்குப் போட்டதும், வாசலடியில் போய்க் குந்தும் போது புத்தகம் சிலேற்றையும்

எடுத்துக் கொள்வான். ஒன்றிரண்டு கணக்குக் கேட்ட ஞாபகம்.

உஸ்ஸென்று பைப் சீறியது. தண்ணிவரப் போகுதோ? இன்னும் கொஞ்ச சீறலின் பிறகு தண்ணி வந்தது. தண்ணி தான்!

சிவம் பரபரத்து எழுந்து, பேணியில் அதை ஏந்தினான். -கறளும் வரலாம்.

ஆனால் வரவில்லை. சுத்தமான தண்ணி. வழமை போல் வந்தது.

பிரச்சனை தீர்ந்த ஆறுதல். எவ்வளவு சந்தோஷம். பைப்பை முழுக்கத் திறந்து விட்டான். 'நின்றாலும்-'.

நேரம் போனாலும் குளிக்கத்தான் வேணும் என் திருந்தது.

★ ★ ★

சக்திவேல், நெடுகக் கணக்குப்புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு அதற்குள்ளே பார்த்தபடியே இருக்கிறான் என்று ஒரு நாள் சிவம் மெள்ளப் பின்பக்கமாகப் போய் எட்டிப்பார்த்தான்.

இடுப்பில் கையை வைத்தபடி, தலையைச் சாய்த்துக் கொண்டு, விரித்த புத்தகத்துக்கிடையில் வாத்தியார் நின்றார்.

வாத்தியாரைப் பார்ப்பதும், சைக்கிள் ஓடப் பழகு வதும் அவனுடைய இலட்சியங்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணம் மலைக்குப்போன பிறகு, ஒரு நாள் செல்லமுத்து விடமிருந்து தபால் வந்தது.

நாங்களெல்லோரும் இந்தியாவுக்குப் போக ஏற்பாடு செய்கிறோம். அது காரியமாக எல்லாரும் ஒரு தரம் கண்

டிக்குப் போய் வர வேண்டியிருக்கிறது. சக்திவேலுவும் வரவேணும். அனுப்பினுல், அந்த வேலையுடன் பொங்கலையும் முடித்துக் கொண்டு, இரண்டு கிழமைக்குள் திரும்பக் கொண்டு வந்து விடலாம்.

'செல்ல முத்துவுக்குப் பைத்தியம்' என்று ஏச முடிந்தது என்ன முட்டாள்தனம்? கிடைத்த இலங்கைப் பிரஜா உரிமையை உதறிவிட்டு முன்பின் காணுத ஊருக்குப் போய்விட எவனுவது யோசிப்பானு?-அதுவும் அதற்காக இத்தனை ஆயிரம் பேர் தவங்கிடக்கும் போது?

இப்போது - இந்த இனக் கலவரம் முடிந்து - யோசிக்கையில், செல்ல முத்து செய்ததென்னவோ புத்திசாலித் தனமான காரியமாகத் தெரிகிறது.

மகனைத் திரும்பக் கூட்டிக் கொண்டு வந்த ஆளிடங் கேட்டபோது -

"நமக்குப் பிரஜா உரிமை கிடைச்சு என்னுங்க பிரயோஜனம்? இங்க சொத்து சுகம் ஒண்ணுமில்லீங்களே. தோட்டத்திலேயும் இப்ப ஒழுங்கா வேலை கிடைக்குதில்லை...."

"உங்களுக்கு இருக்க இடமில்லையெண்டா, யாழ்ப்பாணத்துக்கு வாங்கோ-குடியிருக்கிறதுக்கு இரண்டு பரப்புக் காணி தரலாம். அங்கை வடிவா வேலை செய்து பிழைச்சுங் கொள்ளலாம்...."

செல்லமுத்து ஒரு கணம் நிதானித்தார்.

"அது சரிதாங்க... ஆனு, ஊரிலே நமக்கு உறவுக் காரங்க இருக்காங்க.... அங்க போய்ட்டா...."

"ஊரா? இந்தியாவிலேயா?...."

"ஆமாங்க...." - ஏதோ ஒரு ஜில்லா பேரையும் ஊரையும் சொன்னுர்.

"எப்பவாவது இந்தியாவுக்குப் போயிருக்கீங்களா?...."

"இல்லீங்க.... நா ஒரு நாளும் இதுவரையில போனதில்லீங்க...."

"அப்ப -?"

"நம்ம தாத்தா ஊருங்க, அது. தாத்தா அங்கேயிருந்துதான் கண்டிக்கு வந்தாரு. அப்புறம் நம்ம தகப்பன் இரண்டு தரம் போய்ப் பர்த்துட்டு வந்திருக்காரு...."

"உங்கட தகப்பன் உயிரோட இருக்கிருரா?"

"இல்லீங்க.... அவரு செத்து நாலஞ்சு வருஷமாயிட்டுது...."

"எதுக்கும் நல்லா யோசிச்சு முடிவெடுங்கோ.... நீங்க எப்ப வாறதெண்டாலும் இடந்தரலாம்...."

இந்தக் கதையின் பிறகு, சத்திவேல் அடிக்கடி, 'இந்தியா', 'இந்தியா' என்று பேசத் தொடங்கியிருந்தான்.

"இந்தியாவுக்குப் போனுல் வாத்தியாரைப் பார்க்கலாம்" என்று அவன் சொன்னதாக சின்னத் தங்கச்சி சொன்னுள்.

சத்திவேலு ஊருக்குப் போய்விட்டு வந்தபோது, ஒரு கட்டு 'பூஞ்சிடி' கொண்டு வந்திருந்தான். டெய்லியாஸ், காணேஷன், பச்சை ரேஸ் - என்று இன்னும் என்னென்னவோ. திருகோணமலையின் வெக்கையில் அந்த மலைநாட்டுத்தாவரங்கள் மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றன. தாங்க முடியாத கோடைகளில் அந்த ஊர்த் தண்ணீர்க் குழாய்களும் அடிக்கடி வரண்டு போய்விடும்.

இப்படியான ஒரு நாளில், தண்ணீர் ஒரு பிரச்சினையாகித் தத்தளித்த வேளையில் சத்திவேலு ஓடி வந்தான்.

"அண்ணே, அண்ணே.... இங்கே வந்து பாருங்களேன்!"

சிவம் போய்ப் பார்த்தபோது, இந்த மாதிரி—பைப்பில் சொருகிய பிளாஸ்ரிக் குழாயிலிருந்து தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

தண்ணீர் இல்லாத வேளைகளில் குழாயைச் செருகி, வாயால் அதை உறிஞ்சியதற்காக இரண்டு மூன்று தரம் ஏச்சுவாங்கியிருக்கிருன்.

இது எப்படி சாத்தியமாகும்? தெரு மெயின் லைனின் அடியில் நீர் மீந்து தேங்கியிருக்கலாமென்றும், இங்கு ஊற்றுகிற நீர் அதனுடன் போய்ச் சேர்கிற நேரத்தில் தொடர்பு அருமல் இழுவையை உண்டாக்குவதால் அது உறிஞ்சப்படலாமென்றும் சிவத்துக்குப்பட்டது.

“சக்திவேலு, தண்ணிச் சத்தங்கேட்காம வாளியைத் தள்ளி வை....அக்கம் பக்கத்து வீடுகளிலை கேட்டா யோசிப்பினம்....” என்று பெரிய தங்கச்சி சொன்னுள்.

★ ★ ★

எல்லாம் முடித்துக் கொண்டு சிவம் குளிக்கிறஅறைக் கதவைத் திறந்து வெளியே வந்தபோது, “நேரம்-ஏழு மணி, ஐந்து நிமிடம்” என்று ரேடியோ சொன்னது.

“கிட்டத்தட்ட முக்கால் மணித்தியாலத்துக்கு மேலை, இதுக்குள்ளை போயிருக்கு என்று உணர்ந்தான். இன்றைக்கும் ஏழரை மணி பஸ்ஸைப் பிடிக்க முடியாது போலிருந்தது.

‘கணையாழி’ ஜூலை - 1979

# பழி

நேற்றுக் காலையில் அலுவலகத்தில் தொடங்கிய அந்த மனநோவு, நாள் முழுவதையும் பாழடித்தது போதாதென்று, இரவில் நுளம்புக் கடியல் அருண்டபோது கூட, நினைவு வந்து நித்திரையை வேறு வெகு நேரம் நாசமாக்கியது. பன்னிரண்டரையோ. ஒன்றோ மணியிலிருந்து வெகுநேரம் விழித்திருந்தான். இருளோடு சேர்ந்து— இருளால் இன்னுங் கனங் கொண்டு அழுத்தியது நோவு. ஆனால், அதில் - அந்த வீணான விழிப்பில் கூட ஒரு பயன் விளைந்தது, இந்த யோசினை பளிச்சிட்டது அப்போதுதான்.

★

நினைக்கிற போதெல்லாம் கண்கள் கூடக் கலங்கு கிறமாதிரி அவனுக்கு நேற்று மனம் வெந்திருந்தது. யாராவது கேட்டால் கட்டாயம் சிரிப்பார்கள்—இதற்கா இப்படி என்று. ஆனால் விஸ்வத்தின் வேலை அந்த அளவுக்குப் பாதித் திருந்தது. விஸ், இப்படித் திட்டம் போட்டுத் தன்னை அவமானப்படுத்தியது போல நடந்ததற்கு - தன்மனதை இப்படிக் குத்திக் காயம் பண்ணியதற்கு-தான் என்ன செய்திருப்பேன் என்று தெரியத்தானில்லை. நினைத்தே நினைத் துப் பார்த்தான், இல்லைத்தான்.

ஏதோ வேலை விஷயமாய் மூர்த்தியுடனும் பராவுடனும் பேசிக்கொண்டிருந்த போது, இவர்களிருந்த இடத்திற்கு வலு ஆர்ப்பாட்டமாய் வந்தான் விஸ்.

'அண்ணே ஒருக்கா வாறீங்களா கன்ரீனுக்கு!' என்று மூர்த்தியைக் கேட்டவன்.

'........பரா, வர்றியா? வாவேன்........' என்ருன்.

உடனே ஒன்றும் புரியாமல், புரிந்ததும் ஏதோ தன்னுள் சுருண்டு போக, பேசாமல் இடத்திற்குத் திரும்பினுன் இவன்.

இரண்டு நிமிடங்கள் கழிய, இந்த மூவருடனும், ஆனந்தனும் சோதியுமாய் கன்ரீன் பக்கமாய்ப் போனதைக் கண்டபோதுதான் அடி பலமாய் அவனுள் விழுந்தது. இந்த ஸெக்ஷனில் ஏழு பேர் தமிழர்கள். எழுபத்தேழாம் ஆண்டுக் கலவரத்துடன் இவர்கள் நெருக்கம் புழக்கமெல் லாம் அநேகமாக இந்த ஏழு பேருக்குள்ளேயே சுருங்கிக் கொண்டிருந்தது. சிவநேசன், பெரியவர்; பொஸ். அவரை யெல்லாம் கன்ரீனுக்கு அழைக்க முடியாது.

அவர்கள் பார்வையால் மறைந்ததும், முதல் தரம் அவதியும் அழுகையுமாய் மனம் பொங்கியது....

ஏனிப்படி என்று தான் தெரியவில்லை, விஸ் பயலுக்கு அடிக்கடி மாறுகிற மூட்தான். என்ருலும் இவனுல் இதை விழுங்கிக் கொள்ள முடியவில்லை....

தன்னில் கூட ஆத்திரம் வந்தது - இந்தமாதிரிச் சின் னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் கலங்கிப் போகலாமா என்று.

★

இன்று பிற்பகல், தேநீர் வேளைக்குக் கொஞ்சம் முன் னதாகவே, ஒவ்வொரு மேசையாகப் போனுன்....

'ஒரு ரீ சாப்பிடலாம்....வாறீங்களா?....

'என்ன விசேஷம்?' நட்பும் ஒப்புதலுமாய்த் திருப்பிக் கேட்க,

'கன்ரீனிலை சொல்லுறனே'

நேற்றுக் காலை எல்லோரும் கூடிய போது, தன் பிரசன்ன மின்மையை இவர்கள் கூடக் கவனித்திருக்க

மாட்டார்களா? 'ஏன் கண்ணன் வரவில்லை?' என்று கேட்டிருக்க மாட்டார்களா? சில சமயம் முடிந்திராதுதான்; மரியாதையில்லை.

விஸ்ஸிடமும் வலு சாதாரணமாய்ப் போய்க் கூப்பிட்டான். தன்னால் நன்றாக நடிக்க முடியும் போலும். விஸ்ஸின் முகத்தில் குற்ற உணர்ச்சியும் தயக்கமுந்தெரிந்தன என்று தான் பட்டது. அவன் மறுதலிக்க இவன் இடம் வைக்கவில்லை.

'எட, வாடாப்பா....அப்பிடியொண்டும் பெரிசா இல்லை'

கன்ரீனுக்குப் போகும் வழியில் மூர்த்திதான் கேட்டான்:

'நேற்று விஸ், இண்டைக்குக் கண்ணன், நாளைக்கு யார்?'

ஆறு ரீக்கும் ஆறு வடைக்கும் ஓடர் கொடுத்துவிட்டு, மேசையைச் சுற்றிருந்த நண்பர்களுடன் போய்ச் சேர்ந்து கொண்டபோது, யாரோ திரும்பவும் கேட்டான்:

'என்ன விசேஷம்? இப்ப சொல்லு....' என்று.

ஏதோ சொன்னான்-அந்த நேரம் மனதில் பட்டதை. ஒப்புக் கொண்டு விட்டார்கள்; பாராட்டினார்கள். ஒன்றுங் கவனத்தில் விழவில்லை. கன்ரீன் பையன் கொண்டுவந்து வைத்த தட்டில், விஸ் எப்போ கைவைப்பான் என்று பார்த்திருந்தான்.

விஸ் இரண்டாவது தட்டை வடையைக் கடித்துவிட்டு, தேநீரை ஒரு மிடறு உறிஞ்சிய போது கண்ணன் வலு சாதாரணமாக - மெல்லிய சிரிப்புடன் கேட்டான்; 'விஸ் நேற்று நீகூட எல்லாருக்கும் ரீ வாங்கிக் குடுத்தியாமே?'

'மல்லிகை' டிசம்பர் - '80

# புதிய தரிசனங்கள்

பிறைசூடி மாஸ்ரரை முதலில் அவன் கவனிக்கவில்லை. மாலை வெய்யிலுக்கு முதுகைக் காட்டி, நிழல்கள் நீண்டு முன்னே படர்ந்துவர, முகங்கள் தெளிவில்லாமல் பேசிக் கொண்டு கோவிலிலிருந்து வந்த அந்த மூன்று பேரில் சூடியர் நடுவில் வந்தார்.

'எட........ தனபாலே? எப்ப வந்த நீ?.... கடவுள்தான் இப்ப உன்னைக் கொண்டுவந்து இதிலை நிக்க விட்டிருக்கிறார்........'

—வியப்பும் மகிழ்வும் அவர் குரலில்.

'வாழ்க்கையில் ஒரு இலட்சியத்தை - சிந்தித்தோ சிந்தியாமலோ, சரியோ பிழையோ - பற்றிக் கொண்டு; அவர்களளவில் ஒரு அர்த்தத்தைக் கண்டு கொண்டு இந்த மூன்று மனிதர்களும்....' என்று பொதுவாகவே கண்ணோட்டி யோசித்துக் கொண்டிருந்தவன், நிமிர்ந்தான். 'ஸேர்....!' - றிஃப்ளெக்ஸ் அக்ஷன் போல குந்தியிருந்த கல்லிலிருந்து எழும்பினான்.

பிறைசூடி அவரது பட்டமா பெயரா என்று முன்பு படிக்கிற காலத்தில் - அவனைக் குழம்பச் செய்த அதே உத்தூளனமான நீற்றுப் பூச்சு. சந்தண வட்டத்தில் அடங்கிய குங்குமம். காது மடலிலிருந்த வில்வம் எட்டிப் பார்த்தது.

'........ஓம், ஸேர்!' என்றான் மீண்டும்.

அவர் தலை முழுவதும் நரைத்தாயிற்று. முன்னிலும் உயரமாய் மெலிதாய்த் தெரிந்தார். முகத்தில் புதிதாய்ச் சுருக்கங்கள். வருஷத்தில் இரண்டு மூன்று தடவை பயணத்தில் வருகிறபோது வழி தெருவில் காண்பதுதானென்றாலும், இவ்வளவு அருகாகப் பார்த்துப் பத்து வருஷங்களிருக்குமா?

'நீங்கள் முன்னாலை போங்கோ.... நான் இவன் தம்பியோடை பேசிக்கொண்டு வாறன்'

வயலும் வெளியுமாய்க் கோவிலைச் சூழ்ந்து படர்ந்திருந்த அந்த இடத்தில், மாலை மனோகரமாக இருந்தது. பூசை முடித்துக் கதவைச் சாத்துகிற ஐயர் அந்தப் பிரதேசத்தின் அமைதியைக் கிழிக்கிறார்.

'இதிலை இருங்கோவன் ஸேர்' விலகி, கல்லைக் காட்டி நின்றான். கோவில் முன் மதிலிலிருந்து உடைந்து விழுந்த பாறைக்கல். குருக்கத்தி முளைத்த இடுக்குகளுடன் கறுப்புக் கல், திண்ணை மாதிரி.

வேண்டாம், வா.... மெல்ல நடப்பம்....'

இந்துக் கல்லூரியில் ஜி. ஸீ. ஈ. படித்த அந்த மூன்று வருஷமும் கணிதமும் தமிழும் படிப்பித்தவர். எங்கோ மலைநாட்டுப் பள்ளியிலிருந்து மாற்றலாகி வந்த புதிதில், அவர்களுக்குச் சிரிப்பு மூட்டியவர், வந்த பின்தான் தங்களூர் ஆள், தூரத்து உறவு என்று தெரிய வந்தது. ஒரு தவணை மூடிய முந்தியே சிரிப்பு எல்லாவற்றையும் வியப்பும் மதிப்புமாய் மாற்றினார். கணிதத்தில் மன்னன், சிவப்பழம், அந்த வயதில் இவர்களுக்கு ஒரு நடமாடும் என்ஸைக்ளோபீடியா.

சைக்கிளை உருட்டிக்கொண்டு கூடியவரோடு நடந்தான். சந்தணமும் இன்னுமெதுவுமோ தன்னைச் சூழ்ந்து கமழ, அவர் பேசிக் கொண்டு வந்தார். எப்போ திரும்புகிறான்,

ஏன் அடிக்கடி ஊர்ப்பக்கம் வருவதில்லை, கொழும்பில் வாழ்க்கை நிலைமை, வேறேதும் படிக்கிறுனு, இன்னமும் கதைப் புத்தகங்களுடன் மினைக்கெடுவதுண்டா - எல்லாம் கேட்டார். ஜனவரியில் தன் மகன் சௌதிக்குப் போனது, தான் சுகமில்லாமல் ஆஸ்பத்திரியிலிருந்தது, கடைசி மகளுக்கு இப்போ கலியாணம் பேசுவது எல்லாம் சொன்னுர்.

'அவன் எப்பிடி உன்ர கூட்டாளி, இப்ப?'

'ஆர், ஸேர்?........'

'ஜெயநாதன்?........'

'கொழும்பிலைதான்........'

'அது தெரியும்.... இப்ப உன்னோட எப்பிடி? முந்தி இரண்டு பேரும் வலு நெருங்கின சினேகிதமெல்லோ?....'

'அதே மாதிரித்தான் ஸேர் இன்னும்....' மெல்லச் சிரித்தான்.

'சரி, நீ என்ர பிள்ளை மாதிரி.... உன்னைத்தான் கேக்க வேணும். ஒரு சம்மந்த விஷயம்' - ஸீரியஸாகக் கேட்டார்.

'ஜெயநாதன் ஆள் எப்பிடி?'

உங்களுக்குத் தெரியுந்தானே ஸேர்.... முந்தியைப் போல்தான் இப்பவும் - ஒரு கெட்ட பழக்கமுமில்லாதவன்....'

உன்ர சினேகிதன் எண்டதுக்காகச் சொல்லாதை....' அவர் சிரித்தார்:

'........என்ர மகளுக்குத்தான் இந்தப் பேச்சுக்கால்....'

'இல்லை ஸேர், அவனிலை ஒரு கெட்ட பழக்கமுமில்லை. ஆனு........'

சொல்லு........'

'உங்கடை மகளுக்கெண்டு சொல்லுறீங்கள், அது தான்........'

'ஏன்? என்ன?'

'அவன்ர போக்குகள் உங்களுடைய குடும்பத்துக்கு ஒத்து வருமோ எண்டுதான்........'

பிறகும் சிரித்தார் :

'அவன் ஒரு கொம்யூனிஸ்ற், நாங்கள் கோயில் குளமெண்டுதிரியிற ஆக்கள்........அதையே சொல்லுறுய்?'

தனபால் தலையாட்டினுன்.

........அதெல்லாம் முந்தியே எனக்கு நல்லாத் தெரியும். ஆனு, உன்னை நான் முக்கியமாகக் கேட்க நினைச்சது இது தான்: அவன்ர மனப்போக்குகள் எப்பிடி? தனக்கு வாறவள் கடவுள் நம்பிக்கையுள்ளவளாயிருக்கிறதை ஒப்புக் கொள்வர்னே? அப்பிடி வந்தா, அவளின்ர நம்பிக்கையளில குறுக்கிடாம போகக் கூடிய ஆளோ?....இது பார், பிறகு பிரச்சினைகளைக் கொண்டுவரும்'

'இல்லை ஸேர், எனக்குத் தெரிஞ்ச அளவில் அவன் அப்பிடியான ஆளில்லை--பெண்சாதியாயிருந்தாலும் அவளுடைய சுதந்திரத்தை மதிக்கக் கூடியவன். ஆனு, நான் நினைச்சது உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருக்குமோ எண்டு தான்........,

'எங்களை பொறுத்தளவில அவன் கொம்யூனிஸ்ற் ஆக இருக்கிறதை பிழையாகவோ பிரச்சினையாகவோ எடுக்க வில்லை. ஏனெண்டால் கடவுள் இல்லையெண்டு சொன்னுலும், கடவுளுக்கு மிக நெருக்கமானவன் ஒரு நல்ல கொம்யூனிஸ்ற் தான்....,

தனபால் ஒருகணம் நின்று. அவரைத் திரும்பிப் பார்த்தான்.

# விலகிப் போகிறவன்

சகாக்களிடமிருந்து தான் மிகவும் விலகிப்போய் விட்டதாக இப்போதெல்லாம் அடிக்கடி உணர முடிகிறது. எப்படியென்று தெரியவில்லை - ஆனல் தானறியாமலே இந்த விலகல் கொஞ்சங் கொஞ்மாக நேர்ந்திருக்க வேண்டும்.

'தன்னைச் சூழ்ந்திருக்கிறவர்களுடன் சேர்ந்து வாழுகிற கலையைப் பயின்றிராதவன், வேறெந்தக் கலையைக் கற்றிருந்தாலுங்கூட, வாழத் தெரியாதவனேயாவான்' - என்கின்ற அர்த்தத்தில் யாரோ சொன்னதை எங்கோ படித்தது வேறு, இந்த உணர்வை அதிகப் படுத்தி உறுத்திக் கொண்டிருந்தது.

அவர்கள் ஜெயனை வெறுத்தார்கள் என்றில்லை - நிச்சயமாக இல்லை, ஆனல் ஒரு ஒதுக்கம். தங்கள் நட்பை இவனுடன் பகிர்ந்து கொள்ளத் தயக்கங்காட்டிய மாதிரித் தெரிந்தது. கன்ரீனில் தேநீருக்குக் கூட்டமாகப் போகிற போதில் அவனுக்கு அழைப்பு வருவதில்லை. படம் பார்க்கப் போகிற திட்டம் ஜெவனையும் சேர்த்து விவாதிக்கப் படுவதில்லை........

-இவையெல்லாம் பெரிதாக தெரிய ஆரம்பித்திருக்கின்றன. இந்த இடை வெளியை தவிர்க்க அவன் தீர்மானங் கொண்டான்.

வகுப்பறையை நினைவூட்டுகிற கந்தோர். வரிசையாக மேசைகள். இந்தக் கூடம், வகுப்பறைகளிலும் பெரியது என்பது ஒரு வித்தியாசம்-நாலு வகுப்பறைகளை சேர்ந்த அளவு. மற்றபடி, எல்லோரும் ஒருபுறமாய் பார்த்தபடி அமர்ந்திருந்து வேலைபார்க்கையில், வகுப்பறையில் பாடங்கேட்கிற நினைவு வரும். வாத்தியார் இடத்தில், மிஸ்டர் பெர்னாண்டோ. இந்த இருபது பேரையும் மேய்க்கிற பெர்னாண்டோ.

பகல் இடைவெளிகளில் இடம்பெறுகிற கலகலப்பு முசுப்பாத்திகளாலும் அலுவலகம் வகுப்பறையை ஒத்திருந்தது. பெர்னாண்டோ நல்ல மனிதர்-கண்களை மூடிக் கொண்டிருந்து விடுவார். வேலை முடிந்தால் சரி. அவருக்கு மேலே சுந்தர்லிங்கத்தார். விட்டுக் கொடுத்து வேலை வாங்குகிற தந்திரசாலி. இந்தச் சத்தங்களை என்றைக்குமே காதில் விழுத்திக் கொள்ளாதவர்.

இம்மாதிரி வேளைகளில்-ஒரு நாளைக்கு ஒன்று என்று-அவிழ்த்துவிட, யோகேஸ்வரனிடம் நிறையக் கதைகள் ஸ்ரொக்கிலிருந்தன. வெற்றிலை துப்பிய தவளையின் கதை, காஞ்சோண்டிச் செடியைக் கும்பிட்டவன் கதை-எல்லாம் அவன் சொன்ன கதைகளே. இந்த வரிசையில் இன்று அவன் கந்தையா வாத்தியாரின் கதையைச் சொன்னான்.

கந்தையா வாத்தியார், சரியான சுதிக்கந்தன். நரிக் கள்ளன், ஆள். வாத்தியார் வீட்டுக்குப் பக்கத்து வீடு, சுப்பிரமணியம். சுப்பிரமணியத்துக்கு மத்திய கிழக்கு நாடுகளுக்குப் போய்ச் சம்பாதிக்க நிறைய ஆசை இருந்தது. வலு பாடுபட்டு, ஒரு மாதிரி, ஓமானில் ஒரு வேலை தேடிக் கொண்டு அவன் புறப்பட்டபோது, அவன் பெண்சாதிக்கு இரண்டோ மூன்றோ மாதம் தலைப்பிள்ளை. இவள் கொஞ்சம் பேய்த் தரவளி, விவேகம் குறைவு, வெருளி. சுப்பிரமணியம் புறப்பட்டபின், கந்தையர் ஒருநாள் அவளிடங் கேட்டார்.

''எடி, இவன் சுப்பிரமணியத்துக் கென்ன பைத்தியமோ? ஏனிப்பிடி |அரை குறையிலே விட்டிட்டுப் போனவன்?''

''எதை வாத்தியார்''?

''தலையை மாத்திரம் உண்டாக்கி விட்டுப் போயிருக்கிறுன். இனி, கை, கால் உடம்பெல்லாம் வைக்கிறது ஆராம்?''

(இந்த இடத்தில் சிரிப்புப் பற்றியது)அவள் பயந்து போனுள். வாத்தியார் கொஞ்சநேரம் சுப்பிரமணியத்தைத் திட்டினுர். பிறகு கொஞ்சநேரம் யோசித்து விட்டு, வேண்டா வெறுப்பாக சொன்னுர்.

''இனி என்ன செய்யிறது? வேணு மெண்டா, நான் மீதியை வைச்சுத்தாறன்....''

வாத்தியார் ஒரு நாளைக்கு ஒரு உறுப்புவீதம் உருவாக்கத் தொடங்கினுர்.

ஆர்ப்பாட்டச் சிரிப்புகள் வெடிக்கவும் ''பொறுங்கடாப்பா, இன்னுமிருக்கு கதை....'' என்றுன் யோகேஸ் கம்பீரமாக.

ஒரு வருஷத்துக்குப் பிறகு, சுப்பிரமணியம் வந்தான். ஒருநாள் ஆசையாக பிள்ளையைத் தூக்கிக் கொஞ்சிக் கொண்டிருந்த போது பெண்சாதி சொன்னுள்.

''ம்ஹூம்! போனவேளையிலே தலையை மாத்திரம் வச்சிட்டுப் போயிட்டு, இப்ப வந்து வலுசந்தோஷமாக் கொஞ்சுறீங்கள். கந்தையா வாத்தியார் மாத்திரம் இல்லாமலிருந்தா, என்ன நடந்திருக்கும்?''

எல்லோரும் வயிறு வெடிக்கச் சிரித்தார்கள். ஜெயனுக்கும் சிரிப்பு அடிவயிற்றைப் புரட்டியது. ஆனல் ஒரு கணந்தான்! பாவம் சுப்பிரமணியம் என்றிருந்தது. பாவம்

அவன் பெண்சாதி.... கந்தையா வாத்தி, எப்பேர்ப்பட்ட வில்லாதி வில்லன்....! - ஜெயனுக்குச் சிரிப்பு நின்றுவிட்டது.

பகிடிக் கதை என்றாலும், இதைக் கட்டியவன் ஒரு கதைஞன்தான். ஆனால் என்ன இரக்கமற்ற, குரூர கற்பனை!— இதற்காகத் தன்னால் சிரிக்கவே முடியாது; ஒப்புக்குத்தானும் சிரிப்பு வராது.

சுப்பிரமணியம், உன் பெண்டாட்டி எவ்வளவு பெரிய பரிதாபம்! நீயும்....!' - ஒரு கணமேனும் வந்த சிரிப்புக்காகத் தன்னில் கோபங் கொண்டான்.

எதற்காகவோ மீண்டுமெழுந்த இன்னொரு பெரிய சிரிப்பலை, வாயை இறுக மூடியிருக்கும் இவன்மேல் வந்து மோதியது. சிரிப்பால் இடுங்கிய சிலசோடி கண்களில் அந்த விலகல் தெரிகிறது!.... 'நீ வித்தியாசமானவனோ?' என்று கேட்கிற பாவனை தெரிகிறது....

அந்நியங் கொள்வார்கள்தான்; கொள்ளட்டும்.

'கணையாழி' ஜனவரி - '81

# குமிழிகள்

ஜன்னலுக்கு வெளியே பார்க்கப் பார்க்க எரிச்சலாய் வந்தது. எவ்வளவு நேரந்தான் சரங்கட்டி இறங்குகிற இந்த ஓயா மழையைப் பார்த்திருப்பது?

லீவை இன்னும் இரண்டு நாட்கள் நீடிப்பது என்ற முந்திய யோசனையை விட்டு, நாளைக்கே புறப்பட்டால் நன்றாயிருக்கும் என்ற எண்ணம் வலுத்தது ஆனால், கூடவே அங்கும் போய்த்தான் என்னத்தைக் கண்டது என்று உணர்ந்தான். அதே இயந்திரமயமாகிப் போன வாழ்வு........ பஸ்ஸையுங் கடிகாரத்தையுந் துரத்துகிற வாழ்வு, புழுதி, புகை, நெரிசல்.

படியிலிருந்து நீர்க்கோடு இழுத்தபடி திண்ணையில் ஏறி ஊரத்தொடங்கிய அட்டையை, எழுந்து போய்க் காலால் தட்டினான். சுருண்டுபோய் முற்றத்துத் தண்ணீரில் தொளப் பென்று விழுந்தது.

வருஷத்தில் சராசரி மூன்று தடவைகள்தான் யாழ்ப் பாணம் வரச் சாத்தியப்படுகிறது. ஒவ்வொரு முறையும் இரண்டு மூன்று கிழமைக்குக் குறையாமல் நின்று, இந்த மண்ணைத் துளித் துளியாய்ச் சுவைக்கிற வேட்கையோடு வருவான். திரும்ப மனம் வராது. இம்முறை போவதேகூட, அடுத்த பயணம் வருவதற்காகத்தானே என்றிருக்கும்.

கொழும்பில் - அந்தக் கொங்கிறீற் காட்டில் இருக்க நேரிடுகிற நாட்களில் எல்லாம் மகாகவியின் பாடல் நினைவுக்குவரும்-

‘இந்நாளெல்லாம்
எங்கள் வீட்டுப்
பொன்னொச்சிச் செடி
பூத்துச் சொரியும்.......’

போய்ச் சேர்ந்ததிலிருந்து, திரும்ப இன்னும் எத்தனை நாட்கள் என்று மனம் தினசரி கணக்கிடும். அங்கிருந்து யாழ்ப்பாணம் வருகிற ரயில் பயணங்கள் எப்போதுமே இனிய அநுபவங்கள்.

ஊரில் நிற்கிற நாட்களுக் கென்று தனியான வாழ்வு முறை ஒன்றிருக்கும் - கொழும்பில் நிர்ப்பந்திக்கப்பட்ட அவதியையும் பரபரப்பையும் மறக்கிற மாதிரி, காலையில் வளவெல்லாம் சுற்றித்திரிந்து பல்லுத் தீட்டி, அடுப்படியில் குந்தியிருந்து கோப்பி குடித்து - அந்த நாட்கள் வலு ஆறுதலாக ஆரம்பமாகும், கடைக்குப் போய் வருவது, வருகிறவர்களுடன் பேசுவது, தொட்டாட்டு வேலைகள் என்று சாப்பிடப் பத்து மணியாகும். சாப்பிட்ட பின் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டால், ஒரு நாளைக்குப் பட்டினப்பக்கம் ஒரு நாளைக்கு மானிப்பாய், ஒரு நாளைக்கு இன்னுமெங்கேயோ என்று போய் வருகிற வேலைகளிருக்கும். வந்து முதல் நாளைக்கு காலும் தொடையும் நோகும். பிறகு, சரி. முந்தியெல்லாம் விடலைப் பருவத்தில், காத்தி, கலைஞன், விக்கி. விஜயன் என்று கோஷ்டி குலையாதிருந்த நேரத்தில் ஒரு நாளைக்குக் குறைந்த பட்ச சராசரி ஓட்டம் பதினைந்து மைல் என்பது நினைவு வருகிறபோது இந்த நோவு வேதனை தரும். வீடு வர இரண்டு மணியோ, மூன்று மணியோ, அதன் பிறகும் வேலை இருக்கும்-இதைத்தூக்கி அதில் போட்டு,

அதைத் தூக்கி இதில் போட்டு என்று. வீட்டில் அவன் இந்த வேலைகளைச் செய்ய வேண்டிய தேவையோ. எதிர் பார்ப்போ இல்லாதிருந்தாலுங்கூட, இவற்றை இழுத்துத் தன்மேல் போட்டுக் கொண்டு செய்வான் - இந்த மண்ணின் காற்றைச் சுவாசிக்கிற வெறியோடு. 'குளித்துச் சாப்பிட ஆறு மணியாகும். நிலாக்கால முன்னிரவுகள் முற்றத்தில் கழியும். நிலா வரா ராக்களில், அன்று பகல் சந்தித்திருக்கக் கூடிய ஒரு புத்தகம் அல்லது அண்டை அயல் பெடியங்களுடன் தாயம். கந்தையாண்ணையின் சின்னவன் கண்ணன் நன்றாகப் பாடுவான்.

சைக்கிள் ஓட்டங்கள், யாழ்ப்பாண வாழ்வில் தான் ஒட்டிக் கொண்ட உணர்வை நிச்சயமாக்கும். சைக்கிள், யாழ்ப்பாணத்தின் தேசிய வாகனம் - இந்த மண்ணின் அடையாளம். ஒரு கிணற்றடிப் பனையில் சைக்கிள் ஒன்றைச் சாத்திவைத்துப் படம் பிடித்தால், அந்தப் படம் யாழ்ப்பாணத்தின் முழுமையான ஸிம்பலாக இருக்கும் என்ற எண்ணம் வரும். சீற்றின் கறுப்பு. வேட்டியில் தேயத் தேய, அதன் தலைப்பை இடக்கையால் பிடித்தபடி, தெருத்தாரில் ரயர் ஒட்டிப் பதிய ஓடுகையில் களைப்புத் தெரிவதில்லை. வாயில் வெற்றிலையும், தலையில் யாழ்ப்பாண வெய்யிலும் புழுதியும். சைக்கிள், தெரு, காற்று, புழுதி, வியர்வை, மோர், தேத்தண்ணி, சூசியம், வெற்றிலை, புத்தகக்கடைகள் கனநாளைக்குப் பிறகு காணநேர்கிற நண்பர்கள்--

'ஆ! எப்ப வந்தது?'

வெய்யிலில் காய்ந்து வருகிற அவனைக் காண்கிற அவர்கள் கேட்பார்கள்;

'என்ன ஐசே, இந்த வெய்யில் உமக்குச் சுடுகிறதில்லையா?' சுடுவதில்லைத்தான்.

வெய்யில் தான் என்றில்லை-மழையுங்கூட என்ன குறைந்து போயிற்று? தூறத்தூற முகத்தை நிமிர்த்தி அதில் நனைத்து, தலையைச் சிலுப்பி வழித்து. சைக்கிளை மிதிப்பது சுகம். மழை நின்ற ஐந்து நிமிடங்களில், எதிர்க்காற்றிலோ, அல்லது ஒரு தேத்தண்ணி குடிக்கிற நேரத்திலோ, அல்லது ஒரு நண்பனை விசாரித்துவிட்டுப் பார்க்கிற போதோ இந்த ஈரம் காய்ந்து விட்டிருக்கும்.

ஆனல், இப்போது என்னுயிற்று - இந்த மழை தன்னைச் சுற்றிமட்டுமே சிணுசிணுத்துக் கொண்டு மீதி உலகத்திலிருந்து தனியே வேலியிட்டுப் பிரிப்பது போல?

நேற்றுக் காலை தொடங்கிய இந்த மழை பின்னேரங் கொஞ்சங் குறைந்திருந்த போது, கலைஞன் வீட்டுக்குப் போய் விசாரித்துப் பார்த்தான். கலைஞன் வருவதாகத்தான் இருந்தது; ஆனல் வரவில்லை.

## 2

எழுந்து பின் விருந்தைக்கு வந்தான். தாழ்வாரத்துப் பீலியால் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது - அருவி போல. விழுகிற இடத்தில் பள்ளம் விழுத்தி, நுரைத்து வழிகிற தண்ணீர். இந்த நுரைக் குமிழ்களில் இப்போதுங்கூட ஆசை வருகிறது போல இருந்தது. கொப்புளமாய்ப் பொங்கி, அசைந்து ஆடி, ஒன்றன்பின் ஒன்ருய் அல்லது அருகருகாய்ச் சேர்ந்து தழுவிப் பெருத்தும் வெடித்தும் நீரின் வேகமே தம் வேகமாய் அவை நகர்ந்து கொண்டிருந்தன.

இப்படித்தான் ஒரு மழை நாளில் இந்தக் குமிழ்களைப் பிடிக்கப்போய், தாழ்வாரச் சேற்றில் சறுக்கிக் குண்டியடி புண்ண விழுந்தது ஞாபகம் வந்தது. அது நடந்து இருபது இருபத்திரண்டு வருஷங்கள் இருக்கும், இந்த இருபத்தெட்டு வருடகால வாழ்வின் அர்த்தம் என்னவென யோசித்தபடி,

வாரடித்து ஓடுகிற வெள்ளத்தைப் பார்த்துக்கொண்டிருந் தான். வெள்ளம், அடிவளவில் சேர்ந்து கொண்டிருந்தது. ஆயிரங்காய்ச்சி மாவடியில் நிற்கிற தண்ணீர் முழங்கா லடிக்கு வரும். மாட்டுக் குடிலினடியில் மாடுகளிரண்டும் குடங்கியபடி தொட்டிலை நெருங்கி நிற்பது தெரிந்தது.

என்ன செய்வதென்று தெரியாமலேயே அடுப்படிப் பக்கம் போனான். அடுப்படியில் குளிர் தெரியவில்லை. அம்மாவுந் தங்கைகளும் சமையல் மும்முரத்தில் இருந் தார்கள். இந்த மழையாலும் மூட்டங்களாலும் பாதிக்கப்படா தவர்களாக அவர்கள் தெரிந்தார்கள். இப்போதே பகல் சமையல் வேலையைத் தொடங்கிவிட்டார்களா என்ற யோசனை வந்தபோதே, நேரம் பத்துமணிக்கு மேலிருக்கும் என்பதும் நினைவு வந்தது. அடைமழை பிடித்தால் நேரங் கூடத் தெரிகிறதில்லை. காலையில் எழுந்ததிலிருந்து இந்த மூன்று நாலு மணித்தியாலமும் ஒரு வேலையும் செய்யாமலே நாசமாய்ப் போயிருக்கிறது.

'தேத்தண்ணி கொஞ்சம் சுடச்சுட வைச்சுத்தரட்டே, அப்பு?' என்று அம்மா கேட்டதற்கு,

'வேண்டாம்' என்றவன், '........நாளைக்குப் பகல் நான் திரும்ப வேணுமெல்லே?' என்று நினைவு படுத்துபவன் போலச் சொன்னான்.

'உனக்கென்ன, பைத்தியமே? இந்த மழையுக் கையோ? ........வந்த நீ இன்னும் இரண்டு நாள் லீவைப் போட்டிட்டு நிண்டு ஆறுதலாகப் போறது தானே?'

'இஞ்ச நிண்டுதான் என்ன செய்யிறது?'

'ரெயில்கூட ஓடுதோ, தெரியாது........'

'அது ஓடுதாம். இஞ்சை யாழ்ப்பாணத்திலைதான் வெள்ளம். மற்ற இடங்களிலை ஒண்டுமில்லையாம்.... ரேடியோ விலை சொன்னாங்கள்........' என்றபடி, இப்பால் வந்தான்.

கூடத்தில், முத்தையர் வந்து, ஐயாவுடன் பேசிக் கொண்டிருந்தார் - ஐம்பது அறுபது வருஷங்களுக்கு முன் போட்ட பேய் வெள்ளத்தில் நந்தாவிலில் கவிழ்ந்து மூழ்கிய குதிரை வண்டியின் கதையைப் பற்றி.

## 3

கலைஞன் பயல் வராமல் விட்டுவிட்டான். அவன் வந்திருந்தால் இந்தப் பயணத்தின் இந்தக் கடைசிநாட்கள் முழுமை கொண்டிருக்கலாம். மற்ற நண்பர்களை விசாரிப்பது தேவையற்றது. அவர்கள் இப்போது வரச் சந்தர்ப்பம் இல்லை என்பது தெரியும்.

எல்லோரையுமே ஊரில் சந்திப்பதானால், அதற்கொரு காலம் இருக்கிறது. வருஷ விடுமுறை. வருஷப்பிறப்பன்று தான் மருதடியிலுந் தேர். ஊரவன் எல்லாம் வருவான்; எங்கிருந்தாலும் வருவான். வருஷப்பிறப்புக்கு ஒரு கிழமை முந்தித் தொடங்குகிற பண்டிகைக் கோலம், வருஷம் பிறந்து அடுத்து வருகிற ஞாயிறுவரை நீடிக்கும். இந்தக் காலத்தில் இன்னமும் ஒரு விசேஷமிருந்தது.

இப்போதுதான் வசந்தந் தொடங்குகிறது. வேப்பம் பூவும், குயில்களும்.

இந்த மாதிரி - அல்லது இதிலும் சிறப்பான காலமும் வேறென்று இருக்கிறது. அது வைகாசிப் பூரணையை அல்லது ஆனிப் பூரணையை அண்டிவரும். அப்போது அம்மன் கோவில் கோவில் திருவிழா. சோழகம் தொடங்கி விட்டிருக்கும். ஊர்ப் பனங்கூடல்கள் எல்லாம் ஓவென்று பாடும், ஓயாது. அருகில் எங்கோ சமுத்திரம் மாதிரி. இந்தக் காற்றில் ஏறியும் இறங்கியும் எங்கெங்கிருந்தோ ஒலிக்கிற லவுட்ஸ்பீக்கர்கள். அருகில் கேட்கிறபோது அரியண்டமாய் இருக்கிற பாட்டுகள் கூட தூரத்துக் காற்றில் மனதை ஈர்க்கும். போதாக்குறைக்கு மாம்பழ ஸீஸனும்.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களும் இப்படி இனிக்கும் என்பதால், மற்றச் சந்தர்ப்பங்கள் கசக்கும் என்றில்லை. ஊருக்கு வருகிற எந்தச் சந்தர்ப்பமுமே கசப்பதில்லை. இனிப்பில்தான் வித்தியாசம்.

ஜனவரி முன்னடியில் பனிக்குளிரும் திருவெம்பாவையும். அரை விழிப்பில் போர்த்துப் புரண்டபடி ரேடியோவில் திருவெம்பாவை கேட்கிற சுகம் - ஒரு மன உறுத்தல் இருந்தாலும் இத்தனை வயதாகியும், எழும்பி முற்றத்திற்கு வந்தவுடன் வாயை விரித்து ஊதி, பனிப்புகை விட்டு ரசிக்கிறது. கொழும்பிலுந்தான் பனி பெய்கிறது.

பிறகு, பொங்கல். புகையிலை இறைப்பு. அக்கம்பக்கத்துத் தோட்டங்களிலெல்லாம் இரவிரவாக - விடியவிடிய - இறைப்பு நடக்கும். மெஷின்களின் ரீங்காரம் தாலாட்டும். பனிப்புகாரில் நீர்த்த நிலவெறிக்கும் இராக்களானல், இன்னும் விசேஷம். அரை விழிப்புடன் புரள்கிற அப்போதும். இன்னொரு குற்ற உணர்வு குறுகுறுக்குந்தான். அம்மா சின்ன வயதில் சொல்கிற கதை ஒன்று நினைவு வரும். ஒரு ராச குமாரனின் கதை, தகப்பன் ராசாவை அவன் கேட்டுப் பெற்ற போகங்கள்: தங்கமாளிகை, ஏவலர்கள், சாப்பிடப் பாலுந் தேனும், படுக்கப் பஞ்சுமெத்தை, விடியற்காலையில் மெஷின் இறைக்கும் சத்தத்தைக் கேட்டபடி தூங்க வேண்டும்........ அம்மாவின் கற்பனையும் ரசனை உள்ளமும் இப்போது அதிகபட்சம் புரிகிறது.

இந்த அதிகாலை அரை விழிப்பு சுகங்களில் இன்னும் ஒன்று, ஐப்பசி மாதக் குழை வண்டில்கள். தூரத்தில் எங்கோ குழைவாங்கி வெட்டிக் கட்டிக் கொண்டு விடியற்புறங்களில் வரிசையாகப் போகிற வண்டில்கள். தெருவின் நிசப்தத்தில், சில்லுகளின் லயம் மாருத 'கடக், கடக்' ஒலி மட்டும் வீடுவரை வந்து தாலாட்டும். ஆனல், முழுதாக அயர்ந்துவிடக்கூடாது.

முன்னிரவிலும் ஒன்று உண்டு. கார்த்திகை மட்டில்-கெல்லாவில் பனேக்குள் வெள்ளம் சேர்ந்து தெருவரை தளம் புகிற நாட்களில், பொழுது படத் தொடங்குகிற கச்சேரி எப்போது முடியும் என்று தெரியாது. தவளேகளும் வேறேதோ பிராணிகளும் போடுகிற இந்தக் கத்தல் கூடக்கவர்ச்சி தான்.

பனங்கிழங்கு, சித்திரைக் கஞ்சி, சித்திரபுத்திர நாயஞர் கதை, ஆலம்பழம், கிளிகளும் மைனுக்களும், ஆடிக் கூழ், நல்லூர்த் திருவிழா, கார்த்திகை விளக்கீடு - இப்படி ஒவ்வொரு மாதத்திற்கும், ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு அழகு இருந்தது: ஒவ்வொரு சுவை இருந்தது.

ஏன், இந்த அடைமழை நாட்கள் கூட, அர்த்தமும் அழகுங் கொண்டிருந்தவைதாம். இப்படி வெள்ளம் போட்ட ஒரு போதில்-அறுபத்தேழிலாக இருக்க வேண்டும் - கெல் லாவிலில் மாதக்கணக்கில் வெள்ளம் நின்றபோது, அவன் மூன்று வாரங்களாக மினேக்கெட்டு, ஒரு நாளேக்கு ஒரு வால் பேத்தையாகப் பிடித்து 'பிறிஸேவ்' பண்ணி, தவளேயின் வளர்ச்சிச் சரித்திரத்தை உருவாக்கி, கல்லூரி ஆய்வு கூடத் திற்குக் கொடுத்தான்.

இன்னெரு வருஷ அடைமழையின் போது அவனும் கலேஞனுமாக கிராமபோன் பெட்டியைத் திருத்திஞர்கள். பாட்டா காலத்திய பழைய கிராமபோன் அது. பழுதாகிக் கிடந்தது. அக்குவேறு ஆணிவேருக அதைக் கழற்றி-ஸ்பிறிங் பொக்ஸில் மட்டும் பிழையிருக்கவில்லே - திருத்தி, புது வார்னிஷும் அடித்து, பாடவைத்தார்கள்,

அதற்கு முதல் ஒரு அடைமழை மூடலில்தான் அவன் பாரதக்கதை முழுவதையும் படித்து முடிக்க முடிந்தது. பெரிய எழுத்துப் பாரதம். தடித்த, சிவத்த மட்டை போட்ட நாலோ, ஐந்தோ பாகம். யாரோ ஒரு நாயக்கர் ஸன்ஸ் வெளியீடு.

அந்த அறுபத்தேழு வெள்ளத்தில் இன்னொரு முக்கிய மான வேலையும் நடந்தது. இதே மாதிரி, இந்தக் குறிச்சி முழுவதுங் குளங்கட்டித் தேங்கிப் போன வெள்ளத்தை, அவனும் அவன் கூட்டாளிகளுமாகச் சேர்ந்து கான் வெட்டி, கொத்தாவலை நதியில் பாய வைத்தார்கள். கொத்தாவலை நதி, அம்மன் கோவிலடியில் இருந்து வழுக்கையாற்றுக்குப் போகிற வெள்ளவாய்க்கால். ஊர்ப்பெடியன்கள் வாயில் அது நதியாகக் கௌரவம் கொண்டது. கொத்தாவலை அதைத் திறந்து வைத்த பிரமுகரின் பெயர். இந்த வெள்ளத்தை அந்த நதியில் பாயச் செய்யக் கான் வெட்டிய வேலை முழு தாக ஒருநாள் எடுத்தது. கால்மைல் நீளக்கான்.

ஊரோடு இருந்த காலங்களில் ஒவ்வொரு வருஷமும் மழை வெளித்தவுடன் கல்லுண்டாய்ப் பயணந் தப்பாது. வயல் வெள்ளத்தில் வடிவான நிறநிற மீன்களெல்லாம் எங்கிருந்தோ அள்ளுண்டு வரும். போத்தல்களும் பழந் துணிகளுமாகப் போவார்கள். விஜயன் ஒரு தடவை, ஒரு ஆமையைக்கூடப் பிடித்தான், இந்த வெள்ளந் தப்புகிற ஆசை, சின்ன வயசிலேயே தொட்டது. அம்மன் கோவிலடி வெள்ளம். அப்போது ஆறும் ஏழாம் வகுப்புப் படித்த காலங் களில் இடுப்பு மட்டும் வரும். மற்றவர்கள் அருவருத்து நிற்கையிலுங் கூட, விக்கிப்பயல் புளுகந் தாங்காது, ஒரு தரம் அதற்குள் விழுந்து நீந்தினான். வெள்ளம் கலக்குகிற போது மரத்தடிகளில் வெள்ளம் விளிம்போடு ஒட்டிக் கொண்டு கிடக்கும் நட்டுவக்காலிகளும் நண்டுகளும் மேலெங்கும் குறுகுறுக்கச் செய்யும். வெள்ளத்தில் தவளைக் கல்எறிகிற சம்பியன், காத்தி........

இந்த இவ்வளவு நாள் வாழ்வு, இந்த வேலைகள் - எல் லாம் அர்த்தமற்ற பைத்தியக்காரத்தனங்கள் என இப் போது படுகின்றன இனியும் இதே தடத்திலா என்று நினைக் கிறபோது தயக்கமாகவும் இருந்தது. யோசித்தவாறே கிடந்தான்.

# 4

படலையடி வெள்ளத்தில் கால்களை இழுத்து இழுத்து அலம்பியபடி யாரோ வருகிற சத்தங் கேட்டு விழித்தபோது தான், அப்படியே சாய்மனைக் கதிரையில் தான் அயர்ந்து போய்விட்டது புரிந்தது. மழை இப்போது நியாயமாகக் குறைந்திருந்தது.

சாக்கால் போர்த்திக் கொண்டு, குடையுடன் பொன்னையாம்மான் வந்தார்.

'எப்பிடியடா தம்பி, வெள்ளம் போதுமே?'

ஒன்றும் சொல்லாமல் எழுந்து சிரித்தான்.

'அங்கை போய்ப் பார், அவன் கந்தையன் வீட்டை-பெரிய பரிதாபம். வீட்டுச்சுவர் ஊறி விழுந்து போச்சு, தலைவாசலுக்கை கிடந்த விதை வெங்காய மெல்லாம் வெள்ளம்.

பாவம் கந்தையாண்ணை, பிள்ளைகுட்டிக்காரன். தான் இப்போது தூங்கிக் கொண்டிருந்த அதே நேரத்தில், அந்தச் சுவர் அங்கே சரிந்திருக்கும்........

'காத்து எழும்பியிருக்கு, அது பயந்தான், எண்டாலும் மழை இன்னுங் கொஞ்சத்திலை விட்டிடும்....' என்ருர் அம்மான்.

'விட்டா நல்லதுதானே.... அந்தச் சுவர் எப்படிப் பொத பொதவென்று பொறிந்திருக்கும்?'

'ஆனு, மழை விட்டாலும் வெள்ளந்தான் பிரச்சினை பண்ணப் போகுது....'

'ஏன்? - நல்லகாலம், குழந்தை குஞ்சுகள் அந்தக் சுவருக்குள் அகப்படவில்லை'

'ஏனே? இது இவ்வளவும் இஞ்ச பெய்த மழைக்கு வந்த வெள்ளமெண்டே நினைக்கிருய்? வரத்து வெள்ளமடா. ஆரோ தோட்டப்பக்கத்தலை வெட்டி இஞ்சை விட்டிருக்கிருங்கள்.... பார், செம்பாட்டு வெள்ளம். மழை நிண்டாலும் வெள்ளம் ஏறப்போகுது. திண்ணைச் சாக்கில் ஈரக் கால்களை மாறி மாறித் துடைத்தபடி அம்மான் சொன்னுர்.

'அப்ப, நாங்களும் கொத்தாவலை நதிப்பக்கம் வெட்டி விடுவம்?'

'பின்னை? வெட்டத்தானே வேணும். அதுதான் வந்தனுன். கொய்யா எங்கை?' அம்மான் கேட்டார். கூட்டிக் கொண்டு உள்ளே போனுன்.

சண்டிக்கட்டும் தலைப்பாகையுமாய் ஒரு கையில் குடையைப் பிடித்தபடி, மற்றக் கையில் விறகுக் கட்டைச் சுமந்துகொண்டு ஐயா, கொட்டிலிலிருந்து வந்து கொண்டிருந்தார்,

'விறகுக் கொட்டிலுக்குள்ளை வெள்ளம் ஏறிவிட்டுது'

இவனிடம் சொன்ன எல்லாக்கதைகளையும் இங்கும் சொன்னுர், அம்மான்.

'ஐயோ, பாவம்........'

'அதுதான் இப்ப முதல் வேலையா, இந்த வெள்ளத்தை வெட்டி விடவேணும். பிறகு தான் மற்றக் கதை........'

'ஆர் வெட்டுறது?'

முத்தையர், கந்தையாண்ணை என்று ஏழெட்டுப் பேரைச் சொல்லிவிட்டு, பிறகு ஒரு ரோசத்தோடு அம்மான் சொன்னுர். 'போனமுறை நீங்கள் இளந்தாரியள் வெட்டினுப் போலை எங்களாலை ஏலாதெண்டு நினைச்சிடாதை, இம்முறை நாங்கள் வெட்டிக்காட்டிறம். நாளைப் பொழுதுபட இந்த மூத்தத்திலை ஒரு சொட்டுத் தண்ணி நிக்காது.

'அப்ப வெட்டுங்கோவன். நானும் வாறன் உங்களோட........'

'அப்ப நீ நாளைக்குப் போகேல்லையா?....' - அம்மாவுக்குச் சந்தோஷமாக இருந்தது.

'நிண்டிட்டுப் போறன்' என்றுன்.

'இப்ப துவங்கிறு பொழுது படுகிறதுக்குள்ளை அரைவாசியாவது வெட்டி முடிச்சிடலாம்.... நீ சாப்பிட்டு வருவியா?' - அம்மான் கேட்டார்.

'வாறன்.

அம்மான் போனதும் அடுப்படிக்கு வந்தான்.

'அங்கை போய்ப்பார், அண்ணை.... மாட்டுக் கொட்டிலை,

போய்ப் பார்த்தபோது, மாடுகளின் காற்குளம்புகளுக்கு மேலாகத் தண்ணீர் நின்றது.

'அதுகளை இந்தத் தாழ்வாரத்திலை அவிழ்த்துக் கட்டுவமா?' - சாரத்தை உதறி சண்டிக்கட்டைக் கட்டினுன்.

'நீ அவிட்டுக்கொண்டு வரப் போறியா?'

'ஓம்' என்றபடி இறங்கியவனிடம் தங்கச்சி சொன்னுள்: 'உனக்குப் பழக்கமில்லாத மாடுகள். இடிக்கும்....'

அது சரிதானென்று பட்டது; திரும்பிச் சொன்னுன்.

'அப்ப, நான் விறகு எடுத்துக் கொண்டு வந்து போடுறன், மாட்டை அவிழ்த்துக் கட்டச் சொல்லி ஐயாவைச் சொல்லுங்கோ........'

குடையை வாங்கிக்கொண்டு முற்றத்து வெள்ளத்தில் இறங்கிய போது, உச்சி வரைக்கும் சிலீர் என்றது.

,மல்லிகை' - ஓகஸ்ற் - '79

# பூகோளம்

சாந்தன்

பாட்டு வெய்யில் நெருப்பாய் இருந்தது. வலதுபுறத்து முகம் முழுதும் எரிகிற மாதிரி. இரண்டு பேரும் பேசிக் கொண்டே விரைந்து நடந்தார்கள். வழமையான பஸ் இன்று காலே வாரிவிட, பம்பலப்பிட்டி சந்தியில் வந்திறங்கி வேறு பஸ் எடுக்க நேர்ந்திருக்கிறது.

கொழும்பு நடைபாதைகளில் நடப்பது, இப்போ தெல்லாம் பெரிய தொல்லேயான வேலே. ஒருபுறம் கடல், மறு புறம் தமிழன் என்று துட்டகைமுனு சொன்னது போல, இங்கே ஒரு புறம் வேலி, மறுபுறம் வியாபாரிகள். நடக்கிறது எப்படி? - இந்த மாதிரி கிரி ஏதோ சொல்லிக் கொண்டு வந்தான். இவன், கிரிக்குத் தலேயாட்டியே, வழி நீளம் விரித் திருந்த கடைகளிற் கண்களே மேயவிட்டபடி நடந்தான். இங்கே இருக்கிறதா பார்க்க வேண்டும் - அந்தப் பூகோளம்.

ஒரு பூகோள உருண்டை வாங்கி, சுதாவுக்குக் கொடுக்க வேண்டும் என்று கனநாளாக நினைவு. நேற்று கோட்டைப் பக்கம் ஒரு அலுவலாகப் போன பொழுது, பூந் தோட்ட வீதி நெடுக அது இருந்தது சின்னன் - ஒன்றரை இஞ்சிதான் விட்டமிருக்கும். ஆனல் வலு தெளிவாக; அந்த அளவே ஒரு அழகாக, கோளத்துக்கேற்ற ஸ்ரான்ட் வேறு. விலேயைக் கேட்டபோது, எங்கும் எட்டு ரூபா சொல்லி, ஏழரைக்குத் தரலாம் என்றுர்கள். வாங்க மனம் வரவில்லே. விட்டு விட்டு வந்தான். ஏழரை கொஞ்சம் கூடத்தான்.

'மூண்டரைக்கு வேலை முடியிறது. எல்லாவிதத்திலும் நல்லது மச்சான் - இந்த வெய்யில் ஒண்டை விட........' என்ருன் கிரி.

அந்தா! அதுதான். அடுத்தடுத்திருந்த இரண்டு சாப் பாட்டுக் கடைகளுக்கு நடுவில் - இரண்டின் வசல்களையும் மறைக்காமல், பரப்பப் பட்டிருந்த அங்காடி நடுவில், இந்தக் கோளங்களிலும் ஐந்தாறு.

'ஒரு நிமிஷம், கிரி....' என்று சொல்லி, அதில் நின்ருன்.

'........யாரது, இங்கே?'

சாப்பாட்டுக் கடைச் சுவரிலிருந்து இறக்கப் பட்டி ருந்த சின்னப் பொலித்தீன் பத்திக்குள்ளிருந்து ஒரு சிறுமி எட்டிப் பார்த்தாள்.

'என்ன வேணும் மாத்தயா?'

'இது எவ்வளவு?'

'ஏழு ஐம்பது........'

'ஏழு ஐம்பதா?' - அவள் அவன் நடக்கத் திரும்பிய போது,

'சரி, ஆறரை தாங்க....' என்ருள் அவள். வெளியே வந்து.

'பரவாயில்லை, வேண்டாம்.'

'ஆறு ரூபா தந்திட்டு எடுங்க' - ஒரடி எடுத்து வைத் தவனைப் பின்னுல் கூப்பிட்டாள். திரும்பி வந்தான்.

ஒன்பது பத்து வயதிருக்கும் அந்தப் பிள்ளைக்கு. கறுப்பு. இரட்டைப் பின்னல். இந்த வெக்கையில் கருகிக் களைத்திருந்தாள். கொஞ்சம் நீர்க்காவியும் கொஞ்சம் ஊத்தை யுமாய் வெள்ளை யூனிஃபோம். பள்ளிக் கூடத்திலிருந்து நேரே வியாபாரத்தைக் கவனிக்க வந்திருக்க வேண்டும் என்று பட்டது.

'இந்த விலையை யாராவது பெரிய ஆள் சொல்லியிருந்தால் நல்லாயிருக்குமே' என்ற நினைவுடன்,

'உன்ர அப்பாவைக் கூப்பிடு........' என்ருன்.

'அவர் இங்க இல்லை........'

அரை நிமிடம் நின்றுவிட்டு, அவளுக்குக் கிட்டப் போய்ச் சொன்ஞன்.

'தங்கச்சி, எனக்கிப்ப இது வேண்டாம். ஆனு கோட்டைப் பக்கமெல்லாம் இதுக்கு விலை ஏழரை ரூபா சொல்லுருன்கள். நீ ஆறு ரூபாய்க்குத் தரலாமென்கிறியே.... ஏழரைக்குக் குறைய ஒருத்தருக்கும் கொடாதே....'

—இதைச் சொல்லிவிட்டு, '........சரி வா' என்று கிரியின் பக்கந் திரும்பிய போது, அவன் பின்ஞல் நின்று கீச்சிட்டாள்:

'ஆறு ரூபாவுக்கெண்டாலும் இதை வாங்க மனமில்லாம ....புத்தி சொல்லிவிட்டுப் போறீங்களே.... இண்டைக்கு ஒரு வியாபாரமுமில்லை, மாத்தயா.'

நின்று திரும்பிப் பார்க்க, 'ஆறு ரூபா தந்திட்டு எடுத்திட்டுப் போங்க....' என்ருள் மீண்டும்.

பொக்கற்றுகளுக்குள் எல்லாமாக, ஏழு முப்பத்தைந்து இருந்தது. இனி, பஸ்சுக்கு முப்பது சதம் போதும். ஏழு ரூபாயை எடுத்து நீட்டி, 'சரி, தா....' என்றபோது, அவள் ஒரு கணந் தயங்கிஞன்.

'........அங்கே எல்லாம் ஏழரை ரூபாய் விக்கிருன்கள்' பிடி!' என்ருன். திணித்தான்.

கோழி முட்டையிலுங் கொஞ்சம் பெரிதான இந்தப்

பூகோள உருண்டையை உருட்டிப் பார்த்துக் கொண்டு நடந்த போது, சிரிசிரியென்று சிரித்துக் கொண்டு கிரி கூட வந்தான்.

'மல்லிகை' - ஏப்ரல் - '80

1980

# மனிதர்களும் மனிதர்களும்

அந்த அமைதியான அழகிய கிராமத்தின் மக்கள் இப்படி இருப்பார்கள் என்று நினைக்கமுடிந்ததில்லை. ஆறும் தெருவும் ரெயில்வே லைனும் ஒன்றுக்கொன்று சமாந்தரமாக அந்தக் கிராமம் முழுவதையுமே ஊடறுத்துப் போகின்றன. ஆற்றைத் தாண்டிப் போன கையோடு, தெரு தானும் செங் கோணமாய்த் திரும்பித் தண்டவாளத்தைக் கடக்கிற இடத்தில், இரண்டிற்கும் நடுவில் பாரிய அரசமர மொன்றின் கீழே இருக்கிற புத்தகோவில். அந்தப் பசுமைப் பின்னணியில் சரியாய்ப் பொருந்துகிற சின்ன வெள்ளைக் கோவில். அந்தக் கிராமத்தை நினைக்கிறபோதெல்லாம் நினைவு வருகிற கோவில். ரயிலில் போகிற போதிலும் பார்க்க பஸ்ஸில் போகிறபோதுதான் ஊரின் அழகு தெரிகிறது. அங்கேயே இருந்துவிட முடியுமானால் நல்லது என்று ஒவ்வொருதரமும் அந்த ஊரைக் கடக்கும் போது மனதில் பட்டிருக்கிறது.

வயலின் நடுவில், ரோட்டிலிருந்து கமுகமரவரிசை களுக்கிடையில் ஓடுகிற பாதைகள் தொடுக்கிற இடங்களில் ஊரின் அமைதியில் தோய்ந்து போய் இருக்கிறவையும்; தெருவளைவுகளில் பெயர்தெரியா மலர்ச்செடிகளின் பற்றை களுக்குள்ளிருந்து எட்டிப்பார்க்கிறவையும்; தென்னஞ் சோலை வளவுகளில் எங்கோ ஓரிடத்தில் சிவப்பாய்க் கூரையைக் காட்டிக் கொண்டிருக்கிறவையுமான வீடுகளில்

குடியிருக்கிற அந்த ஊர் மக்களில் எப்போது தான் பொறுமை வராமலிருந்திருக்கிறது?

என்றாலும், இந்த மனிதர்கள் தாம் அதைச் செய்தார்கள்.

ஒரு நல்ல முழுநிலவு நாளில் இந்த ஊரும் ஆறும் வயல்களும் கோவிலும் எப்படி மிளிரும் என்கிற எண்ணம் எப்போதும் - ஒவ்வொரு போதும் - மனதில் தோன்றியிருக்கிறது. ஆனால் இப்போது, அந்த ஒரு காலைப்போதின் இளம் வெளிச்சத்தில்-சிவப்புக் கொடி காட்டி யாழ்ப்பாணம் போன ரயிலை இடையில் நிறுத்தி இவர்கள் ஆட்டம் போட்டபோது எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப் பார்க்க முடியாமலிருக்கிறது.

வண்டியிலிருந்த பெண்களெல்லோரும் குழறி அழத் தொடங்கி விட்டதாகப் பரம் சொன்னார்!

"அழுகை வராம என்ன செய்யும்? அவங்கள் கத்தியும் பொல்லுமாய் வந்து ரயிலை அடிக்கேக்கை?"

ரயில், எப்படியோ தப்பி, திரும்பிக் கொழும்பிற்கே வந்து விட்டது! பிற்பகல் மூன்று நாலு மணிக்கு அது திரும்பி வந்து சேர்ந்தபின், ஸ்ரேஷனில் தேடுவாரில்லாமல் நாலைந்து சூட்கேஸ்கள் அநாதையாய்க் கிடந்ததாகப் பேசிக் கொண்டார்கள்.

## 2

'இன்றைக்கும் அந்த வழியாகத்தான் ரயில் போகப் போகிறது. அந்த ரயிலில் தான் போகப்போகிறோம்!' - மனம் சிலிர்த்தது.

அது, அன்றைக்கு - கலம்பகம் தொடங்கிய நாட்களில். இன்று எல்லாம் முற்றி உச்சத்திலிருக்கும் போது-

ஊரடங்குச் சட்டமும் கொலை கொள்ளைகளுமாகச் சேதிகள் காதில் விழுந்து கொண்டிருக்கும்போது - என்ன நடக்குமோ-

ஆனால், வேறு வழியில்லை.

ஏதோ ஒரு விதத்தில் 'றிஸ்க்' எடுத்துத்தானாக வேண்டியிருக்கிறது.

மெல்ல எழுந்து, எலாம் மணிக்கூட்டுக்கு ரோச்சை அடித்துப் பார்த்தான். மூன்று ஐம்பது. இனி எழும்பலாம். நாலுமணிக்கு வைத்திருந்த எலாமை அழுத்தித் தவிர்த்தான். பன்னிரண்டு மணிக்குப் படுத்த நேரத்திலிருந்து, மொத்தமாக ஒரு மணித்தியாலமாவது நித்திரை வந்திருக்குமா என்பது ஐமிச்சம் இன்றுமட்டு மில்லை-இந்த ஒரு கிழமையாக, இரவெல்லாம் இப்படித்தான் கழிகிறது-பயமும் பதட்டமுமாய்.

எங்காவது ஆர்ப்பாட்டக் கூச்சல் கேட்கிறதா, வெடிச் சத்தம் கேட்கிறதா என்று காது விழித்துக் கொண்டி க்கிறது. ஊரடங்கு நேரத்தில் அடிக்கொருதரம் - கணநேரத்துக்கு மட்டும் காதில் விழக் கூடியதாய் உறுமிவிட்டு- தெருவில் பறக்கிற ஆயுதப் படையினரின் வாகனங்கள் ஏதாவது தெருத் தொங்கலில் றிவேஸ் செய்யும் சப்தமோ, அல்லது நிறுத்தும்-காவலுக்கு நிற்கிற வீரர்களருகில் நிறுத்துகிறார்களாயிருக்கும் - சப்தமோ, இதயத்தைப் படபடக்க வைக்கிறது! - கலகக் கும்பல்தான் வந்து இறங்கிறதோ் என்று.

இரவில் பெட்றூம் பல்ப்பைக் கூடப் போட முடிகிறதில்லை. கண்ணாடி ஜன்னல் மூலமாய்க் கசிகிற ஒளி வருகிற குண்டர்களுக்கு உள்ளே ஆட்களிருப்பதைக்காட்டிக் கொடுத்துவிடும். முற்றத்திலிருந்து மேலே வருகிற படிக் கட்டில் நாய் ஏறுகிற ஒலி கூட எழுந்து உட்காரச் செய்கிறது. வீட்டுச் சொந்தக்காரரின் பகுதிக்கும் இவர்களின் அனெக்ஸுக்கும் இடையில் நிரந்தரமாய்ப் பூட்டப்பட்டிருந்த கதவு,

இப்போது-பரஸ்பர உதவிக்காகவும், தைரியத்திற்காகவும் - திறந்து சாத்தி வைக்கப்பட்டிருந்தது. முக்கியமானதும் பெறுமதியானதுமான சாமான்களை - சேட்டிஃபிக்கற்றுகள், பத்திரங்கள், நகைகள், ரேப்-றெக்கோடர், நல்ல துணிமணிகள் எல்லாம் பத்திரமாய்ப் பார்சல் செய்து பழைய காட்போட் பெட்டியொன்றில் திணித்துக் கட்டி, அடுப்படியில் ஒரு மூலையில் தட்டு முட்டுச் சாமான்களுக்கிடையில் வைத்திருந்தார்கள். படுக்கையறையிலிருந்த சூட்கேஸ்களில் பாவித்த பழைய உடுப்புகளையும், புத்தகங்களையும் அழகாக அடுக்கி மூடினார்கள்.

எந்த நேரமும் தாக்குதல் நடக்கலாம். எந்த நேரமும் கொள்ளையர் - குண்டர்களை எதிர்பார்க்கலாம்....

—இந்த அவதிஎந்த நேரமும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கிற இந்தஅவதி-அந்தப் பதட்டமும் பயமும் உணர்வு - தாங்காமல்; அவனும் சாம்பசிவமுமாக நேற்றுப் பின்னேரம் தீர்மானம் பண்ணினார்கள்: மனைவிமாரையும் அழைத்துக் கொண்டு இன்றைய ரயிலில் எப்படியும் யாழ்ப்பாணம் போய் விடுவதென்று.

"வாறது வரட்டும்...."... என்றான் சாம்பன், முடிவாக.

"அதுசரி. எப்பிடியும் ஏதோ ஒரு விதத்தில 'றிஸ்க்' எடுக்கத்தான் வேணும். இங்க இருக்கிறதும் றிஸ்க்....ரயிலில போறறிஸ்க்கை எடுப்பம். தப்பிப் போய்ச் சேர்ந்திட்டா. நாளைப் பின்னேரத்தோட இந்த அந்தரம் இராது" 'என்றான், இவனும்.

தேவையான சாமான்களைப் பார்சல்கட்டி வைத்திருந்தது இப்போநன்மையாகப் போயிற்று.... இப்படியே தூக்கிக் கொண்டு போய் விடலாம். அதிர்ஷ்டமிருந்தால் கொண்டு போய்ச் சேர்க்கவும் சேர்க்கலாம்....

நேரமாகிறது. எழுந்திருந்து. பக்கத்தில் அயர்ந்து போய்க்கிடந்த மனைவியை மெல்லத் தட்டினான். வேணி, திடுக்கிட்டு விழித்தாள்.

# 3

பாத்ரூமுக்குப் போகும்போது, இந்த நேரத்திலுங்கூட வீட்டுக்காரரும் அவர் மனைவியும் பேசிக்கொள்கிற சப்தம் லேசாகக் கேட்டது. நித்திரை கொள்ளாமல் இரவு முழுவதும் இப்படித்தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. எப்படி நித்திரை வரும்? இது அவர்களுக்குச் சொந்த வீடு. இவர்களைப் போல உதறிவிட்டு ஊருக்கு ஓடிவிட முடியாது! அவனுக்குப் பாவமாயிருந்தது. ஆனாலுங் கூடவே, 'ஐம்பத்தெட்டாம் ஆண்டுக்குப்பிறகும் தெற்கில் இப்படி வீடுகள் வாங்கின கட்டின எங்கள் ஆட்களுக்கு மூளையில்லை' என்று எண்ணமும் வந்தது.

நேற்று மாலை ஊருக்குப் போகிற முடிவை எடுத்ததும், முதல்காரியமாக வீட்டுச் சொந்தக்காரரிடம் வந்து சொன்னான்."

"நாளைக்காலைமையா? பிளேனிலையா?" - முகத்தில் வியப்புடன் அவர் கேட்டார்.

"இல்லை' ரயிலிலை...."

"ரயிலா?...."... அவர் மனைவி வெளியே வந்தா.

"....அவளையுங் கூட்டிக் கொண்டு ரயிலிலையா போறீங்கள்?.... நீங்கள் தனிய எண்டாலும் பரவாயில்லை" உண்மையான கவலையுடன் சொன்னா.

"இல்லைப் பாருங்கோ, பிளேன் ரிக்கற் இப்போதைக்குக்கிடையா! நான் இப்ப இரண்டு நாளாத் தெண்டிச்சுப் பாத்திட்டன். இன்னும் மூண்டு நாளைக்கு புக்கிங்ஸ் ஃபுல். அதுவும் இப்ப அகதிமுகாமிலை இருக்கிற ஆக்களுக்குத்தான் முதலிலை இடம் குடுக்கினம் - அது நியாயந்தானே...."

வீட்டுக்காரர் குறுக்கிட்டார்.

"ஓ, இப்ப நேற்றும் முந்தநாளும் இங்கயிருந்து

வெளிக்கிட்டரயிலுகள் இரண்டும் பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்திருக்குத்தானே! காவல் போட்டுத்தானே ரயிலும் போகுது!''

''காவல் போட்டு என்ன செய்கிறது? தண்ட வாளத்தை யாராவது வழியில் கழட்டி விட்டிருந்தா என்ன செய்யேலும்?''

''இந்த ரயிலுக்கு அரைமணித்தியாலத்துக்கு முதல் பைலற் ட்றெயின் ஒண்டு போகுதாம்....'' கூட நின்ற சாம் பன் சொன்னுன்.

''சரி, தீர்மானிச்சிட்டிங்கள். பத்திரமாய்ப் போய்ட்டு வாங்கோ....'' - வீட்டுக்காரர் ஆசீர்வதிப்பது போலச் சொன்ணர்.

அவன் சற்றுத் தயங்கினுன். அவர் புரிந்துகொண்ட வராக மேலே தொடர்ந்தார்.

''....எங்களைப் பற்றி யோசியாதையுங்கோ. என்ன நடந்தாலும் இங்கயிருந்து ஏற்றுக் கொள்ளுறதெண்டு தீர்மானிச்சிட்டம்....''

அந்த உறுதி அவனுக்கு வியப்பை அளித்தது.

''....தம்பி, முந்தி உமக்குச் சொன்னது போலை, எனக்கு வேண்ட வழியில்லை.... இது, என்ர சொந்த சம்பாத்தியத்திலை - நான் உழைச்சு உழைச்சு மாதச் சம்பளகாரன் நான் - வாங்கின வீடு. இதை விட்டிட்டுப் போக என்னுலை முடியாது. இனி விட்டிட்டுப் போயுந்தான் அங்க என்ன செய்யு ஏலும்? இந்த உத்தியோகமில்லையெண்டா, எங்களை நாயும் மதியாது.... கொத்தித் தின்னுறதுக்கு ஊரிலை நிலபுலம் இருந்தாலும் பரவாயில்லை....''

அவர் சொன்னதிலுள்ள நியாயத்தை உணர்ந்து தன் சமூகத்திற்காக இரக்கப்பட்டவனுயும், அவர் உறுதியை மாற்ற முடியாதென்பதை அறிந்தவனுயும் அவன் சொன்னுன்.

"என்னதானிருந்தாலும் இந்த நிலைமையிலை உங்களை விட்டிட்டுப்போக எங்களுக்கு ஒரு மாதிரியாய்த் தானிருக்கு...."

"அதை யோசியாதையும், எங்களைப்போல இல்லை, நீங்கள்,....எங்களுக்கு எது நடந்தாலும் யோசிக்க ஒருத்தரும் இல்லை. எங்கட குடும்பத்திலை நாலுபேர். நாலுபேரும் இங்கேயே இருக்கிறம் எது விதிவந்தாலும் எங்களுக்கு ஒண்டாத்தான் வரும். ஆனா உங்களுக்கு ஊரிலை அப்பா அம்மா நாளும் பொழுதும் இதே கவலையாய்த் தானிருப் பினம்.... அவயளின்ர நிம்மதிக்காக ஆவது நீங்கள் போகத் தான் வேணும்...."

அந்த மனிதரில் பாசம் மிக்கவனாய் திரும்பும்போது அவன் சொன்னான்;

"எதுக்கும் உங்கட தீர்மானத்தை இன்னொரு தரம் திரும்ப யோசிச்சுப் பாருங்கோ. உங்கட மனதைக் குழப்புற தாகத் தயவு செய்து நினைக்க வேண்டாம்......"

4

குளியலறையிலிருந்து வந்தபோது நாலேகால் ஆகி யிருந்தது. சாம்பன் ஐந்தரைக்கு வருவதாகச் சொல்லியிருந் தான்.

"நீர் பாத்ரூமுக்குப் போயிட்டு வாரும்...." என்று வேணியிடம் சொல்லிவிட்டு, மளமளவென்று மீதமிருந்த சாமான்களை ஒதுக்கும் வேலையில் ஈடுபட்டான்.

வழக்கமான ஐந்தேமுக்கால் 'யாழ்தேவி' கொஞ்ச நாட்கள் ஓடாமல் நின்றுவிட்டு இப்போது இரண்டு நாட் களாகத்தான் ஆறேமுக்காலுக்கு ஓடத் தொடங்கியிருக் கிறது. ஆறுமணிக்கு கோட்டை ஸ்ரேஷனில் நிற்க வேண்டு மென்றால் இங்கிருந்து ஐந்தரைக்காவது வெளிக்கிட்டாக வேண்டும். ஊரடங்குச் சட்டம் ஐந்து மணிவரைதான்

என்பதால் ஐந்தரைக்கு வருவதில் சாம்பனுக்குக் கரைச்சல் இராது. வீடு பக்கத்தில்தான்.

சாம்பன் இருக்கிற வீட்டுக்காரரும் இங்கேயே நின்று பார்க்கப் போவதாகத்தான் சொல்லிக் கொண்டிருந்தார். அவருக்கும் சொந்த வீடு. இனி என்ன யோசிக்கிறாரோ? குஞ்சு குருமனுக நாலைந்து பிள்ளைகள்.... அவனுக்குப் பாவமாயிருந்தது.

'ஆருக்கு ஆர் அநுதாபப்பட முடியும்? பட்டுத்தான் என்ன செய்ய முடியும்?' என்று மனதை ஆற்றப்பார்த்தான்.

வேணி திரும்பி வந்தபோது உடுப்புப் போட ஆயத்தமாயிருந்தான். அவள் ஃப்ளாஸ்கில் தேநீரை ஊற்றி வைத்துவிட்டு, நேற்று வாங்கி வைத்திருந்த பாணை வெட்டத் தொடங்கினாள். அவளருகே மெல்லப் போய் நின்று,

''இண்டைக்கு இப்பிடி இந்த ரயிலிலை போறது உமக்குப் பயமில்லையே?.... பயமாயிருந்தா, இப்ப எண்டாலும் சொல்லும் - இந்த யோசனையை விட்டிட்டு அகதி முகாமிலை போய் நிண்டு, பிளேனுக்குத் தெண்டிக்கப் பாப்பம்....'' என்றான்.

''இப்பிடி நெடுக யோசிச்சு மனங்குழம்பாமல், எடுத்த முடிவுப்படி வெளிக்கிடுவம், எது நடந்தாலும் இரண்டு பேருக்கும் ஒண்டாய்த்தானே நடக்கும்?''

அவள் குரலில் தொனித்த உறுதி அவனுக்குத் திருப்தியாயிருந்தது.

## 5

வெளிக்கிட்டு முடிந்ததும், யன்னல்களைப் பூட்டிவிட்டு எல்லாம் சரியாக இருக்கிறதா என்று சுற்றிப் பார்த்தான்.

வெளியே வந்தபோதுதான் விருந்தையிலிருந்த மீன் தொட்டியும் பூச்சட்டிகளுங் கண்ணிற்பட்டன.

காசித்தும்பைச் செடிகளிரண்டிலும் இப்போதுதான் மொட்டுக் கட்டியிருக்கிறது. சட்டியில் வைத்து, தண்ணீரும் உரமுமாய் ஊட்டிக் காத்ததற்கு, இந்த மொட்டுதான்- கணுக்களிள் திரண்டு, குருத்தல்ல என்று அடையாளம் காட்டுகிற மொட்டுக்கள்தான் வரவு. இது றோஸ் நிறக் காசித்தும்பை, அடுக்கு இதழ், றோசாப்பூமாதிரி இருக்குமென்று சொன்னார்கள். வேணி, வலு ஆவலாக இது பூக்கப்போகும் நாளைப் பார்த்திருந்தாள். இப்போது பூக்கும் நேரத்தில் அதை விட்டுப்போக வேண்டி வந்துவிட்டது, திரும்பி வரும்போது - வந்தால் - கருகித்தான் போயிருக்கும் - அதோடு இந்தப் பெயர் தெரியாத செடியும்.

பாதி முறிந்து, வெய்யிலில் வாடிப்போய்த் தெருக்கரையில் கிடந்த இதன் மூளையை, கந்தோரால் வரும்போது -ஒரு நாள் கண்டெடுத்து வந்தான். வெள்ளையும் பச்சையுமான பெரிய இலைகள். நட்டதுதான் தாமதம், கிழமைக்கு ஒரு இலையாய் எறிந்து எழும்பிவிட்டது.

மீன்தொட்டி கூட வற்றித்தான் விடும். ஒரு கப்பிஸ் குட்டியும் நாலு பிளேட்டீஸுமாக ஐந்து மீன்கள். கடந்த ஐந்து மாதமாகச் சேர்ந்து வாழ்ந்து வருகிற மீன்கள். இந்த கப்பீஸ் குட்டி இங்கேயே இந்த வீட்டில்தான் - பிறந்தது. இதன் தாய், ஒரு நாள் - ஒரே நாளில் - மளமளவென்று போட்ட பதினெட்டுக் குட்டிகளில் மிஞ்சி வாழ்கிற குட்டி அது. இந்த ஐந்து மாதமும் தாண்டிவிட்டது. இனி, தப்புகிற பருவம். வால், வர்ணங்களாக மினுங்கத் தொடங்கிவிட்டது. கப்பீஸில் வால்தான் அழகு - அதிலும் ஆண்மீன் - மயில் தோகையாய் மின்னுகிற வால்.

பிளேட்டீஸ் அப்படியில்லை. முருக்கம் பூ நிறத்தில் பாதிவிரல் நீளத்தில் பளபளக்கும். பத்து ஆக இருந்தவை.

போன்முற்ற ஊருக்குப்போய் இரண்டு கிழமை நின்றுவிட்டு வந்தபோது நாலாகிவிட்டிருந்தன.

திரும்பி வருகிறபோது - வந்தால் தொட்டியின் தண்ணீரெல்லாம் வற்றி இதுகளெல்லாம் செத்துக் கருவாடாகி — உண்மையான கருவாடாகவே - ஆகியிருக்கும்.

இந்த நேரத்தில் மீனும் பூஞ்செடியும் சாகப்போகிறதுக்காகக் கவலைப்பட முடியாது என்று நன்ருக உணர முடிகிறது, மனிதர்களே ஒன்றும் பத்துமாய் அங்குமிங்கும் அநியாயமாய் வெட்டியும் சுட்டும் கொல்லப்படுவதாகச் சேதிகள் காதில் விழும்போது!

பூச்சட்டிகள் மூன்றையும் மழை பெய்கிறபோது பிடிக்கக்கூடிய இடமாக - வெய்யில் கருக்கர்தப்டி - பல்கணியில் தோதான இடம் பார்த்து வைத்தான். பெய்கிறபோது நனைந்து கொள்ளட்டும். மீன் தொட்டியை ஸிங்க்கின் குழாய்க்குக் கீழேவைத்து, தண்ணீர் சொட்டுச் சொட்டாக விழும்படி குழாயை மெல்ல இளக்கி விட்டான்.

இந்த அவதியில், இவற்றுடன் இவ்வளவு நேரம் மினைக்கெட்டதே பெரிது. கதவுகளிரண்டையும் அவசரமாகப் பூட்டித்தள்ளிப் பார்த்துக் கொண்டார்கள். வெளியே எடுத்து வைத்திருந்த அந்தக் காட்போட் பெட்டியையும் சூட்கேஸையும் தூக்கிக் கொண்டு கீழே இறங்கிஞர்கள். வானம் வெளிறத் தொடங்கியிருந்தது.

## 6

சாம்பன் வந்து, கீழே வீட்டுக்காரருடன் பேசிக் கொண்டு நின்ருன்.

முதலில் இறங்கிய வேணியைக் கண்டதும், வீட்டுக்காரரின் மனைவி வெளியே வந்தா.

"நீர் இதிலே நில்லும்...." என்று வேணியிடம் சொல்லி விட்டு, சாம்பனைப் பார்த்து,

"....போவமா?" என்ருன்.

"ரக்ஸிதானே?" என்ருர் வீட்டுக்காரர்.

"அது சரியான ஆபத்தெல்லா? ரக்ஸிக்காரனை எப்பிடி நம்புகிறது?" என்ருர், அவர் மனைவி.

"பஸ்ஸிலே போறது இன்னும் ஆபத்து. நாங்கள் இரண்டுபேர் ஆம்பிளேயள் இருக்கிறந்தானே...." சாம்பன் சொன்ஞன்,

இவர்கள் வீடிருந்த ஒழுங்கையிலிருந்து தெருவுக்கு வந்தபோது இன்னும் தெரு விளக்குகள் எரிந்து கொண் டிருந்தன. முடக்கில் இரண்டு ஆமிக்காரர்கள் துவக்கு களுடன் நின்ருர்கள். இவர்களைக் கூர்ந்து பார்த்தார்கள். அப்பாவித் தமிழர்கள் என்பது பட்டிருக்கும். நெருங்கித் தாண்டியபோது, உயரமாய் முறுக்கு மீசையுடன் நின்றவன் இவனைப் பார்த்து மெல்லப் புன்னகை செய்தான். நேற்றுப் பகல் இதே இடத்தில் நின்ற ஸென்ட்ரி. இரண்டு மூன்று தடவை ஆளை ஆள் பார்த்திருந்தார்கள். பதிலுக்குப் புன் னகைத்தான்.

'இந்த ஆளும் சிங்கள ஆள்தானே!' என்ற எண்ணம் வந்தபோது,

"என்ன, கூட்டாளியா...." என்று சாம்பன் சிரித்தான்,

ஐம்பது யார் தள்ளி, தபாற் கந்தோரடியில் இன்னும் இரண்டு ஆமிக்காரர்கள் இதேபோல நின்ருர்கள். இந்த இடத்தில் தமிழர் வீடுகள் அதிகம்.

வழக்கமாக ரக்ஸிகள் நிற்கும் இடத்தில் ஒன்றையும் காணவில்லை.

"தியேட்டருக்கு முன்னலே பாப்பம்...." என்ருன்.

பேப்பர் கடையிலிருந்தும், பால் வாங்கிக்கொண்டும் போன ஒன்றிரண்டு பேர், இவர்களை உற்றுப்பார்த்துக் கொண்டு போனார்கள்.

"இவங்கள், எங்களைப் பார்க்கிற மாதிரியைப் பாரடா....?" என்றான் சாம்பன்.

"இப்ப கொஞ்ச நாளா இப்பிடித்தான் பாக்கிறுங்கள். வேடிக்கை பாக்கிறவை, நக்கலாப் பாக்கிறவை, அநுதாபத் தோட பாக்கிறவை, துணிஞ்சு தெருவில போறுங்களே எண்டு ஆச்சரியத்தோட பாக்கிறவை - எல்லாரும் இருக் கினம்...."

தியேட்டருக்கு முன்னால் ஒரு ரக்ஸிதான் நின்றது. தூரத்திலிருந்து நோட்டம் விட்டபோதே, ட்ரைவர் திருப்தி யளிப்பவனாக இவர்கள் விரும்பியதுபோல் வயதானவனாக, அமைதியானவனாகத் தெரியவில்லை.

'மூறடன்' போலத்தான் இருந்தான்.

"வேற வழியில்லை...." அவனிடம் போனார்கள்.

## 7

காலி வீதியில் ரக்ஸி ஏறியபோது - மற்ற எல்லாத் தமிழ்க் கடைகளையும் போலவே - எதிரே 'வேல்முருகன் கஃபே' பூட்டிக் கிடத்தது.

போன செவ்வாய்க் கிழமை, இந்த இடத்தில் தான் இந்தக் கலம்பகச் சேதி முதலில் காதில் விழுந்தது.

நிச்சிந்தையாய் புத்தகக் கடைக்குப் போய் விட்டுத் திரும்பியபோது பிரேம ராஜன் எதிர்ப்பட்டான். ஆளைச் சந்தித்து இரண்டு வருடமாவது இருக்கும். 'வேல் முருகன் கஃபே' முன்னால் யாருடனே பேசிக்கொண்டு நின்றவன் இவனைக் கண்டதும் ஓடிவந்து, ஸீரியஸான - மெல்லிய

குரலில்; "யாழ்ப்பாணமெல்லாம் பெரிய கலாட்டாவாம் ஐஸே.... பொலீஸ்காரருக்கும் சனங்களுக்கும் சண்டையாம்...." என்றான்.

திடுக்கிட்டுப்போய். "ஏன்? எப்ப? உண்மையா?...." என்றவன், அதே வேகத்தில் தொடர்ந்து, "....அப்பிடியெண்டா, இனி அது ஒரு கொம்யூனல்ரேன் எடுக்காமலிருக்க வேணுமே!" என்றான்.

"மரக்கற்றையும் எரிச்சு, இரண்டு மூண்டு பேரைச் சுட்டும் போட்டாங்களாம்...."

"இது எப்ப நடந்தது?"

"நேற்றும் இண்டுமாம்....! நான் இப்ப பின்னேரம் ஒரு 'ட்றங்க்கோல்' எடுத்தனான் - ஒரு விஷயமாய், அப்ப தான் இது தெரிஞ்சுது!"

"உம்மட குடும்பம் எங்கை?"

"யாழ்ப்பாணத்திலதான்....உம்மடை?"

"....இங்கதான்! அதுதான் யோசிக்க வேண்டியிருக்கு...." என்றவன் தொடர்ந்து,

"-ஆ! பயந்து என்ன செய்கிறது! எத்தினை ஆயிரம் குழந்தை குட்டியள், வயது போனதுகள், சுகமில்லாததுகள் எல்லாம் இஞ்ச இருக்கு! நாங்களேன் பயப்படுவான்?" என்று தன்னைத்தானே சமாதானப்படுத்துவது போலக் கூறினான்.

இப்படித்தான் அவளும் போனமாதம் சொன்னாள். தேர்தல் அமளிகளுடனேயே ஒரு குழப்பத்தைப்

பலபேர் எதிர்பார்த்துப் பயந்திருந்தார்கள்.

"வாரும், உம்மையாவது யாழ்ப்பாணத்தில கொண்டு போய் விட்டிட்டு நான் திரும்பி வந்துநிற்கிறன்...." என்ற போது, வேணி மறுத்து விட்டாள்,

"உப்பிடிப் பயந்து என்ன செய்யிறது! கொழும்பிலை எத்தினை ஆயிரந் தமிழர் இருக்கினம்.... எல்லாருக்கும் வாற விதிதானே எங்களுக்கும்!"

அந்தக் குழப்பம் இப்போது ஒரு மாதம் பிந்தித் தொடங்கியிருக்கிறது போலத் தெரிகிறது. கொழும்பிலை இருக்கிற, எத்தினை ஆயிரந் தமிழருக்கு மட்டுமன்றி இலங்கையிலே இருக்கிற எல்லாத் தமிழர்களுக்குமே அமைதி போய் விடலாம்....

இந்த நேரம் பார்த்து - கையில் அரும் பொட்டாகக் கிடந்த காசில் - பதினைந்து ரூபாய்க்குப் புத்தகம் வாங்கியிருக்கக் கூடாது என்று பட்டது.

## 8

"பாத்திரா? பீற்றேஸ் கொலிஜ் அகதிமுகாம்...." -சாம்பன், தன் மனைவிக்குக் காட்டினான்.

அது தாண்டுவதற்குள் கதிரேசன் கோவில் முகாம் வந்துவிட்டது.

"இப்ப எல்லாமாக எத்தனை முகாம்கள் இருக்கு?" வேணி கேட்டாள்.

"நாலு...." என்றான் இவன்.

"....முதல் தொடங்கியது உறின்டுக் கொலிஜ். பிறகு கதிரேசன் கோயில் பிறகு கதிரேசன் மண்டபம். கடைசியா பீற்றேஸ் கொலிஜ்"

"எல்லாத்திலையுமா சேர்த்து ஐயாயிரத்துக்கு மேலை அகதியள் இருக்கினமாம்." என்றான் சாம்பன்.

கோயிலைத் தாண்டும்போது, வேணியும் சாம்பனின் மனைவியும் குனிந்து கும்பிட்டார்கள்.

கதைப் பராக்கில், ட்றைவரைக் கவனிப்பதை விட்டு விடக்கூடாது என்று தனக்குள் ஞாபகப்படுத்திக் கொண்டான்.

'இத்தனைபேரையும் கப்பலிலைதானே யாழ்ப்பாணம் அனுப்பப் போகினம்?....'' என்று சாம்பனின் மனைவி கேட்டாள்.

''பிளேனிலையும் போயினம்....''

இன்னும் ஆக்கள் வந்தபடிதான் இருக்கு....பீற்றேஸ் கொலிஜ் நிரம்பினா, அடுத்த முகாம் திறக்க ஆயத்தமாயிருக்கினம்....

பெண்களின் பதட்டம் குறைந்திருப்பது போலப் பட்டது. சாம்பனின் மனைவியும் வேணியும் பேசிக் கொள்ள ஆரம்பித்திருந்தார்கள்.

''நீங்கள் ஏன் அகதி முகாமுக்குப் போகவேணும்?'' என்று அன்றைக்குக் கேட்டவன், அந்த நாயக்க, ஒரு சிரிப்புடன் கேட்டான்.

திங்கட்கிழமை பகல் கந்தோருக்குப் போனபோதே, அந்த வித்தியாசம் - மனதிற்பட்டது. பிரதமரின் பேச்சை வெள்ளி இரவு றேடியோவில் கேட்டபோது ஏற்பட்ட பய உணர்வு இப்போதும் வந்ததுபோல - கோபாலின் மேசையை சுற்றி எட்டுப்பத்துப்பேர், மதநுவரவின் மேசையைச் சுற்றி மீதிப்பேர் என்று நின்றார்கள்; இவனை ஒருவரும் ஒன்றுங் கேட்கவில்லை. சிங்கள நண்பர்கள் எல்லாரும் தலையைக் கண்டதும் ஓடிவந்து விசாரிப்பார்கள் என யோசித்திருந்தான் ஆனால், அவர்கள் எல்லோரும் மதநுவரவின் மேசையைச் சுற்றி நின்றபடி பேசிக் கொண்டிருந்தார்கள். கண்டபிறகும் கூட வெகு சாதாரணமாய்க் கதையைத் தொடர்ந்தார்கள். அப்போதுதான் அது-அந்த ஏமாற்றம், வெறுமை; பயம் - மனதில் உறைத்தது.

மணிபத்தாகியிருந்தாலும்கூட ரெஜிஸ்ரர் மூடப் படாமல் இருந்தது, எட்டு மணிபோட்டுக் கையெழுத்து வைத் தான். வீட்டிலிருந்து வெளிக்கிட்டபோதே ஒன்பதரை- வழக்கமான நேரத்திலும் இரண்டு மணித்தியாலம் பிந்தி. தொடர்ச்சியாய் முப்பத்தாறு மணி நேரம் ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்து முடிந்து மூன்று மணித்தியாலங்கூட ஆவதற்குள் வெளியே புறப்படுவது முட்டாள்தனம்- அதிலும் தமிழர்கள் ஆபத்தை எதிர்நோக்குகையில்; வேண்டு மென்றே பிந்திப் புறப்பட்டான்.

கோபாலின் மேசையடிக்குப் போன போது,' கப்பல் போகுதாம்!.... போகேல்லையே?'' என்றான். சிவஞானம். ''பகிடி விடாதையுங்கோ.... உண்மையாகக் கப்பலிலைதான் போகப்போறம் எல்லாரும்-''

''பகிடி இல்லை, உண்மையாத்தான்'' என்றான் கந்த சாமி. அது செய்தியாகத் தானிருந்தது.

''மூண்டு கப்பல் ஒழுங்கு படுத்தியிருக்காம்....''

''உறிண்டுக் கொலிஜ், மிஷன் ஹோல் - இரண்டிடத் திலையும் முகாம் திறந்து ஆயிரம் பேருக்கு மேலை வந்திருக் கினமாம்....''

சேதிகள் தொடர்ந்தன.

இவ்வளவும் எப்போ நடந்தன? இவர்கள் எப்படி அறிந்தார்கள்? உலகம் தன்னைத் தனியே விட்டு முன்னே போய்விட்டதைப் போல உணர்ந்தான்....

முழு விபரமும் கேட்டறியப் பதினைந்து நிமிஷமானது.

நுகேகொடை, கிரிலப்பனை, இரத்மலானை போன்ற இடங்களிலிருந்து நேற்றைக்கே ஆமிக்காரர் ஆட்களைக் கூட்டிக் கொண்டு வந்து காம்ப்பில் விட்டுவிட்டார்களாம்.

''இன்னும் சனம் வந்தபடி இருக்கு....'' என்றான் சிவஞானம்.

''அடுத்தது வெள்ளவத்தைதான்....'' என்று சொல்லிச் சிரித்தான் சாம்பன். கலவரம் கலந்த சிரிப்பு.

மதநுவரவின் மேசையைக் காட்டி இவன் கேட்டான்.

''இவர்களொருதரும் வந்து உங்களை ஒண்டுங் கேக்கேல்லயே?''

''ம் ஹூம்!''

''ஒருத்தரையும்?''

''இல்லே....''

''இருக்கிறீங்களா - செத்தீங்களா? ஆராவது அடிக்க வந்தாங்களா? வீட்டுக்குக் கல்லெறிஞ்சாங்களா? - பயப்படுறீங்களா - எண்டு கூட?''

- ரக்ஸி திடீரென்று வேகங் குறைவது போலிருந்தது. திடுக்கிட்டு உஷாரானேன்.

# 9

பம்பலப்பிட்டி சந்தி வந்துகொண்டிருந்தது. சாம்பனைப் பார்த்தான். அவன் நேரே பார்த்துக்கொண்டிராமல், அரை வாசி திரும்பி, ட்றைவரும் பின் ஸீற்றில் உள்ளவர்களும் தன் பார்வையில் விழக்கூடிய விதமாக ஒரு கோணத்தில் உட்கார்ந்திருந்தான், சாம்பன் கவனமாகத்தானிருக்கிறுன்.

ரக்ஸியில் தான் ஸ்ரேசனுக்குப் போவது என்று தீர்மானித்தபோதே, ஒரு ஆள் ட்றைவருக்குப் பக்கத்திலும் மற்றவன் நேரே பின்னுலும் எச்சரிக்கையாய் இருந்து கொள்ள வேண்டுமென்று யோசித்திருந்தார்கள். ரக்ஸியில் ஏறி. முதலில் சாம்பன் வீட்டுக்குப் போய் அவன் மனைவியை யும் பிறகு வந்து வேணியையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்ட போது அது சரியாயிருந்தது.

'என்ன?' என்பதாகப் புருவத்தை நெறித்தான். 'ஒன்றுமில்லை என்று சாம்பன் சமிக்ஞை காட்டினுன். பெண்

களிருவரும் தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தெரு அமைதியாய்க் கிடந்தது. அசாதாரணமான அமைதி. சந்தியில் சிக்னல் விளக்குகள் எரியாமல் நின்றன.

இந்த இடத்தில் நின்று இடித்துத் தள்ளிக் கொண்டு ஏறிய கூட்டந்தான் அன்று ஒஃபீஸுக்குப் போனபோது பதட்டத்தைத் தந்தது. கொழும்பில் வாழ்ந்த இந்தப் பத்து வருடத்திலும் இப்படி ஒரு கூட்டத்தை இந்த இடத்தில் அந்த நேரத்தில் பார்த்தது அதுதான் முதல் தட்வை. ஆனால் அது கந்தோருக்குப் போகிற சனந்தான். பஸ்கள் வெகுவாகக் குறைந்திருந்தன.

அந்த நெரிசலில் நிற்கவே பயமாயிருந்தது. தப்பித் தவறி யாருடனாவது மோதிக் கொண்டால், மிதித்துக் கொண்டால், இதுதான் சாட்டென்று பஸ்ஸுக்குள்ளேயே வைத்து மொங்கிவிடக்கூடும் என்று பட்டது. மூச்சைப்பிடித்துக் கொண்டு பத்திரமாக நின்றான். தமிழ் முகங்களாக அல்லது தெரிந்த முகங்களாகத் தன்னும் ஒன்றையும் காணவில்லை.

பஸ் தும்முல்லை சந்தியில் பென்னம் பெரிய வெள்ளைப் புத்தர் சிலையைத் தாண்டியபோது சிலபேர் பயபக்தியாக எழும்பி விட்டுக் குந்தினார்கள்.

அன்றைக்குக் கந்தோரும் வழமைக்கு மாறாகத்தா னிருந்தது. பதினொரு மணிக்குப் பிறகு கோபாலின் மேசையைச் சுற்றி நின்ற எல்லோரும் வீட்டுக்குப் போக வெளிக்கிட்டபோது, "நாளைக்கு என்ன மாதிரி?" என்று கேட்டான் சத்தியசீலன்.

"நிலைமையைப் பொறுத்து வருவம்...."

"இருக்கிறமோ, சாகிறமோ....?"

அப்போதுதான் அந்தநாயக்க வந்தான். "என்ன யோசிக்கிறீர்கள்?"

இந்தக் கேள்வியே சரியில்லை...

"எப்படி, உங்கள் பக்கம்?" - சாம்பன் அந்தநாயக்காவைக் கேட்டான்.

"எங்கள் பக்கம் ஒன்றுமில்லை. நாங்கள் தமிழர்களைப் பத்திரமாகக் காப்பாற்றுவோம். ஒருதருக்கும் ஒரு அடி கூட விழாது! ஆனால் எல்லோரும் பயந்து போய்விட்டார்கள்...." அந்தநாயக்க சிரித்தான்.

அவனிடம் அந்தக் கேள்வியைக் கேட்டதற்காகச் சாம்பன் வருந்துவதுபோலத் தெரிந்தது.

அந்தநாயக்க, இவனிடந் திரும்பிக் கேட்டான்.

"என்ன கிருஷ்ணன்? பேசாமலிருக்கிறாய்...."

"ஒன்றுமில்லை...."

"இன்றுதான் சவ் அடக்கம்...." அந்தநாயக்க சொன்னான்...?

"யாருடையது?"

"யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட சிங்கள ஆளுடைது" "அங்கே, யாழ்ப்பாணத்தில் சிங்களவர் ஒருவரும் கொல்லப்படவில்லை. தமிழர்தான் செத்தார்களாம்."

"பொய் சொல்லவேணும்...." அந்தநாயக்க அரைகுறைத் தமிழில் உறுக்கிச் சொல்லிவிட்டு, பிறகு பழையபடி இங்லீஷில் சொன்னான்.

"....எங்களுக்கு எல்லாந் தெரியும். ஆனால் நாங்கள் அப்படிச் செய்யமாட்டோம். உங்களைப் பாதுகாப்போம்."

"வீண் வதந்திகளைத் தயவு செய்து நம்பவேண்டாம்"

"நீங்கள் ஏன் தனிநாடு கேட்கிறீர்கள்?"

"....அது வேறுகதை....தனிநாடு கேட்டதற்கும் இந்தக்

கலவரங்களுக்கும் சம்பந்தமில்லை. யாழ்ப்பாணத்தில் பொலி சுக்கும் பொதுமக்களுக்குமிடையில் ஏற்பட்ட கோளாறு இனக்கலவரமாகி இந்தளவுக்கு வந்திருக்கிறது.... முன்பு பேராதெனியாவிலோ, புத்தளத்திலோ நடந்த கலவரங்களைப் போலத்தான் இதுவும்....''

# 10

'ரக்ஸி' சட்டென்று நின்றது: கிருஷ்ணன் திடுக்கிட்டான். இதயம் படபடத்தது. வயிற்றுக்குள் புகைந்து. முன்சீற்றில் கையை வைத்து உஷாராளுன்,

"என்னது?''

சாம்பன் மூற்ருக ட்றைவர் பக்கந் திரும்பினான்.

''டிக்கி மூடி கழன்றுவிட்டது,மாத்தயா....'' ட்றைவர் இறங்கினான்,சாம்பனுங் கதவைத் திறந்தான்.

''நீ இறங்காமல் இருந்து கொள்....''

தலையைத் திருப்பிக் கண்ணுடிக் குள்ளாய் பார்த்தபடி "உண்மையாய்த் தான் டிக்கி கழண்டிருக்கு, பயப்படாதை யுங்கோ....'' என்ருன் கிருஷ்ணன். பெண்கள் பெருமூச்சு விட்டார்கள்.

சாம்பன் கதவருகில் வந்து, ''டிக்கிதான்....'' என்ற போதே டக்கு டக் கென்று திருப்பித் திருப்பி டிக்கிக் கதவை அடிக்குஞ் சப்தங் கேட்டது.

பிறகு ட்றைவர் வந்தான்.

''இப்ப சரி''

பெரிதாகப் பெருமூச்சு வந்தது.

கொஞ்சத் தூரம் போனதும்,

"இந்த ஆள் 'ஐயா' என்டதைக், கவனிச்சியா?" - என்று கிருஷ்ணன் கேட்டான்

"எப்ப?" சாம்பனுக்குப் புரியவில்லை.

"டிக்கி மூடி கழண்டு போச்சு, ஐயா! எண்டானே...."

"நான் கவனிக்கேல்லை...."

"இந்த நேரத்திலும் இப்பிடிச் சொன்னது, எனக்குப் பெரிய ஆச்சரியமாயிருக்கு.... வாய்ப்பழக்கமாயிருக்கும்...." சாம்பனும் பெண்களும் மெல்லச் சிரித்தார்கள்.

சேமிப்பு வங்கி, பிரிட்டிஷ் கௌன்ஸில், ஒபரோய் - என்று ஒவ்வொன்ருகப் பின்னுல் ஓடின....அந்த வங்கியில் கிருஷ்ணனுக்குக் கணக்கு இருந்தது. பிரிட்டிஷ் கௌன்ஸில் லைப்ரரியில் அவன் மெம்பர் - நல்ல காலமாக இப்போது புத்தகம் ஒன்றும் இரவல் வாங்கியிருக்கவில்லை. வெளிநாட்டிலிருந்து நண்பரொருவர் வந்து நின்ற போதுதான், ஒபரோய்க்குள் முதன் முதலில் போகச் சந்தர்ப்பங்கிட்டிற்று. அன்பிற்குரிய அந்த நண்பரின் நினைவும், அந்த மாளிகையின் நினைவும் ஒன்ருகிவிட்டிருந்தன - அவரை நினைத்தால் அதுவும், அதை நினைத்தால் அவரும் நினைவுக்கு வருகிற மாதிரி.

கோல்ஃபேஸின் குளிர் காற்று முகத்திலடித்தது. துறைமுகப் பக்கமாக நாலைந்து கப்பல்கள் தெரிந்தன. கடல் அமைதியாய் விரிந்து கிடந்தது. "உந்தக் கப்பல்களிலை தான் எங்கட ஆக்களை அனுப்புவினமோ?" என்ருன் சாம்பன்.

"இருக்கும்...."

'சிலிங்கோ' உச்சி, ஆகாசக்கடை, பாராளுமன்றக் கட்டிடம், செக்ரடேரியட்.... ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தொடர்பிருந்தது - ஒவ்வொரு நினைவிருந்தது....

இனிமேல் வாழ்க்கையில் இவற்றைக் காணுகிற சந்தர்ப்பமே இல்லாமற் போகலாம்........

# 11

ரக்ஸியிலிருந்து இறங்கியபோது, ஒரு கண்டத்திலிருந்து தப்பிய உணர்வு உண்டாயிற்று - நல்ல காலமாக ரக்ஸிக்காரன் எங்கும் கடத்திக் கொண்டு போய் விடவில்லை.

இறங்கி, பின்புறமாகச் சுற்றிக்கொண்டு மற்றப்பக்கம் வந்தபோதுதான், சூட்கேசை மடியில் வைத்துக் கொண்டு வேணி இறங்க முடியாமல் தத்தளிப்பதைக் கண்டான். சாம்பனின் மனைவி இறங்கி விட்டிருந்தாள். கையையூன்றி உள்ளே குனிந்து சூட்கேசை எடுத்தபோது, "ஐயோ...." என்று குழறினான்.

முன் கதவைச் சாம்பன் சாத்தியிருக்க வேண்டும். இடதுகைச் சின்னி விரல் அறுந்து விழுந்தது போல வலித்தது. கதவைத் திறந்து கையை எடுத்த போது, விரல் நுனி சப்பளிந்து போய் இரத்தம் வடிந்தது.

"ஐயோ........" என்றான் சாம்பனும், பதறிப் போய்.

"....ஸொறி, ஸொறி.... நான் கவனிக்கேல்லை."

"விரலைச் சூப்புங்கோ...." என்றாள், சாம்பனின் மனைவி.

வேணி ஓடிவந்து கையைத் தூக்கி விரலை வருடினாள். தெறிப்பது போல வலித்தது. டிக்கி மூடியோடு போராடிக் கொண்டிருந்த ட்றைவரும் ஓடி வந்தான்.

"என்ன மாத்தயா?...." என்றவன், "....அணே" என்றான்.

தனது ஷேட் பொக்கற்றுக்குள்ளிருந்த லேஞ்சியை எடுத்து இரண்டாகக் கிழித்துக் கொண்டு, மூன்றுநிரை தெருக்களையுந் தாண்டி, முன்னால் தெரிந்த கடைகளை நோக்கி ஓடினான்.

சூப்பச் சூப்ப இரத்தம் வாய்புளித்தது, கிருஷ்ணனுக்கு. அவன் பொக்கற்றுக்குள்ளிருந்த கைக்குட்டையை இழுத்து, காயத்தின் மேல் பொத்தினுள் வேணி.

ட்றைவர் திரும்பி வந்த போது, கிழித்த பாதி லேஞ்சி தண்ணீரில் நனைத்திருந்தது. கையைப் பிடித்திழுத்து, கைக்குட்டையை எடுத்து விட்டு, அந்த ஈரத் துணியை இறுகச் சுற்றினுன். குளிர்ச்சியில் வலி குறைந்தது.

''இனி இரத்தம் நிண்டிடும்....'' என்ருன் ட்றைவர், சுற்றி முடித்ததும்.

''....பயப்படாதையுங்க மாத்தயா, சின்னக் காயந் தான்.''- அவன் புன்னகைத்தான்.

இருபது ரூபாய் கேட்டான். ஆளுக்குப் பத்தாய் அவனும் சாம்பனும் கொடுத்தார்கள். ஏதோ நினைத்தவனுய் உடனேயே பொக்கற்றுக்குள் கையை விட்டு, இன்னெரு ஐந்து ரூபாயையும் எடுத்தான் கிருஷ்ணன். ''வேண்டாம் மாத்தயா, கூடுதலாக வாங்கிறது சரியில்லே....''-அந்த மனிதன் கதவைத் திறந்து தன் ஸீற்றில் குந்தினுன். ''நான் போறன்.... பத்திரமாய்ப் போய் வாங்கோ....''

''வாருமன்....'' என்று வேணி கூப்பிடும் வரையில், அந்த ரக்ஸி போன திசையைப் பார்த்தவாறு நின்ருன் கிருஷ்ணன். ''ஒரு உண்மையான மனுசன்!'' என்ருன் சாம்பன் நெகிழ்ந்து பேர்ய்.

போய் ரிக்கற் கியூவில் நின்ருர்கள்.

## 12

திரும்பிப் போய் அகதிமுகாமில் நின்று, கப்பலில் அல்லது பிளேனில் போகலாமா என்ற எண்ணம் திரும்பவும் ஒரு கணம் வந்தது. வேணியைப் பார்த்தான். அவள்
,

எல்லாவற்றையும் இவன் கையில் ஒப்படைத்து விட்ட நிம்மதியோடு-எது நடந்தாலும் இருவருக்குந்தானே என்ற நிதானமாயிருக்கலாம் - சாம்பனின் மனைவி சொன்ன எதையோ கேட்டுக் கொண்டிருந்தாள். என்றாலும் முகம் மாறித்தானிருந்தது. உள்ளூறைந்த பயத்தின் வெளிப் பாடான வெளிறல் – சாம்பனின் முகமும் அவன் மனைவியின் முகமுங்கூட அப்படித் தானிருந்தன. தன் முகமும் அப்படித் தானிருக்கும் என நினைத்துக் கொண்டான்.

அரைவாசியில் மனதைக் குழப்பி, முன்வைத்த காலைப் பின் வைக்கக்கூடாது என்று பட்டது. வருவது வரட்டும் என்று வந்தாயிற்று–இரண்டு மூன்று நாட்களாக யோசித்து யோசித்து எடுத்த முடிவு, இனிக் குழப்ப வேண்டாம்.

இருந்திருந்துவிட்டு நினைக்கும்போது இதெல்லாம்– இந்த ஐந்தாறு நாட்களாக நடப்பதெல்லாம் - ஏதோ திடீரென வந்து கவிந்த இருள் போல உணர முடிகிறது. தார்ஸி வித்தாச்சியின், 'எமர்ஜென்ஸி—58' என்ற புத்த கத்தைப் படித்தபோது, கற்பனை பண்ணிப் பார்க்கக்கூடப் பயமாயிருந்த விஷயங்களெல்லாம் இப்போது தன்னைச் சுற்றி உண்மையாகவே, மீண்டும் - இடையில் ஒரு இருபது வருடம் - நடக்கின்றது என்பதை நம்பமுடியாமலிருந்தது.

கிருஷ்ணன் மணிக்கூட்டைப் பார்த்தான். ஆறேகால். ரயில் இன்னமும் மேடைக்கு வரவில்லை. ஸ்ரேசன் வழமை போல இருப்பதாகத்தான் பட்டது - அதிகரிக்கப்பட்டிருந்த காவலைத்தவிர.

ரிக்கற்றுகளை வாங்கிக் கொண்டு உள்ளே போன போது யாழ்ப்பாண ரயிலுக்கு எதிர் பார்த்ததிலும் அதிக மான கும்பல் நிற்பதை உணர முடிந்தது. வழக்கமான ஒரு பயணத்தின் போது எரிச்சலையும் பயத்தையும் தந்திருக்கக் கூடிய இந்த நெரிசல் இன்றைக்கு ஒரு ஆறுதலாயிருந்தது.

"இவ்வளவு கிறவுட் இருக்குமெண்டு நான் நினைக் கேல்லை...." என்று சாம்பன் வியப்புடன் சொன்னான்.

"ஹலோ.... கிருஷ்ணன்...." - யாரோ முதுகில் தட்டினுர்கள். திரும்பிப் பார்த்தான். ஜெயதேவன்.

"ஹலோ...." என்ருன், பதிலுக்கு. "....என்ன பயணமா?...."

"ம்!...." என்று சொல்லி ஜெயதேவன் சிரித்தான்.

"....கப்பலிலே சந்திப்பம் எண்டு அண்டைக்குச் சொல்லிப் போட்டுப் போனன்... இண்டைக்கு ரயிலிலே சந்திக்கிறம்...." கிருஷ்ணனும் சிரித்தான் கசந்து.

"ஃபமிலி?"

"அந்தா, அதிலே நிக்கினம்.... நான் உங்களைக் கண் டிட்டுத்தான் வந்தனுன். போய், அவயளை இதிலே கூட்டிக் கொண்டு வரட்டா....எல்லாரும் ஒண்டாயிருந்து ஆளுக்காள் துணையாய்ப் போயிடலாம்...."

"ஓமோம், அதுதான் நல்லது...."

"இவர், உன்ர ஃபிரண்டா?"....

ஜெயதேவன் திரும்பியதும் சாம்பன் கேட்டான்.

"கிளாஸ்மேற்... கனகாலம் - ஒண்டாய்ப்படிச்சவர். இப்ப, இங்கதான் வேலை செய்யிருர்...."

## 13

ஜெயதேவனை முந்தநாளும்- செவ்வாய்க்கிழமை, கலம் பகந் தொடங்கிய பிறகு கந்தோருக்குப் போன இரண்டா வது நாள் - சந்தித்திருந்தான், பஸ்ஹோல்ற்றுக்கு வந்த போது வழமையான கியூவில் கால்வாசிகூட இல்லை.

"இவையள் பாவம் - பயந்து பொட்டுக்கூட வைக் காமல் போகினம்...."- வெறு நெற்றியும் பயக்களை படர்ந்த முகமுமாய் முன்னுல் நின்ற இரு பெண்களையும் காட்டிச் சொன்னுன் ஜெயதேவன். தமிழ்ப் பெண்கள்.

“இண்டைக்கு வேலைக்குப் போகாமல் நிண்டா என்ன குறைஞ்சு போகும்?” என்று கிருஷ்ணன் தொடர்ந்து, “பாவம். என்ன நிர்ப்பந்தமோ?” என்றான்.

“அங்கை பார்த்தீரா?....” - எதிர்ச்சாரியில் ஒரு கடையின் கதவெல்லாம் எரிந்து கிடந்தது.

சனிக்கிழமை மத்தியானம் - ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டவுடன் அலை மோதிய சனத்திரளில் முண்டியடித்து அவனும் அக்கடையில் சாமான் வாங்கியிருந்தான்.

“எப்ப நடந்தது?”

“முந்தநாளாம்!”

“முந்தநாளா?....ஊரடங்குச் சட்டம்?-” ஜெயதேவன் சிரித்தான் - ஆற்றாமையுடன் பயமும் அதில் கலந்திருந்தது.

நேற்றையிலும் பார்க்க இன்று கொஞ்சம் உசாரா யிருந்தது. இனி எல்லாங்குறைந்து விடுமென்பது போல ஒரு உணர்ச்சி. ஜெயதேவனிடம் சொன்னான்.

“உதெல்லாம் சொல்லேலாது-” என்றான், அவன்.

கந்தோருக்குப் போனதும் முதல் வேலையாக அத்த நாயக்காவைத் தேடிப்போனான். வழமையான சிரிப்புடன் வரவேற்றான், அவன். அதைப்பொருட்படுத்தாமல் கிருஷ்ணன் கேட்டான்.

“நேற்றிரவு ரேடியோ கேட்டாயா?”

“ஏன்?”

“யாழ்ப்பாணத்துப் பிக்கு என்ன சொன்னார்?”

அத்தநாயக்கா பிறகும் சிரித்தான்....

‘ஏன் சிரிக்கிறாய் மச்சான்?” கிருஷ்ணனுக்கு எரிச்சல் வந்தது.

அத்தநாயக்கா சிரிக்கும்போது விமல் பெரேரா வந்தான்.

"ஏன் சிரிக்கிருய்?" என்று அவனுங் கேட்டான்.

"நேற்று இராத்திரி ரேடியோப் பேச்சைக் கேட்கவில்லையோ" என்று கிருஷ்ணன் கேட்கிருன்....

நேற்றிரவு அந்த ரேடியோப் பேச்சை - யாழ்ப்பாணத்தில் எந்த ஒரு சிங்கள மகனுக்கும் எந்தவிதமான சிறு பாதிப்புங்கூட ஏற்படவில்லை என்று ஒரு பௌத்தகுரு சிங்கள மக்களுக்கு உறுதியாய்க் கூறி வதந்திகளை நம்பித் தமிழருக்கு ஹிம்சை செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொண்ட அந்தப் பேச்சைக் கேட்டதிலிருந்து அவன் நிம்மதி கொண்டிருந்தான்; வதந்திகள் ஒழிந்து உண்மை வெளிக்குமென, ஆனல் இப்போது? "அதை நம்பச் சொல்கிருயா?"

- அப்படி ஒரு நிம்மதி இருந்துவிட முடியாது என்பது போல் இவர்கள் சிரித்துக் கொண்டிருக்கிருர்கள்....

# 14

ஆறரையாகப் போகுது.... இன்னுங் கோபால் ஆக்களைக் காணல்லை?...." என்ருன் சாம்பன்.

"வந்திருப்பாங்கள்.... இந்தச் சனத்துக்கை எப்பிடிக் கண்டுபிடிக்கிறது...."

"நான் போய் ஒருக்கா தேடிக்கொண்டு வரட்டா?...."

"நீ நில்.... நான் போயிட்டு வாறன்." கிருஷ்ணன் வேணியிடமும் சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

தண்டவாளங்களுக்கு மேலால் மேடைகளைத் தொடுக்கிற பாலத்தில் ஏறினன். பழக்கமான படிகள். கோட்டை அலுவலகத்தில் வேலைசெய்த அந்த மூன்ருண்டு காலமும் - அநேகமாகத் தினசரி சந்தித்து வந்த பாலம், ஒவ்வொரு மாலையும் ரயிலைப் பார்த்திருக்கையில் ஏறி நிற்பது இந்தப்

பாலத்தில்தான். முழு ஸ்ரேஷனுமே பார்வையில் படும் கூட்டமாய் நெளிகிற மனிதர்கள். உலகத்தின் ஒரு முழுமை யான சிறு பின்னம் கீழே இயங்குவதைப் பார்த்திருப்பதில், காத்திருக்கிற அலுப்பே தெரியாது.

நாலாம் மேடைக்கு மேலே, பாலம் இறங்கத் தொடங் குகிற இடம். இரண்டு பக்கங்களிலும் படிகள். வலப்பக்க மூலையில் போய் நின்முன். கிராதி விளிம்பில் கைகளைப் பொறுக்க வைத்து, ஒற்றைக் காலைத் தூக்கிக் கம்பியில் ஊன்றி நின்று பார்த்தபோது, இப்போதும் அந்தக் காலந் திரும்பி விட்டாற்போலிருந்தது. இடையில் இத்தனை இடை வெளியா? ஐந்து வருடம் ஓடிவிட்டது என்பதை நம்பமுடிய வில்லை.

வழுவழுத்த கைப்பிடிப் பலகையில் வெளிப்பக்க மூலையில் அப்போது ஒரு சிறு ஆணி இருந்தது. பார்க்க முடியாது. ஆனல் கைகளுக்குத் தட்டுப்படும். இப்போதும் - இன்னமும் - அது இருந்தது. நீண்ட இடைவெளிக்குப் பின் சந்திக்கிற நண்பனை விசாரிப்பதுபோல அதனை வருடிப் பார்த்தான். அதைக் கடைசித் தடவையாக ஸ்பரிசித்த நாளுக்கும் இன்றைக்குமிடையில் எத்தனை காரியங்கள் நடந்துவிட்டன - கனவுபோல! இந்த ஆணி மட்டும், இந்த அசைகிற உலகில் - அதுவும் விஞடிக்குக் கோடி அசைவுகள் நடக்கிற இந்த ரயில்வே ஸ்ரேசனில் - அந்தப்படியே ஐந்து வருஷம் இருந்திருக்கிறது....

நேரே முன்னுல் - கொஞ்சம் பதிவாக - தொங்கிய ஒலிபரப்பி கரகரக்கவும் அவனுக்குக் கோபாலின் ஞாபகம் வந்தது.

இறங்கிக், கூட்டத்தைப் பிளந்து நடந்தபோது எதிரே ஓரிடத்தில் ஸோமாஸ் நின்றுகொண்டிருந்தார். கூட, பெண் சாதி பிள்ளைகள். கண்டதும், "என்ன கிருஷ்ணன், பயணமா?" என்ருர்.

தலையாட்டியபடியே, "நீங்களுமா?...." என்று கேட்டான்.

அவசரத்தில் சுருக்கமாகப் பேச்சை முடித்துவிட்டு நகர்ந்த போதுதான், 'நீங்களுமா?" என்று கேட்டிருக்கக் கூடாது என்றுபட்டது. ஸோமாஸ், கொஞ்சம் அசாதாரணமான மனிதர், அரசியல் சமூகப் பிரக்ஞைகள் உள்ள மனிதர், தேசிய ஒருமைப்பாடு, ஒற்றுமை என்று பாடுபட்டுக் கொண்டிருந்தவர்....

# 15

திடீரென்று கூட்டத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது.

"ரயில் வருகுது...." என்றான் கோபால்.

"நாங்கள் முதல் ஏறி இடம் பிடிக்கிறம், நீங்கள் பிறகு ஆறுதலாக ஏறலாம்...." என்று கிருஷ்ணன் வேணியிடம் சொன்னான்.

"தள்ளி நில் பிள்ளை....சனம் உன்னைக் குழந்தையோட இடிச்சு விழுத்திப் போடும்...." ஜெயதேவனின் தாய் பேரப் பிள்ளையைத் தூக்கிவைத்திருந்த மருமகளைக் கையில் பிடித்துக் கொண்டாள்.

ரயில் நிற்குமுன்பே தொப்புத் தொப்பென்று ஆட்கள் பாய்ந்தார்கள். இடித்துத் தள்ளிக்கொண்டு நுழைந்தார்கள். கிருஷ்ணனுக்கு முன்னால் இரண்டு ஸீற்றுகள் காலியாகக் கிடந்தன. எதில் குந்தலாம் என்று யோசிப்பதற்கிடையில் ஒரு ஆள் பாய்ந்து முன் ஸீற்றில் இருந்தான். மற்றத்தில் இருக்கப்போன கிருஷ்ணனிடம் அவன் கத்தினான்.

"இவ்வளவும் எங்களுக்கு!" - கைகள் இரண்டு ஸீற்றுகளையும் மறைத்துப் பரந்திருந்தன.

இரண்டு ஸீற்றுகள். ஆறு பேர் இருக்கலாம். கிருஷ்ணனுக்கு ஆத்திரம் பொங்கியது.

''ஆருக்கு?''

''எங்களுக்கு!........ அங்க வருகினம் ஆக்கள் - என்ர ஃபிரன்ட்ஸ்.'' கிருஷ்ணன் ஆளைப் பார்த்தான். இளைஞன். கறுவல். முரட்டுத்தனமாய்த் தெரிந்தான்.

கிருஷ்ணன் கோபாலிடம் சொன்னான்.

''நீ இதில இரு.... நான் போய்ப் பொம்பிளையளைக் கூட்டிக்கொண்டு வாறன்....''

''வேண்டாம்....'' அந்த இளைஞன் கோபாலுவைத் தடுத்தான்.

''இவ்வளவும் எங்களுக்கு!....''

வந்த ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு கிருஷ்ணன் நிதானமாகச் சொன்னான்.

' ஐஸே வழக்கமான நாள் எண்டாலும் பரவாயில்லை. இண்டைக்கு இந்த ரிசர்வேஷன் விளையாட்டு வேண்டாம். அடி வாங்கி ஓடுகிற நாங்கள் எங்களுக்குள்ளை சண்டை பிடியாமல் ஒற்றுமையாகப் போவம்....''

''ஒரு ஸீற்றை எடுத்துக் கொண்டு மற்றதை விடுமன்....?'' கோபால் கேட்டான்.

''ஏலாது.... நாங்களெல்லாரும் ஒண்டாயிருந்து போக இவ்வளவும் வேணும்....'' இருக்கப் போன கோபாலை அவன் தடுத்தான்.

கிருஷ்ணனுக்குக் கண்மண் தெரியாமல் வந்தது. அவன் மேல் பாய்ந்தான் - மறித்த கைகளைத் தட்டிவிட்டு.

''தள்ளி இர்ரு!'' - நசிந்த விரல் தட்டுப்பட்டு லேசாக நொந்தது.

''கிருஷ்ணன், பொறு பொறு....'' என்றான் கோபால்.

அதைக் கவனியாமல் கிருஷ்ணன் சொன்னான்.

''கோபால், நீபோய் அவயளைக் கூட்டிக் கொண்டா....

இரண்டு வரிசை தள்ளியிருந்த இடத்திலிருந்து ஒரு நடுத்தர வயது மனிதர் ஓடிவந்தார். கிருஷ்ணனைப் பார்த்துக் கையைக் கூப்பிக்கொண்டே,

''தம்பி! சண்டை பிடியாதையுங்கோ ராசா.... நாங்கள் நல்லா அனுபவிச்சுப் போட்டு வாறம்.... இனியாவது ஒற்றுமையா, நிம்மதியாப் போவம்....'' என்ருர்.

கிருஷ்ணன் கரைந்து போனுன். அவர் எங்கோ இன்னும் தெற்கிலிருந்து வந்தவர் போலப்பட்டார்.

''மன்னிச்சுக் கொள்ளுங்கோ ஐயா, இனிச் சன்டை பிடிக்கேல்லை....''

## 16

ஏழே முக்காலுக்கு மணி அடித்தது. ''ஒரு படியா வெளிக்கிடப்போகுது....'' என்ருர்கள் யாரோ....

''கதிரமலையானே, பத்திரமாக் கொண்டு போய்ச் சேர்த்துவிடு, அப்பு....'' ஜெயதேவனின் தாய் கைகளை விரித்தாள்.

''கதிரமலையானும் இங்காலதானே இருக்கிருர்.... இனி நல்லூரானே சன்னதியானே எண்டு கும்பிடுங்கோ....'' கோபால் மெல்லச் சொன்னுன். ரயில் கூவியது.

''இனித்தான் இருக்குது, பயணம்....''

—மீண்டும் அந்த அறிந்திராப் புதுக்குரல்.

இவ்வளவு அவதிப்பட்டு வெளிக்கிட்டிருக்கத் தேவையில்லை என்றும் கிருஷ்ணனுக்குப்பட்டது.

''சமர்'' - செப்டம்பர் - '81

## ஈழத்து எழுத்தாளர்கள் படைத்த
## சிறந்த நூல்கள்

**டொமினிக் ஜீவா**

தண்ணீரும் கண்ணீரும்

பாதுகை

சாலையின் திருப்பம்

வாழ்வின் தரிசனங்கள்

**டாக்டர் க. கைலாசபதி-**

இரு மகா கவிகள்

தமிழ் நாவல் இலக்கியம்

சமூக வியலும் இலக்கியமும்

**டாக்டர் கா. சிவத்தம்பி**

Tamil Film as a Medium
of Political Communication

Drama In Ancient Tamil Society

**கே. ஜயதிலக**

மூன்று பாத்திரங்கள்
(சிங்கள நாவல்)

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்.
சென்னை - 600098.

NOWE

